நூலகம்
கோண்டாவில்
பிரதேச சபை

விலை: ரூபா 20

பக்கங்கள் 28

# உதயன்

சுடர் 30 கதிர் 356 வள்ளுவர் ஆண்டு 2046 கார்த்திகை 01, செவ்வாய்க்கிழமை 17.11.2015

வாரத்தின் 4 நாட்களில் அதிகளவு
கோடீஸ்வரர்களை உருவாக்கிய இலங்கையின்
ஒரே ஒரு அதிஷ்ட லாப சீட்டு
மஹஜன சம்பத
நீங்களும் இன்றே வாங்குங்கள்
www.nlb.lk
தேசிய லொத்தர் சபை
NLB அதிர்ஷ்டத்தின் ஒரே பெயர்

# வெள்ள இடரால் திணறுகிறது வடக்கு ஒரு லட்சத்து 268 பேர் பெரும் பாதிப்பு

## 4 ஆயிரத்து 736 குடும்பங்கள் தற்காலிக நலன்புரி நிலையங்களில்

யாழ்ப்பாணம், நவ. 17

விடாது கொட்டித் தீர்த்த கனமழை நேற்றுப் பகல் குறைந்திருந்தது. இருப்பினும் வெள்ளம் வடிந்தோடாமையினால், மக்கள் தற்காலிக நலன்புரி நிலையங்களிலேயே தொடர்ந்தும் இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. வடக்கில் 28 ஆயிரத்து 314 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்து 268 பேர் இந்தக் கனமழையினால் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.



அவர்களில் 4 ஆயிரத்து 736 குடும்பங்களைச் சேர்ந்த 16 ஆயிரத்து 695 பேர் 110 தற்காலிக நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

வங்காள விரிகுடாவில் தோன்றிய தாழமுக்கத்தினால், வடக்கு மாகாணத்தில் கடந்த வியாழக்கிழமையிலிருந்து மழை ஓயாது கொட்டித் தீர்த்துக்கொண்டிருக்கின்றது. கடந்த ஐந்து தினங்களில் 350 மில்லி மீற்றர் வரையில் பக். 24

# புனர்வாழ்வளிக்க இணங்கியது அரசு

## உணவு தவிர்ப்பை கைவிடுவது குறித்து இன்று அறிவிப்பர் அரசியல் கைதிகள்

யாழ்ப்பாணம், நவம்பர் 17

அரசியல் கைதிகளுக்குப் புனர்வாழ்வு வழங்கி விடுதலை செய்வதற்கு இலங்கை அரசு இணக்கம் தெரிவித்துள்ளது. இலங்கை அரசின் இந்த உறுதிமொழியை ஏற்றுக்கொண்டு, மேற்கொண்டு வரும் உணவு தவிர்ப்புப் போராட்டத்தைக் கைவிடுவதா இல்லையா என்பதை இன்று செவ்வாய்க்கிழமை அறிவிப்பதாக அரசியல் கைதிகள் பதிலளித்துள்ளனர்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் நேற்று இடம்பெற்ற உயர்மட்டக் கலந்துரையாடலின் பின்னர், மகசின் சிறைச்சாலைக்குச் சென்று அரசின் உறுதிமொழியை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் அரசியல் கைதிகளுக்குத் தெரிவித்தார். அதன் பின்னரே, அரசியல் கைதிகள் மேற்கண்டவாறு பதில் வழங்கியுள்ளனர்.

கடந்த மாதம் தமிழ் அர பக். 24

## மேலும் 8 கைதிகளுக்கு நேற்றுப் பிணை அனுமதி

யாழ்ப்பாணம், நவ. 17

இரண்டாம் கட்டமாக விடுவிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளில் 8 பேர் நேற்றுக் கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றத்தினால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

முதல் தொகுதி தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட்ட அதே பிணை நிபந்தனைகளின் அடிப்படையிலேயே இந்த 8 பேரும் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளனர்.

தமிழ் அரசியல் கைதிகள் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டதைத் தொடர்ந்து அவர்களது விடுதலைக்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஜனாதிபதி மைத்திரிபால - பிரதமர் ரணில் விக்கிரமசிங்க - தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு பக். 24

## வீட்டுத் திட்டம் தந்திருந்தால் இந்த நிலை வந்திருக்காது

### வெள்ளத்தால் பீதிக்கப்பட்ட உழவனூர், நாதன் திட்டக் கிராம மக்கள் சரவணபவன் எம்.பியிடம் கதறல்



கிளிநொச்சி, நவ. 17

போர் முடிந்த 6 வருடங்களில் நிரந்தர வீடுகள் அமைத்துத் தந்திருந்தால் இப்போது நாங்கள் இப்படி மழை வெள்ளத்துக்கு இடம்பெயர வேண்டி வந்திருக்காது என்று தமது சோகத்தை நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனிடம் கொட்டித் தீர்த்தனர் கிளிநொச்சி, பக். 22

## கடலில் சீரற்ற கால நிலையால் 21,000 மீனவர் பாதிப்பு

யாழ்ப்பாணம், நவ. 17

யாழ். குடாநாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை, கடற்கொந்தளிப்பு, கடும் மழை வெள்ளம் போன்ற இடர்களினால் 21 ஆயிரம் கடற்றொழிலாளர்கள் தொழில் இன்றிப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தொழில் இன்றிப் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ள இந்தக் கடற்றொழில் குடும்பங்களுக்கு உரிய நிவாரணத்தைப் பெற்றுத்தருமாறு மாவட்டக் கடற் றொழிலாளர் பக். 24

## ஞாயிறு இரவு 126 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி

யாழ்ப்பாணம், நவ. 17

யாழ்.மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு 126 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. அத்துடன் கிளிநொச்சி மாவட்டத்தில் 67 மில்லி மீற்றரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 62 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் பதிவாகியுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

யாழ்.மாவட்டத்தில் கடந்த சனிக்கிழமைபகல் 129 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பக். 24

## மது விற்பனையை தடை செய்யத் தயார்

### கூறுகிறார் ஜனாதிபதி மைத்திரி

யாழ்ப்பராணம், நவ.. 17

மதுபான விற்பனையைத் தடை செய்யவும், மதுபான அனுமதிப் பத் திரங்களை நீக்கவும் நான் முழுமையாகத் தயாராக இருக்கிறேன் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நேற்று கேகாலை சென்.ஜோசப் கல்லூரி பக். 24

## அனைவரும் ஏற்கக்கூடிய அரசமைப்பு விரைவில்



சிங்கப்பூர் சிற்றி, நவ.17

அனைத்துச் சமூகங்களும் தீர்மானம் எடுப்பதை உள்ளீர்த்துக்கொள்ளும் வகையில் புதிய அரசியல் சாசனம் உருவாக்கப்படும் என வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித் பக். 24

## யாழ். மாவட்டத்துக்கு வெள்ள இடர் நிதியாக 4.2 மில்லியன் ரூபா

கொழும்பு, நவ. 17


வெள்ள இடரால் பாதிக்கப்பட்டுள்ள யாழ். மாவட்டத்துக்கு 4.2 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சியாக நீடித்துள்ள சீரற்ற காலநிலை காரணமாக யாழ்ப்பாணம், மன்னார், கம்பகா ஆகிய பிரதேசங்கள் கடுமையான பாதிப்புக்குள்ளாகியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் யாழ். மாவட்டத்துக்கு 4.2 மில்லியன் ரூபாவும் மன்னார் மற்றும் கம்பகா ஆகிய மாவட் பக். 24

## ஐ.நா. அலுவலகம் முன்பாக கவனவீர்ப்புப் போராட்டம்

### கைதிகளின் விடுதலைக்காக உறவினர்கள் நேற்று நடத்தினர்




யாழ்ப்பாணம், நவ. 17

அரசியல் கைதிகளை விடுதலை செய்ய ஐ.நா. வலியுறுத்த வேண்டும் எனக்கோரி சிறைச்சாலைகளில் உள்ள அரசியல் கைதிகளின் உறவுகள் நேற்று யாழ்ப்பாணத்தில் உள்ள ஐ.நா. அலுவலகம் முன்பாகக் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்தினர்.

தற்போது நிலவும் சீரற்ற பக். 24

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலருணவு வழங்க ஏற்பாடு

### யாழ். அரச அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ,17

யாழ்.மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் கடும் மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலருணவுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

நேற்று மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் அவர் தெரிவிக்கையில், பக். 24

# வடக்கை மூழ்கடித்த மழை





சாவகச்சேரியில் உடைந்த நிலையில் காணப்படும் வீடு...



உடைந்த நிலையில் வட்டுவாகல் பாலம்...



முல்லைத்தீவில் இருந்து இடம்பெயர்ந்து விஸ்வமடு பாடசாலையில் சமையல் ஆரம்பிக்கும் மக்களின் ஒரு பகுதி....




மன்னாரில் சமையல் பாத்திரங்களுடன் இடம்பெயர்ந்தபோது...



2015 நவம்பர் 17 செவ்வாய்க்கிழமை உதயன்

# யால் நேர்ந்த அவலம்





இடம்பெயர்ந்து
பாடசாலையில்
தஞ்சம் கோரிய
மக்கள்..





நல்லூரில் முழங்காலுக்கு
மேலேறிய வெள்ளம்






வெள்ளம் முட்டிய
அராலி வீதி....









# வடக்கு இயல்பு நிலை முற்றாகப் பாதிப்பு

## கொட்டித் தீர்த்த கன மழையால் பயிர்ச் செய்கைகள் அழிவு

யாழ்ப்பாணம், நவ. 17

தாழமுக்கம் காரணமாக கடந்த சில தினங்கள் கொட்டித் தீர்த்த மழையால் வடக்கின் இயல்பு நிலை முற்றாகப் பாதிப்படைந்துள்ளது. கன மழையால் ஏற்பட்டுள்ள வெள்ளம் காரணமாக பயிர்ச் செய்கைகள் பெருமளவில் அழிந்துள்ளன. அதனால் விவசாயிகள் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் பெரும்பாலான வயல் நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. அதனால் நெற்செய்கை பெரிதும் பாதிக்கப்படக் கூடும் என்று அச்சம் தெரிவிக்கப்படுகின்றது. பெருமழையால் தோட்டங்களும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் மரக்கறிகளின் விலைகளும் கிடு கிடு என்று ஏறுவதை அவதானிக்க முடிகின்றது.

வலி. கிழக்குப் பிரதேசத்திலும் வயல்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. வாழை மரங்கள் குலைகளுடன் முறிந்து விழுந்துள்ளன. நீர்வேலி, கோப்பாய், சிறுப்பிட்டி, நவக்கிரி, புத்தூர், ஊரெழு, உரும்பிராய் போன்ற பகுதிகளில் வாழைத் தோட்டங்கள் பெரும் அழிவைச் சந்தித்துள்ளன. அத்துடன் சிறு செய்கைப் பயிர்களும் முற்றாக அழிவடைந்துள்ளன.

பெரும்பாலான சந்தைகளில் காய்கறிகளின் வரவு குறைந்துள்ளது. விலைகளும் அதிகரித்துள்ளன. யாழ். நகரில்திருநெல்வேலிச் சந்தையில் ஒரு கிலோ பச்சை மிளகாய் ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது. இதனால் கிராமப்புற வர்த்தக நிலையங்களில் பச்சை மிளகாய் கிலோ 1200 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது.

தென்மராட்சிப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு பெய்த பெருமழையால் பல வீதிகள் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது. பிரதேசத்தில் உள்ள அனைத்து வயல் நிலங்களும் தோட்ட நிலங்களும் மழை வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. தோட்டங்களில் காணப்பட்ட பயிர்கள்வெள்ளத்தில்அமிழ்ந்துள்ளது. அதனால் சந்தைகளுக்கு மரக்கறிகள் வருவது குறைவடைந்து விலைகளும் அதிகரித்துள்ளன. நெற்பயிர்கள் வெளியே தெரியாத அளவுக்கு வெள்ளம் காணப்படுவதுடன், இந்த வயல்களில் காணப்பட்ட நிலத்துடனான கிணறுகளும் நீர் நிறைந்து காணப்படுவதால் வயல்களுக்குள் இறங்கவேண்டாம்என்றுஎச்சரிக்கைவிடப்பட்டுள்ளது.

வவுனியாவில் நகரப் பகுதியில் பாதிப்புக்கள் குறைவாகவே காணப்படுகின்றன. ஆயினும் செட்டிக்குளத்தில் 300 முதல் 350 வரையான ஏக்கர் பயிர்ச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவில் பத்து கமநல சேவை நிலையங்களுக்கு உட்பட்ட 15 ஆயிரத்து 415 ஏக்கர் பயிர்ச் செய்கை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

மன்னாரில் விவசாயிகள் போகம் பார்த்து உழவு செய்தமையால் பெரியளவில் பாதிப்புக்கள் ஏற்படவில்லை.

கிளிநொச்சியில் வயல்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. ஆயினும் நேற்று மழை வீழ்ச்சி குறைவாகக் காணப்பட்டதால் வெள்ளம் வடிந்தோடும் சாத்தியம் காணப்படுகின்றது. நெற் பயிர்களுக்கான சேதம் குறைவாகவேகாணப்படும்என்றும் எதிர்பார்க்கின்றோம் என்று கமநல சேவைகள் திணைக்களத் தகவல்கள் தெரிவித்தன.

விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள பயிரழிவுகள் தொடர்பான தரவுகளைத் திரட்டும் நோக்குடனும், விவசாயிகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்குவது தொடர்பாகவும் யாழ். கமநல சேவைகள் திணைக்களத்தால் நாளை விசேட கூட்டம் ஒன்றும் நடத்தப்படவுள்ளது.

(ற - ரி5, ரி3, ரி4, ரி7, 250, 11, 122, 108, 135, 17)

## தொற்று நோய்கள் பரவலாம் எச்சரிக்கையுடன் செயற்படுக

### மக்களை எச்சரிக்கின்றது யாழ்.மாநகர சபை

யாழ்ப்பாணம், நவ. 17

பெய்துவரும் மழையின் காரணமாக பரவலாக வெள்ள நீர் குடிமனைகளுக்குள் புகுந்துள்ளது. வெள்ள நீருடன் மலசல கழிவு கலந்து குடிநீர் கிணறுகள் மாசடைந்துள்ளன. அதனால் நீராலும் உணவாலும் பரவுகின்ற நோய்களான வயிற்றுளைவு, வயிற்றோட்டம், நெருப்புக்காய்ச்சல், செங்கண்மாரி போன்ற நோய்கள் மிக வேகமாகப் பரவலாம் என அஞ்சப்படுகின்றது. – இவ்வாறு தெரிவித்தார் யாழ்.மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி பி.ஜெசிதரன். .

அது தொடர்பில் யாழ். மாநகர சபையினர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது–

பொதுமக்கள் விழிப்புடன் இருக்கவேண்டும். அதற்காகச் சில அடிப்படை சுகாதாரப் பழக்கவழக்கங்களை இறுக்கமாக கடைபபிடிக்க வேண்டும். கொதித்தாறிய தண்ணீரையே குடிக்க வேண்டும். உபயோகிக்கும் நீர்க் கொள்கலன்களுக்கு குளோரின் இட்டுப் பாவிக்க வேண்டும். நன்கு சமைத்த உணவுகளையே உண்ண வேண்டும் .முடியுமானவரை சமைத்த உடனேயே உடனுக்குடன் பரிமாறிக்கொள்ளுதல் வேண்டும்.

சமைத்த உணவுகளை இலையான்கள் மொய்க்காதவாறு மூடி வைத்திருத்தல் வேண்டும். முடியுமானவரை வீட்டு உணவுகளையே உண்ணுதல் சிறந்தது. கடை உணவுகளை தவிர்த்தல் நன்று. சாப்பிட முன்பும், சாப்பாடு பரிமாறும் முன்பும், மலசலகூடம் சென்ற பின்பும் சவர்க்காரம் இட்டு நன்கு கைகளை கழுவுதல் வேண்டும்.

இலையான்கள் பெருகாதவாறு குப்பைகளை உரியமுறையில் அகற்றவேண்டும். இந்தப் பழக்க வழக்கங்களை கடைப்பிடிப்பதன் மூலம் நோய்கள் தொற்றுவதை இலகுவாக தவிர்த்துக் கொள்ள முடியும். அத்துடன் குழந்தைகளுக்கு வயிற்றுளைவு மற்றும் வயிற்றோட்டம் ஏற்பட்டால் இழக்கப்படும் நீரின் அளவை ஈடுசெய்யும் வகையில் வாய் மூலமாக போதியளவு நீராகாரங்கள், ஜீவனி கொடுக்கப்பட வேண்டும்.

உணவு கொடுப்பதை நிறுத்தத் தேவையில்லை. முடியுமாயின் மற்றைய குழந்தைகளிடம் இருந்து தனிமைப்படுத்தி பராமரித்தல் வேண்டும். வைத்திய ஆலோசனையும் சிகிச்சையும் பெற்றுக் கொள்வது நல்லது. – என்றுள்ளது. (ற–10, ரி6)

## காலநிலையால் பாதிக்கப்பட்ட மீனவருக்கு உலர் உணவுகள்

### கிராமிய கடற்றொழில் அமைப்புக்களின் சம்மேளனத் தலைவர் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ.17

சீரற்ற காலநிலை காரணமாக தொழிலுக்குச் செல்லமுடியாது வீடுகளுக்குள் முடங்கிக் கிடக்கும் குடாநாட்டு மீனவர்களுக்கு உலர் உணவு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட கிராமிய கடற்றொழில் அமைப்புக்களின் சம்மேளனத் தலைவர் என். பொன்னம்பலம் யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் ஊடாக யாழ். மாவட்ட அரச அதிபரிடம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

வங்கக் கடலில் ஏற்பட்ட தாழ் அமுக்கம் காரணமாக மீனவர்களின் பாதுகாப்புக் கருதி கடற்றொழிலுக்குச் செல்ல வேண்டாம் என்று கடற்றொழில் அமைச்சு மீனவர்களுக்கு அறிவித்திருந்தது. இதனால் கடந்த சில தினங்களாக குடாநாட்டு மீனவர்கள் தொழிலுக்குச் செல்லாதுள்ளனர். அதனால் அவர்களின் நாளாந்த வருமானத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

அதையடுத்து காலநிலை காரணமாக தொழிலுக்குச் செல்லாத மீனவர்களுக்கு உதவ முன்வந்துள்ள சம்மேளனத் தலைவர் கடற்றொழிலாளர்களுக்கு உலர் உணவு வழங்க வேண்டும்என்றும்திணைக்களத் தலைவர் ஊடாக அரசஅதிபரைக் கோரியுள்ளார். தொழிலால் பாதிக்கப்பட் அனைத்து மீனவர்களும் தங்கள் விவரங் களை யாழ். மாவட்ட கடற்றொழில் திணைக்களத்துக்கு அல்லது சம்மேளனத் தலைவருக்கு தாமதம் இன்றி அனுப்பி வைக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

(ற–115)

## பாதிக்கப்பட்ட, இடம்பெயர்ந்தோர் தங்கியுள்ள பாடசாலைகள் தவிர்ந்த ஏனையவை இயங்கும்

### யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.17

யாழ்.கல்வி வலயத்தில் மக்கள் இடம்பெயர்ந்து தங்கியிருக்கும் பாடசாலைகள், வெள்ளம் உட்புகுந்த பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய பாடசாலைகள் இன்று செவ்வாய்க் கிழமை முதல் வழமை போல் இயங்கும் என்று அறிவித்துள்ளார் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் என்.தெய்வேந்திரராஜா.

இதுகுறித்து அவர் தெரிவித்துள்ளதாவது–

தற்போதுதொடர்ந்துபெய்துவரும் கனமழையால் நேற்று வடக்கு மாகாணப் பாடசாலைகள் இடைநிறுத்தப்பட்டது. இந்தப் பாடசாலைகள் மீள இயங்குவது தொடர்பாக நானும், கோட்டக் கல்விஅதிகாரிகளும் நேரில் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டோம்.

யாழ்.கல்வி வலயத்துக்குட்பட்ட பிரிவில் 6 பாடசாலைகளில் வெள்ளம் உட்புகுந்துள்ளது. 4 பாடசாலைகளில் மக்கள் இடம் பெயர்ந்து தங்கியுள்ளனர். அந்தப் பாடசாலைகள் இன்றும் நாளையும் நடைபெறமாட்டாது.

கந்தர்மடம் சைவப் பிரகாச வித்தியாசாலை, பெரியபுலம் மகா வித்தியாலயம், புத்தூர் பஞ்சசீல வித்தியாலயம், ஆவரங்கால் மகாஜனா, அச்சுவேலி சரஸ்வதி, புத்தூர் மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகியவற்றுக்குள் வெள்ளம் புகுந்துள்ளது.

வாதரவத்தை விக்னேஸ்வரா, நல்லூர் தெற்கு விக்னேஸ்வரா, ஒஸ்மானியா ஆகிய பாடசாலைகளில் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ளனர். இந்தப் பாடசாலைகள் இன்றும், நாளையும் நடைபெறாது. யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ளனர். அதனால் தரம் 6, தரம் 7, தரம் 8 மாணவர்களுக்கு இன்றும் நாளையும் வகுப்புகள் நடைபெறாது. ஏனையோருக்கு இன்றுமுதல் ஆரம்பமாகும்.

யாழ். கல்வி வலயத்தில் உள்ள ஏனையை அனைத்துப்பாடசாலைகளும் இன்று முதல் வழமைபோல் நடைபெறும்.

தொண்டமனாறு வெளிக்கள நிலையத்தால் நடத்தப்படும் க.பொ.த.உயர்தர மாணவர்களுக்கான பரீட்சைகளின் நேர அட்டவணையில் குறிப்பிட்டுள்ளமைக்கு அமைய இன்று செவ்வாய்க் கிழமை நடைபெறவிருக்கும் பாடத்திற்கான பரீட்சையை நடத்துமாறு அதிபர்களுக்கு அறிவுறுத்துகின்றேன். – என்றார். (ற–42)

## வெள்ளப் பாதிப்புகளைக் குறைக்க கடல் நீரேரி தடுப்பணைகள் திறப்பு

அச்சுவேலி, நவ. 17

யாழ்.மாவட்டத்தில் வெள்ளத்தால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைப்பதற்கு குடாக் கடல் நீரேரித் திட்டத் தடுப்பு அணையின் கதவுகள் கடந்த சனிக்கிழமை திறந்துவிடப்பட்டுள்ளன.

தொண்டமானாறு தடுப்பணையில் 4 கதவுகளும், அராலி தடுப்பணையில் 7 கதவுகளும், அரியாலைதடுப்பணையில் 25 கதவுகளும் திறந்துவிடப்பட்டுள்ளன. நீர்மட்டம் மேலும் அதிகரிக்கும் போது பொருத்தமான ஏற்பாடுகளை முன்னெடுப்பதற்கு நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள் முழு நாளும் பணியில் தயாராக உள்ளனர்.


யாழ்.மாவட்டத்தில் கடந்த சில தினங்களுக்கு மேலாகப் பெய்துவரும் தொடர் பெருமழையால் வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளது. மழைநீர் கடலுக்குச் செல்வதைத் தடுத்து நிறுத்தி குடாக்கடல் நீரேரியின் உப்புத் தன்மையைக் குறைக்கும் குடாக்கடல் நீரேரித் திட்டத்தின் கீழ், தடுப்பு அணை நிறுவப்பட்டு கதவுகள் போடப்பட்டுள்ளன. குடாக்கடல் நீரேரி நீர்மட்டம் உயர்ந்து வெள்ளம் வெளியேற முடியாமல் பாதிப்பு ஏற்படும் வேளைகளில் தடுப்பணைக் கதவுகள் திறக்கப்பட்டு வெள்ளநீர் கடலுக்குச் செலுத்தப்படும்.

வெள்ளத்தடுப்புக் கதவுகள் திறக்கப்பட்டது தொடர்பாக குடாக்கடல் நீரேரித்திட்ட பொறியியலாளர் எஸ்.சர்வராசா தெரிவித்ததாவது–

பொதுமக்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையிலும் குடாக்கடல் நீரேரித் திட்டத்துக்குப் பாதிப்பு ஏற்படாத வகையிலும் தடுப்பு அணைக்கதவுகள் பொருத்தமான முறையில் திறந்து விடப்பட்டுள்ளன. மழைவீழ்ச்சியின் அளவு மற்றும் வெள்ள நீர்மட்டஅதிகரிப்பு என்பவற்றைக் கவனத்திற்கொண்டு மேலும் திறக்கப்படும் கதவுகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும். யாழ்.மாவட்ட வெள்ள இடர் முகாமைத்துவம் தொடர்பாக பிரதேச செயலர்கள் மற்றும் அரச அதிபரின் ஆலோசனைக்கு அமைய வெள்ளம் அகற்றல் தொடர்பான திணைக்களத்தின் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. – என்றார். (ற–11)

# பொருளாதாரக் கொள்கை தோற்கடிக்கப்பட வேண்டும்

## அனுரகுமார திஸாநாயக்க தெரிவிப்பு



கொழும்பு, நவ.17
பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் பொருளாதாரக் கொள்கைகளை தோற்கடிக்க வேண்டும் என்று ஜே.வி.பியின் தலைவர் அனுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் மாமனாரான முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தன மற்றும் முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச ஆகியோரால் அறிமுகம் செய்யப்பட்ட முதலாம் இரண்டாம் தலைமுறைப் பொருளாதாரக் கொள்கைளால் நாடு கடன் சுமையில் சிக்கிக் கொண்டது.

ரணில் விக்ரமசிங்கவால் அறிமுகம் செய்யப்பட உள்ள மூன்றாம் தலைமுறைப் பொருளாதாரக் கொள்கைகளைத் தோற்கடிக்க வேண்டும். ரணிலின் பொருளாதாரக் கொள்கைகளால் பல முக்கிய அரச நிறுவனங்கள் தனியாருக்கு விற்பனை செய்யப்படக்கூடிய அபாயம் காணப்படுகின்றது.

கடந்த கால அரசுகளால் பின்பற்றப்பட்ட பொருளாதாரக் கொள்கைகள் நாட்டு மக்களைக் கடன் சுமை யில் சிக்க வைத்தன.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதி வரையிலான காலப் பகுதியில் இலங்கையில் தனிநபர் ஒருவர் 3 லட்சத்து 85 ஆயிரம் ரூபா கடனாளியாகியுள்ளார்.- என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற)

# 20 குறித்த ஆர்வம் குறைந்து விட்டது

## அமைச்சர் சம்பிக்க கவலை



கொழும்பு, நவ.17
20ஆம் திருத்தச் சட்டத்தின் ஊடாக தேர்தல் முறைமையில் மாற்றம் ஏற்படுத்துவது குறித்த ஆர்வம் பூரணமாக குறைந்துள்ளது என்று அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.


20ஆம் திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கடந்த காலங்களில் நாடாளுமன்றில் ஆர்வம் காட்டிய எவரும் தற்போது அதனைக் கண்டு கொள்வதில்லை என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் பொது வேட்பாளராகப் போட்டியிட்ட தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தேர்தல் முறைமையை மாற்றுவதாக உறுதியளித்திருந்தார்.

100 நாள் திட்டத்திலும் தேர்தல் முறைமை மாற்றத்தை நடைமுறைப் படுத்துவதாக உறுதியளிக்கப்பட்டிருந் தது. முதல் சில மாதங்களில் தேர்தல் முறைமை திருத்தம் குறித்து கடுமையாக பேசப்பட்டிருந்தது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும் அதன் பின்னர் அதற்கான ஆர்வம் கிரமமாகக் குறைந்து தற்போது அதுகிடப்பில் போடப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த மாற்றமானது ஜாதிக ஹெல உறுமய போன்ற சிறிய கட்சிகளுக்கு பாதக விளைவுகளை ஏற்படுத்திய போதிலும் நாம் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டியது அவசியமானது எனவும், இது குறித்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் அமைச்சர் கோரிக்கை விடுத்துள்ளார். (ற)

# நல்லாட்சி அரசின் காலத்தில் ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி

## சாடுகின்றார் டியூ.குணசேகர



கொழும்பு, நவ.17
நல்லாட்சி அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதன் பின்னர் ரூபாவின் பெறுமதி 10 ரூபாவால் வீழ்ச்சி அடைந்துள்ளது என்று அமைச்சர் டியூ.குணசேகர தெரிவித்துள்ளார். கம்புறுபிட்டிய பிரதேசத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

கடந்த பதினொரு மாதங்களில் ரூபாவின் பெறுமதி 10 ரூபாவினால் வீழ்ச்சியடைந்துள்ளது. நல்லாட்சி அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டபோது ஒரு அமெரிக்க டொலரின் பெறுமதி 132 ரூபாவாகும், தற்போது ஒரு டொலரின் பெறுமதி 143 ரூபாவாகும். எனவே இந்த பதினொரு மாத காலப்பகுதியில் ரூபாவின் பெறுமதி பெரியளவில் வீழ்ச்சியடைந் துள்ளது.

அந்நிய செலாவணி ஒதுக்கம் மூன்று மாத காலப்பகுதி அளவுக்கே காணப்படுகின்றது. 77ஆம் ஆண்டு சிறிமாவோ பண்டாரநாயக்க ஜே.ஆர். ஜயவர்தனவிடம் நாட்டை ஒப்படைக்கும் போது நாட்டின் உற்பத்தி வருமானம் மொத்த தேசிய உற்பத்தியில் 24 வீதமாகக் காணப்பட்டது. இன்று அந்தத் தொகை 10 வீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

நாட்டின் வருமானத்தில் 95 வீதமானவை கடன் செலுத்துகைகளுக்காக செலவிடப்படுகின்றன. இதனால் நாட்டின் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள போதியளவு பணம் கிடைக்காமல் வெளிநாட்டு கடன்களில் தங்கியிருக்க நேரிட்டுள்ளது. - என்று தெரிவித்துள்ளார். (ற)

# கைதிகள் விடுவிப்பை விமர்சிக்க அமைச்சர்களுக்குத் தகுதியில்லை

## அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவிப்பு

கொழும்பு, நவ.17
நாட்டுக்கு அச்சுறுத்தலாக இருந்த தமிழீழ விடுதலைப் புலித் தலைவர்களுக்கு அமைச்சுப் பதவிகளை வழங்கி அவர்களுடன் ஒன்றாக அமைச்சரவையில் அங்கம் வகித்த கடந்த அரசின் பங்காளிகள் சிலர், தற்போது தமிழ் அரசியல் கைதிகள் சட்டரீதியாக விடுவிக்கப்படுவது குறித்து விமர்சிப்பது வேடிக்கையாக உள்ளது என்று அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.



தமிழ் அரசியல் கைதிகள் குறித்து ஊடகமொன்றுக்குக் கருத்துத் தெரிவித்த அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிச் சந்தேக நபர்கள் சட்ட ரீதியான அடிப்படையில் விடுதலையாவதை எதிர்க்கப் குறிப்பிட்ட அரசியல்வாதிகளுக்கு எவ்வித தகுதியும் கிடையாது என்று தெரிவித்த அமைச்சர், அவ்வாறான அரசி யல்வாதிகளே நாட்டில் இனவாதத்தைத் தூண்டுகின்றனர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

சாதாரண தமிழ் மக்களுக்கு நியாயம் வழங்கப்படுவதை எதிர்க்கும் இவ்வாறான நபர்களைத் தண்டித்தால் மட்டுமே நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.


புலிகளின் முக்கிய உறுப்பினர்களுடன் ஒன்றாக உறவாடிய சில அரசியல்வாதிகள் தற்போது இவ்வாறு எதிர்ப்பை வெளியிடுவது ஏன் என்றும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார். (ற)

# சோபித தேரரின் மறைவால் தலைமைத்துவத்தில் சிக்கல்!

கொழும்பு, நவ.17
நல்லாட்சிக்கான செயற்பாடுகளை முன்னெடுத்துவரும் சிவில் சமூகக் கூட்டமைப்பின் தலைமைத்துவப் பதவி தொடர்பாக தற்போது நெருக்கடி நிலையொன்று ஏற்பட்டுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

மறைந்த மாதுளுவாவே சோபித தேரர், நீதியான சமூகமொன்றுக்கான இயக்கம் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளின் ஊடாக மகிந்த அரசுக்கெதிரான பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்திருந்தார்.

அதன் காரணமாக நல்லாட்சிக்



கான மக்கள் செயற்பாடுகள் மற்றும் சிவில் சமூக கூட்டமைப்பின் தலைமைத்துவம் அவருக்கு ஏகமனதாக வழங்கப்பட்டிருந்தது.

எனினும் அவரது மறைவின் பின்னர் குறித்த தலைமைத்துவப் பதவி தொடர்பில் தற்போது நெருக்கடி நிலையொன்று தோன்றியுள்ளது. பல்வேறுதரப்பினரும் தலைமைப் பதவி மீது கொண்டுள்ள ஆசையே அதற்கான காரணமாகும்.

எனினும் தற்போதைய நிலையில் சிவில் சமூக கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் கலாநிதி நிர்மால் ரஞ்சித் தேவசிறி இந்தப் பதவிக்கு நியமிக்கப்படக் கூடிய சாத்தியம் அதிகமாகவுள்ளது.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் அரசியல் விரிவுரையாளரான இவர், நல்லாட்சிக்கான செயற்பாடுகளில் சோபித தேரர் போன்று முன்னின்று உழைத்து வருகின்றார். (ற)

# நல்லாட்சி அரசினுடைய அடையாளமும் இல்லை

**அமைச்சர் நிமல் கூறுகின்றார்**

நல்லாட்சி அரசின் அடையாளம் கூட மீதமில்லை என்று போக்குவரத்து அமைச் சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார். பதுளை எல்ல பிரதேசத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். நல்லாட்சி அரசு என்ற பெயரில் மக்கள் ஏமாற்றப்பட்டுள்ளனர் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

தனி அரசு ஒன்றை நிறுவுவதற்கான பணிகளை ஆதரவாளர்கள் தற்போது முதலே ஆரம்பிக்க வேண்டும் எனவும் நிமல் சிறிபால டி சில்வா மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை, நல்லாட்சி என்பது தற்போது பிரதமர் அலுவலகத்துக்கு மட்டும் மட்டுப் படுத்தப்பட்டுள்ளது என்றும், ஜனாதிபதி செயலகத்தில் தற்போது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சி உள்ளது என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் மாத்தளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹினி விஜேரத்ன தெரிவித்துள்ளார். (ற)

# சு.க. உறுப்பினர்கள் அனைவரும் மைத்திரியை வெறுக்கின்றனர்!

## இப்படிக் கூறுகின்றார் விதுர விக்கிரமநாயக்க



கொழும்பு, நவ.17
சுதந்திரக் கட்சியின் அனைத்து உறுப்பினர்களும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை வெறுக்கின்றனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் விதுர விக்கிரம நாயக்க தெரிவித்துள்ளார்.

ஹொரணையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

சுதந்திரக்கட்சிக்காரர்களால் ஒட்டுமொத்தமாக வெறுக்கப்படும் மைத்திரிபால சிறிசேனவால் ஒரு போதும் கட்சிக்கு வெற்றியைத் தேடித்தரமுடியாது. அவர் தலைமை தாங்கி கட்சியை வழிநடத்தினால் எதிர் வரும் தேர்தல்களில் கட்சியின் சார்பில் போட்டியிட வேட்பாளர்களைத் தேடுவதும் சிரமமான விடயமாகிவிடும்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போதும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமை தாங்கியதன் காரணமாகவே சுதந்திரக் கட்சி 95 நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பெற்றது.

மைத்திரி தலைமை தாங்கியிருந்தால் 35 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கூடப் பெற்றிருக்க முடியாது போயிருக்கும். - என்றார். (ற)



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** யாரிடமும் உதவி கேட்க வேண்டாம். தொழில், வியாபார நடைமுறையில் தொந்தரவு வரலாம். செலவில் அத்தியாவசியத் தேவைக்கு மட்டும் முன்னுரிமை கொடுங்கள்.

**இடபம்:** சமயோசிதமாகச் செயற்படுவது நன்மை பெற உதவும். தொழில், வியாபாரத்தில் முன்னேற்றம் பெற போராட வேண்டி வரும். எதிர்பார்த்த பணவரவு கிடைப்பதில் தாமதம் ஏற்படலாம்.

**மிதுனம்:** புதிய அனுபவம் ஒன்றைப் பெறுவீர்கள். உதவி பெற்றவர் உங்களையே உதாசீனம் செய்வர். தொழில், வியாபாரத்தில் கூடுதல் பணவரவு கிடைக்கும். பெண்கள் நகை வாங்குவர்.

**கடகம்:** அவமதித்தவர்கள் கூட அன்புடன் நடந்து கொள்வர். தொழில், வியாபாரத்தில் தாராள பணவரவு கிடைக்கும். பெண்களு் புத்தாடை, நகை வாங்க யோகம் உண்டு. நல்லவர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**சிங்கம்:** சிலர் சொல்லும் அறிவுரை சங்கடம் தரும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி விற்பனை சுமாராக இருக்கும். பணவரவு அவ்வளவாக இராது. அரசியல்வாதிகள் நண்பர்களிடம் இதமாக நடப்பது நல்லது.

**கன்னி:** முக்கிய பணி ஒன்று நிறைவேறத் தாமதமாகும். தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் இருக்கும். கொடுக்கல், வாங்கலில் சிக்கல் வரலாம். உடல் நலத்துக்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படலாம்.

**துலாம்:** நீண்ட நாள் எதிர்பார்த்த தகவல் வியக்கும் வகையில் வரும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனையின் அளவு திருப்திகரமாகும். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள்.


**விருச்சிகம்:** மனதில் சஞ்சலம் தோன்றி சிரமம் தரலாம். தொழில், வியாபாரத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். எதிர்பார்த்த பணம் ஓரளவு கிடைக்கும். பொருள்கள் இரவல் கொடுக்க, வாங்க வேண்டாம்.

**தனுசு:** செயலில் சாமர்த்தியம் நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட பணிகள் நிறைவேறும். பணம் சேமிப்பீர்கள். காணாமற் தேடிய பொருள் கைவந்து சேரும்.

**மகரம்:** இடையூறு செய்பவரை அறிந்து கொள்ள வாய்ப்பு வரும். தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் இருக்கும். கூடுதல் முயற்சியினால் மீதிப்பணம் கிடைக்கும். வீட்டு உபயோகப் பொருள் வாங்குவீர்கள்.

**கும்பம்:** மனதில் உற்சாகமும், செயலில் புதிய பரிமளிப்பும் உருவாகும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி ஏற்படும். மீதிப் பணம் இனிய அணுகு முறையால் எளிதில் கிடைக்கும். விரும்பிய உணவு உண்டு மகிழ்வீர்கள்.

**மீனம்:** தொடங்கும் பணி தங்கு தடையின்றி நிறைவேறும். தொழில், வியாபாரம் வியப்பூட்டும் வகையில் வளர்ச்சி பெறும். உபரி பணவரவைச் சேமிப்பாக மாற்றுவீர்கள். உறவினர்களின் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.



## நத்தாரில் ‘ஜில் ஜங் ஜக்’

தற்போது அரண்மனை இரண்டாம் பாகத்தில் நடித்து வரும் நடிகர் சித்தார்த், சத்தமில்லாமல் ஒரு படத்தைத் தயாரித்ததுடன், அந்தப்படத்தில் கதாநாயகனாகவும் நடித்தும் வருகிறார். முழு நீள நகைச்சுவை கலந்த அதிரடிப்படமாக உருவாகிவரும் ‘ஜில் ஜங் ஜக்’ எதிர்வரும் நத்தார் தினத்துக்கு வெளிவரவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. ‘ஜில் ஜங் ஜக்’ என்று காதலன் படத்தில் வடிவேலு பேசிய ஒரு வசனத்தை தலைப்பாகக் கொண்டு உருவாகியுள்ள இந்தப் படத்தை அறிமுக இயக்குநரான தீரஜ் வைத்தி இயக்கியுள்ளார். விஷால் சந்திரசேகரின் இசையமைப்பில் உருவாகிவரும் படத்தின் வேலைகள் தற்போது நிறைவுக்கட்டத்தை எட்டியுள்ளன. சித்தார்த் கதாநாயகனாக நடித்துச் சொந்தமாகத் தயாரிக்கும் இரண்டாவது படமாகும் இது. முன்னதாக காதலில் சொதப்புவது படத்தை தயாரித்திருந்தார். கதாநாயகியே இல்லாமல் உருவாகி வரும் ‘ஜில் ஜங் ஜக்’ திரைப்படத்தில் ராதாரவியும் நாசரும் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர். முன்னதாக இந்தப் படத்தின் முன்னோட்ட புகைப்படங்கள் டுவிட்டர் தளத்தில் வெளியிடப்பட்டன. இதனைத் தொடர்ந்து சிவகார்த்திகேயன், ஹன்சிகா இருவரும் இணைந்து டுவிட்டர் தளத்தில் இந்தப் படத்தின் முன்னேட்டக் காட்சியை வெளியிட்டார்கள். அதற்கு சமூக வலைத்தளத்தில் பெரும் வரவேற்பு கிடைத்தது. இந்த நிலையில் நத்தார் பண்டிகைக்குப் படத்தை வெளியிடவுள்ளதாக சித்தார்த் தனது டுவிட்டர் பக்கத்தில் அறிவித்துள்ளார். மணிரத்தினத்திடம் உதவி இயக்குநராக இருந்து சங்கர் இயக்கிய ‘பாய்ஸ்’ படம் மூலம் கதாநாயகனாக அறிமுகமானவர் சித்தார்த். தமிழ் மட்டுமன்றி தெலுங்கிலும் பல வெற்றிப்படங்களில் நடித்துள்ளார். தமிழில் ஆரம்பத்தில் பல தொடர் வெற்றிகளைச் சந்தித்த சித்தார்த் நடிப்பில் கடைசியாக வெளியான காவியத்தலைவன், எனக்குள் ஒருவன் ஆகிய இரண்டு படங்கள் நன்றாக ஓடவில்லை. எனவே ‘ஜில் ஜங் ஜக்’ எப்படியாவது வெற்றியடைந்தாக வேண்டும் என்ற முனைப்பில் தீவிரமாக ஈடுபட்டுள்ளாராம் சித்தார்த்.




## பேஸ் புக்கில் பிடித்தவை...







## ஆண்களுக்கு புன்னகையையும் பெண்களுக்கு புரிதலும்

**ஆண் என்பவன்...**

கடவுளின் உன்னதமான படைப்பு.

சகோதரிகளுக்காக, இனிப்புகளைத் தியாகம் செய்பவன்.

பெற்றோர்களின் ஆனந்தத்துக்காக, தனது கனவுகளைத் தியாகம் செய்பவன்.

காதலிக்குப் பரிசளிக்க, தனது பர்ஸை காலி செய்பவன்.

மனைவி குழந்தைகளுக்காக, தனது இளமையை அடகுவைத்து அலட்டிக்கொள்ளாமல் அயராது உழைப்பவன்.

எதிர்காலத்தைக் கடன் வாங்கி கட்டமைத்து விட்டு, அதனை அடைக்க வாழ்க்கை முழுதும் 'லோ லோ' என்று அலைபவன்.

இந்தப் போராட்டங்களுக்கு இடையில், மனைவி, தாய், முதலாளிகளின் திட்டுக்களை வாங்கி, தாங்கிக்கொண்டே ஓடுபவன்.

அடுத்தவர்களின் ஆனந்தததுக்காகவே ஆயுள் முழுக்க அர்ப்பணிப்பவன். அவன் வெளியில் சுற்றினால், 'உதவாக்கரை' என்போம். வீட்டிலேயே இருந்தால், 'சோம்பேறி' என்போம்.

குழந்தைகளைக் கண்டித்தால், 'கோபக்காரன்' என்போம், கண்டிக்கவில்லை எனில், ‘பொறுப்பற்றவன்’ என்போம்.

மனைவியை வேலைக்கு செல்ல, அனுமதிக்காவிடில் ‘நம்பிக்கையற்றவன்’ என்போம், அனுமதித்தால் 'பொண்டாட்டி சம்பாத்தியத்தில் பிழைப்பு நடத்துபவன்' என்போம்.

தாய் சொல்வதைக் கேட்டால், 'அம்மா பையன்' என்போம்; மனைவி சொல்வதைக் கேட்டால், ‘பொண்டாட்டி தாசன்' என்போம். ஆண்களின் உலகம், தியாகங்களாலும் வியர்வையாலும் ஆனது.

இதனைப் பகிர்ந்து, ஆண்களுக்குப் புன்னகையையும் பெண்களுக்கு புரிதலையும், ஏற்படுத்தலாம்...

இந்த அம்மாவுக்கு இருக்கிற அறிவுக்கும், திறமைக்கும்.



# தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை; அசமந்தப் போக்கில் சிறிசேன அரசு

எருவில்,நவ.17
தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் மைத்திரிபால சிறிசேன தலைமையிலான நல்லாட்சிக்கான அரசு அசமந்தப் போக்கைக் கடைப்பிடிக்குமாக இருந்தால் அந்த அரசுக்கு எதிராக எதிர்காலத்தில் குரல் கொடுக்க வேண்டி வரும் என அம்பாறை மாவட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அ.கோடீஸ்வரன் தெரிவித்துள்ளார். தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள அவர் மேலும் தெரிவிக்கும் போது:-
ஒட்டுமொத்தத் தமிழ் மக்களினதும் ஏகப் பிரதிநிதியாகத் த.தே.கூட்டமைப்பு இருப்பதனால் எமது மக்களுக்காக வேண்டி எந்த நேரத்திலும் குரல் கொடுக்கவேண்டிய தார்மீகக் கடமையும், பொறுப்பும் ஒவ்வொரு மக்கள் பிரதிநிதிகளிடமும் இருக்கின்றது என்பதனை இந்த அரசு புரிந்து கொள்ள வேண்டும். சாதாரணமான விடயமாகப் பார்க்கப்படும் தமிழ் அரசியல் கைதிகளின் விடயத்தில் அக்கறையின்றிச் செயற்படும் மைத்திரிபால தலைமையிலான அரசு, சர்வதேச நாடுகள் பல ஒன்றிணைந்து ஐக்கிய நாடுகள் சபையில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை எவ்வாறு நடை முறைப்படுத்தப் போகின்றது என்பது கேள்விக் குறியான தொன்றாகவே உள்ளது. அவ்வாறு தமிழர்களது விடயத்தில் எதிர்காலத்தில் இந்த அரசு சரியான தீர்மானங்களை எடுக்கத் தவறும் பட்சத்தில் த.தே. கூட்டமைப்பு தமிழ் மக்களின் நலன் கருதி சில தீர்க்கமான முடிவுகளை எடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## செய்முறைப் பரீட்சை

யாழ்ப்பாணம்,நவ,17
பரீட்சைத் திணைக்களத்தால் நடத்தப்படும் பொறியியல் தொழில்நுட்பவியல் பாட செய்முறைப் பரீட்சை யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில் நடைபெற்று வருகின்றது.
இந்தப் பரீட்சை எது விதமாற்றமுமின்றி நாளை புதன்கிழமை வரை தொடர்ந்து நடைபெறும் எனவும், மாண வர்கள் அனைவரையும் பரீட் சைக் கும் சமூகமளிக்குமாறும் வடமாகாணக் கல்விப்பணிப்பாளர் செ.உதயகுமார் அறிவித்துள்ளார்.
(ஐ-ரி6)

## தென்பகுதி மாணவர் நாடளுமன்றக் குழு தென்மராட்சி பாடசாலைகளுக்கு வருகை

சாவகச்சேரி,நவ.17
மாத்தளை கல்வி வலயப் பாடசாலைகளின்மாணவர்நாடளுமன்ற அமைச்சரவைப் பிரதிநிதிகள் 100 பேர் அடங்கிய குழு ஒன்று கடந்த 11 ஆம் திகதி தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் செயற்பாடுகளைப்பார்வையிட்டதுடன்,தென்மராட்சி கல்வி வலயப் பாட சாலைகளின் மாணவர் நாடளுமன்ற அமைச்சரவைப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடலையும் நடத்தினர். மத்திய கல்வி அமைச்சின் 'இரு நகர நண்பர்கள்' செயற்றிட்டத்தின் அடிப்படையில், மாத்தளை கல்வி வலயப் பாடசாலைகளின் மாணவர் நாடளுமன்றங்களிலிருந்து தலா 10 அமைச்சர்கள் வீதம் 100 மாணவர்களும் மத்திய கல்வி அமைச்சின் செயற் றிட்டத்துக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் வீ.ஏ. டபிள்யு .ஆர். பத்மகாந்த தலை மையில் மாத்தளை கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் எம். வை.திஸாநாயக்கா உட்பட 17 கல்வி அதிகாரிகளும் கலந்து கொண்டனர். இந்தக் குழு கச்சாய் அ.த.க.பாடசாலைக்குச் சென்று அங்குள்ள மாணவர் நாடளுமன்ற அமைச்சரவைப் பிரதிநிதிகளைச் சந்தித்து அங்கு காணப்படும் தேவைகள் தொடர்பாக கேட்டறிந்தனர். பின்னர் மட்டுவில் சந்திரபுரஸ்கந்தவரோதய மகா வித்தியாலயத்தில் தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் மாணவர் நாடளுமன்ற அமைச்சரவைப் பிரதிநிதிகளுடன் சந்தித்துக் கலந்துரையாடல்களை நடத்தினர். தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில்வடமாகாணசபைஉறுப்பினர் கேசவன் சயந்தன், வேள்ட் வின் நிறுவன சாவகச்சேரி பிரதேச அபிவிருத்தி திட்ட முகாமையாளர் அ.கி.றொசைறோ பாடசாலைகளின் அதிபர்கள், வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் உட்பட பலர் பார்வையாளர்களாகக் கலந்து கொண்டனர். கலந்துரையாடலில் கலந்துகொண்ட மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (ஐ-9)

## 3500 கிலோ ஹெரோயின் இலங்கைக்குள் கடத்தல்

கொழும்பு,நவ.17
கடத்தல்காரர்கள் மூலம் வருடாந்தம் மூவாயிரத்து 500 கிலோ கிராம்ஹெரோயின்இலங்கைக்குள் எடுத்துவரப்படுவதாக புலனாய்வுப் பிரிவுகளால் மேற்கொள்ளப்பட்டுள்ள ஆய்வொன்றிலிருந்து தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் சுமார் ஆயிரம் கிலோகிராம் வரை நாடு முழுவதிலும் புழக்கத்தில் உள்ளது. அத்துடன் ஏனைய நாடுகளுக்கு விநியோகிக்கும் சர்வதேச மையமொன்றாக, இலங்கை பயன்படுத்தப்பட்டு வருவதாகவும், அந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை முடக்கிவிடுவது தொடர்பாக ஆபிரிக்க நாடுகள் போன்றே 52 வரையிலான வெளிநாடுகளின் ஒத்துழைப்பைப் பெற்று, போதைப்பொருள் தடுப்பு துரிதகதிச்செயற்றிட்டமொன்றைக் கட்டமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக கடற்படைத் தளபதியான வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன தெரிவித்துள்ளார். இது தொடர்பாக ஐக்கிய நாடுகள் அமைப்பின் ஒத்துழைப்புடன் சர்வதேச போதைப்பொருள் தடுப்பு மாநாட்டை இலங்கையில் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. அத்துடன் நாட்டுக்கு நாடு போதைப்பொருள்கள் விநியோகிக்கப்படுவதைத் தடுப்பது தொடர்பாக கடற்படையுடன் இணைந்ததாக கடலோரப் பாதுகாப்பை அதிகரிப் பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலும், கடந்த சிலமாத காலத் துக் குள் மீன்பிடிப் படகுகள் மூலமாக பரிமாறிக் கொள்ளப்பட்டு, நாட் டுக்குள் எடுத்து வரப்பட்டிருந்த ஹெரோயின் போதைப் பொருள்கள் கைப்பற்றப்பட்டமை போன்றே பெருமளவிலான கேரளா கஞ்சாக் கடத்தல்காரர்களைக் கைது செய்வதற்கு கடற்படையினர் நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகவும் கடற் படைத் தளபதி மேலும் தெரிவித்துள்ளார்.
(ஐ-22)

## விபத்தில் மாணவி காயம்

பெருமழைபெய்துகொண்டிருந்த வேளையில் பஸ்ஸிலிருந்து இறங்கி நடந்து, ஏ-9வீதியில் தனியார் கல்வி நிலையத்துக்கு சென்ற மாணவியை வேகமாக வந்த வாகனம் மோதிவிட்டு தப்பியோடியது. இந்தச் சம்பவம் கடந்த 14 ஆம் திகதி மீசாலையில் இடம் பெற்றது. காயமடைந்து மூர்ச்சையற்ற நிலையில் வீதியில் காணப்பட்ட மாணவியை அந்த வழியே வாகனத்தில் வந்தவர்கள் ஏற்றி வந்து சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர். இவருக்கு வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை வழங்கிய பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (ஐ-9)

## பாம்பினால் கடியுண்டனர் இருவர்

வயல் வரம்புகளில் காணப்பட்ட நான்கு பாம்புகளை அடித்துத் தூக்கி வீசிவிட்டு நடந்து சென்றவர் ஐந்தாவது பாம்பிடம் கடியுண்டார். இந்தச் சம்பவம் கடந்த 11 ஆம் திகதி சாவகச்சேரி தனங்களப்பு நெல் வயல் பகுதியில் இடம்பெற்றது. காலையில் வயல் பார்க்கச் சென்ற வேளையில் வரம்புகளில் படுத்திருந்த நான்கு விஷப் பாம் புகளை தடியினால் அடித்துத் தூக்கி வீசிவிட்டுச் சென்ற வேளையில், வயல் வரம்பு மூலையில் திரும்பும் போது அங்கு மறைந்திருந்த இன்னொரு விஷப்பாம்பு அவரைத் தீண் டியுள்ளது. பாம்பு கடித்ததும் அங் கிருந்து சுமார் ஒரு கிலோ மீற்றர் வரையும் நடந்து வீட்டுக்கு வந்தவரை, சாவகச்சேரி வைத்தியசாலைக்கு கொண்டு வந்து சேர்த்தனர். வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் வைத்தியர்கள் தாதியர்களால் சிகிச்சையளிக்கப் பட்டபின்னர் விடுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அவரை விடுதிக்கு அனுப்பிய சிறிது நேரத்தில் மேலும் ஒருவர்பாம்புகடித்ததுஎனக்கொண்டு வரப்பட்டார். இவர் வெயில் காலத்தில் கினியா மரக் கிளைகளை வெட்டிக் கட்டிவைத்துவிட்டு, மழைபெய்த பின்னர் கட்டாகத் தூக்கி வந்த வேளையில் கட்டுக்குள் மறைந்திருந்தபாம்புதோளில்கடித்துள்ளது. கடித்த பாம்பையும் வைத்தியசாலைக்கு கொண்டு வந்ததால் உடனடியாகச் சிகிச்சையளிக்கப்பட்டு இரவு விடுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (ஐ-9)

## வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் ஆயுள் காப்புறுதி அதிகரிக்கப்படும்

கொழும்பு,நவ.17
வெளிநாட்டு வேலைவாய்ப்புக்குச் செல்வோருக்கு இலவசமாகக் கிடைக்கும் ஆயுள் காப்புறுதியில் மேலும் இரண்டு இலட்சம் ரூபாவை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள் அமைச்சர் திருமதி தலதா அதுகோரல தெரிவித்துள்ளார்.
இதற்கமைவாக இதுவரை மூன்று இலட்சம் ரூபாவாக இருந்த இந்த ஆயுள் காப்புறுதி 2016 ஆம் ஆண்டில் இருந்து ஐந்து லட்சம் ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது.
கடந்த 2014 ஆம் ஆண்டில் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பெற்றுச் சென்று பணியாற்றிய போது, சாவடைந்தவர்களின் உறவினர்கள் மற்றும் ஊனமுற்றவர்களுக்கான நஷ்ட ஈடுகள் கடந்த மூன்றாம் திகதி வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள் செயற்பாட்டுப் பிரிவில் வைத்து வழங்கப்பட்டன. இதன் போது கருத்துத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கும் போது, விசேட சந்தர்ப்பங்களில் மாத்திரமே ஊழியர் நலனோம்பு நிதியிலிருந்து நஷ்ட ஈடுகள் வழங்கப்படுகின்றன.
வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களுக்குச் செல்லும் போது மேற்படி செயற்பாட்டுப் பிரிவில் பதிவு செய்வது கட்டாயமானது எனவும் குறிப்பிட்டுள்ளார்.
(ஐ-22)

## வடமராட்சி உச்சிலம்மன் ஆலயத்தில் உண்டியல், அர்ச்சனைப் பணம் திருட்டு

யாழ்ப்பாணம்,நவ.17
வடமராட்சி உச்சிலம்மன் ஆலயத்துக்குள் இரவு புகுந்த திருடர்கள் உண்டியலில் இருந்த பணத்தையும், அர்ச்சனைப் பணத்தை யும் திருடிச் சென்றுள்ளதாக நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப் பட்டுள்ளது. இந்தச் சம்பவம் கடந்த 13 ஆம் திகதி இரவு இடம் பெற்றுள்ளதாகவும், இது தொடர்பில் விசாரணைகள் முன் னெடுக்கப்பட்டு வருவதாகவும் நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
இந்தச் சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது:
வடமராட்சி உச்சிலம்மன் கோயி லின் யன்னல் கம்பியை வளைத்து உள் நுழைந்த திருடர்கள், உண்டியல் பணம் மற்றும் அர்ச்சனைப் பணத்தைத் திருடிச் சென்றுள்ளனர். ஆலயத்துக்குள் உள் நுழைந்தவர்கள் ஆலயத்தின் விக்கிரகம் வைக்கும் அறைகள் மற்றும் ஆலயக் கருவறைகள் என்பவற்றில் தேடுதல் நடத்திய நிலையில் நகைகள் எதுவும் கிடைக்காததால் அங்கிருந்த உண்டியல் பணம் மற்றும் அர்ச்சனைப் பணம் என்பவற்றைத் திருடிச் சென்றுள்ளனர்.
கடந்த இரு வருடத்துக்கு முன்னர் இதே பாணியில் உள்நுழைந்த திரு டர்கள் ஆலயத்தில் இருந்த 70 பவுணுக்கும் அதிகமான நகைகளைத் திருடிச் சென் றுள்ளனர். ஆலயத்தின் விக்கிரகங்களில் போடப்பட்டிருந்த பெறுமதியான நகைகள் திருடப் பட்டிருந்ததாக நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பில் பொலிஸாரும் விசாரணை நடத்தி வந்தனர். இந்த நிலையிலே நேற்று முந்தினமும் இதேபாணியில் புகுந்தவர்கள் பணத்தைக்கொள்ளையிட்டுச் சென்றுள்ளதாகப் பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடு பதிவு செய்யப்பட்டிருப்ப தாகவும், இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப் பட்டு வருவதாகவும் நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர்.
(ஐ-109)


அருள் ஒளி தர்சன மாலையும் கார்த்திகை மாத விசேட பூஜையும்





இடம் : இளம் கலைஞர் மண்டபம்
சட்டநாதர் வீதி நல்லூர்.
காலம் : 22.11.2015.
ஞாயிற்றுக்கிழமை பகல் 11.00 மணி

[illegible] காத்தருள மனோன்மணி அம்மாளாக அவதாரமெடுத்து டென்மார்க் பிரண்டாபதியில் வீற்றிருந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ அபிராமி அன்னையின் அருள் ஒளி தர்சன மாலையும் கார்திகை மாத சிறப்புப் பூஜையும் இடம்பெற ஸ்ரீ அபிராமி அம்பாளின் திருவருளும் ஸ்ரீ அபிராமி உபாசகியின் ஆசிகளும் கைகூடியுள்ளன.


ஏற்கனவே டென்மார்க்கிலிருந்து எடுத்துவரப்பட்ட அம்பாளின் திருவடிக்குப் பால் அபிசேக பூஜை சிறப்பாக இடம்பெறும். பால் அபிசேகம் செய்து தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றிக்கொள்ள விரும்புபவர்கள் மண்டபத்திலே பாலினைப்பெற்று வழங்கி அம்பாளின் திருவருளை பெற்றுய்யும்வண்ணம் வேண்டுகின்றோம்.

அபிராமி அம்பாள் தொடர்பிலான சிறப்பு நிகழ்ச்சி ஞாயிற்றுகிழமைகளில் இரவு 7.15 தொடக்கம் 7.45 வரை யாழ் சேவையில்(90.1 FM) இடம்பெறும்.

யாழ் தொடர்புகளுக்கு 077 9825004
ஆலய தொடர்புகளுக்கு 0045 97180192

# தேநீரில் இனிமேல் சீனி சேர்க்கக் கூடாது

## புதிய சட்டம் அறிமுகம்



கொழும்பு.நவ.17
இலங்கையின் மிகமுக்கியமான சுகாதாரப் பிரச்சினையாகியுள்ள நீரிழிவு நோயைக் கட் டுப் படுத்துவதற்காக அரசு சீனிப் பாவனை தொடர்பில் புதிய சட்ட மொன்றை உலக நீரிழிவு தினமான கடந்த 14 ஆம் திகதி நடைமுறைக்கு கொண்டு வந்துள்ளது.
ஹோட்டல்கள், உணவுச்சாலைகள், தேநீர், குடிபானச் சாலைகள் என்பவற்றிலும், அரசவிழாக்களில் தேநீர், கோப்பி, பால் தேநீர் போன்றவை வழங்கப்படும் போதும் சீனியைப் பயன்படுத்துவது தொடர்பாக அரசு இந்த விசேட சட்டங்களை நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ளது. அதற்கமைய ஹோட்டல்கள், தேநீர் மற்றும் குடிபானச்சாலைகள் மற்றும் உணவகங்களைப் போன்றே அரச நிறுவனங்களில் நடத்தப்படும் பயிற்சிப் பட்டறைகள், கூட்டங்கள் மற்றும் விழாக்களை நடத்தும் போது வழங்கப்படும் தேநீர், பால் தேநீர், கோப்பி போன்ற பானங்கள் சீனி சேர்க்கப்படாது தயாரிக்கப்பட வேண்டும். சீனி இடப்பட்டுள்ள கிண்ணங்கள், கரண்டிகள் என்பவை தனியாக வழங்கப்படல் வேண்டும். அவற்றை அருந்தவோ, தத்தமது தேவைக்கு ஏற்றவாறு சீனியைச் சேத்துக்கொள்வதற்கோ வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படல் வேண்டும். அத்துடன் சீனியைக் குறைவாகப் பாவித்து நீரிழிவு போன்ற நோய்களைத் தவித்துக் கொள்வோம் எனக்குறிப்பிட்டுள்ள ஸ்ரிக்கர் ஒன்றும் சீனி இடப்படும் கிண்ணத்தில் ஒட்டி விடுவதற்கு ஹோட்டல்கள் மற்றும் உணவுச் சாலைகளின் உரிமையாளர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் சுகாதார அமைச்சுத் தெரிவித்துள்ளது.
உலக நீரிழிவு தினத்தில் இருந்து இந்தச் சட்ட விதிகளை நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளதாக, இலங்கையின் உணவுகள் தொடர்பான சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகமும், வைத்திய நிபுணருமான பாலித மகிபால இது சம்பந்தப்பட்ட விசேட சுற்றறிக்கை ஒன்றின் மூலம் நாடு முழுவதிலுமுள்ள சுகாதார அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியுள்ளார்.
இதேவேளை- பாடசாலைகளில் உள்ள உணவகங்களில் உப்பு, சீனி மற்றும் அதிகளவில் எண்ணெய் உள்ள உணவு வகைகளை விற்பனை செய்வது குறைக்கப்பட வேண்டியுள்ளதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. மேலும், கடந்த 2013 ஆம் ஆண்டில் கொழும்பு நகரில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றுக்கு அமைய சனத்தொகையில் நூற்றுக்கு 28 வீத மானோர், நீரிழிவுநோயினால் அவலப்படுகின்றனர். 2014 ஆம் ஆண்டில் மேல், வடமேல், தெற்கு மற்றும் ஊவா மாகாணங்கள் சார்ந்த நீரிழிவு மற்றும் இருதய நோய்களுக்கான ஆபத்து நிலைகளை இனங்கண்டு கொள்ளும் ஆய்வுக்கு அமைய, நீரிழிவு நோயாளர்களின் தொகை நூற்றுக்கு 14 வீதமாக இருந்துள்ளது. நாட்டில் பாடசாலை மாணவர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள் இடையேயும் நீரிழிவு ஆபத்து நிலை அதிகரித்து வருகிறது. நீரிழிவு நோயின் காரணமாகச் சிறுநீரகங்கள் செயலிழந்து போதல், கண்கள் குருடாகுதல், பாதங்களை இழத்தல், இருதய நோய்கள், செயலிழப்பு காரணமாக அகாலச் சாவுகள் ஏற்படும் என்பதால், இதனால் ஏற்படக்கூடிய பாதிப்பானது மிகப்பெரிது என்பதைக்கவனத்தில் கொண்டே இந்தச் சட்டங்களை நடைமுறைப்படுத்தத் தீர்மானித்ததாக சுகாதார அமைச்சுத் தெரிவித்துள்ளது. (ஐ-22)

## பூசகரின் மோட்டார் சைக்கிள் தீக்கிரை



மன்னார்,நவ.17
மன்னார், நானாட்டான் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்துக்குள் கடந்த 14 ஆம் திகதி நள்ளிரவு உள் நுழைந்த இனம் தெரியாத நபர்களால் ஆலயத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஆலய பூசகருடைய மோட்டார் சைக்கிள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. ஆலயத்துக்குள் உட்சென்ற இனம் தெரியாத நபர்கள் மோட்டார் சைக்கிளுக்கும், ஏனைய சில பொருள்களுக்கும் தீ வைத்துள்ளனர். அத்தோடு ஆலயத்தின் சில பெறுமதியான பொருள்களும் திருடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த சம்பவம் தொடர்பாக முருங்கன் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-56)

## கடவுச்சீட்டுக்களை துரிதகதியில் அச்சிடுவதற்கு அரசு தீர்மானம்



கொழும்பு.நவ.17
15 லட்சம் வெளிநாட்டுக் கடவுச்சீட்டுக்களை துரிதகதியில் அச்சிடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது. இது தொடர் பாக உள்நாட்டு விவ காரங்கள், வடமேல் மாகாண அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் எஸ்.பீ. நாவின்னவினால் முன்வைக்கப்பட்டுள்ள அமைச்சரவைப் பத்திரத்துக்கு அனுமதி கிடைத்துள்ளது. ஏற்கனவே அச்சிட்டப்பட்டு கையிருப்பில் உள்ள வெளிநாட்டுக் கடவுச்சீட்டுக்கள் இந்த நவம்பர் மாதத்துடன் விநியோகித்து முடிந்து விடும் என்பதால் இந்த 15 லட்சம் கடவுச் சீட்டுக்களும் துரிதகதியில் அச் சிடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவற்றை அச்சிடுவதற்காக 96 கோடி ரூபா வரையில் செலவாகக் கூடுமெனவும் அரச தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஐ-22)

## புத்தாக்கப் போட்டியில் மூன்றாம் இடம்

யாழ்ப்பாணம்.நவ.17
இணுவில் மத்திய கல்லூரியின் மாணவன் ரட்ணசங்கர் சஞ்ஜீவன் மாகாண மட்டத்தில் நடத்தப்பட்ட புத்தாக்கப் போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்டார்.



அத்துடன் தேசிய மட்டத்தில் நடைபெற்ற புத்தாக்கப் போட்டியிலும், கண்காட்சியிலும் பங்குபற்றி கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளார். (ஐ)

## சித்திரப் போட்டியில் முதலாம் இடம்

யாழ்ப்பாணம்.நவ.17
கொக்குவில் மேற்கு சி.சி.த.க. பாடசாலையின் மாணவி சுரேஸ் சுமேக்கா, தரம்-5 மாணவர்களுக்கிடையில் நடத்தப்பட்ட சித்திரப் போட்டியில் கோட்ட, வலய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டார். அத்துடன் மாகாண மட்டத்தில் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளார். (ஐ)



# கைவிடப்பட்ட கொத்துக்கட்டி வீதி சமூக விரோதச் செயலுக்கு வாய்ப்பு

யாழ்ப்பாணம்.நவ.17
வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் நவாலி அரசடிச்சந்தியில் இருந்து கல்லுண்டாய் வீதியை இணைக்கும், சுமார் 2 கிலோமீற்றர் நீளமான கொத்துக்கட்டி வீதி பல வருடங்களாகத் திருத்தி அமைக்கப்படாமல் கைவிடப்பட்ட நிலையில் இருப்பதுடன், வீதியின் இரு பக்கங்களும் பற்றைகள் வளர்ந்து காடுபோல் காட்சியளிக்கின்றன. இதனால் மக்கள் நிம்மதியாகப் போக்குவரத்துச் செய்ய முடியாமல் திண்டாடும் அதேநேரம்- சமூகச் சீர்கேடுகளும் தங்குதடையின்றி அரங்கேறி வருகின்றன.
யாழ்ப்பாணத்திலிருந்து ஆனைக்கோட்டை, நவாலியூடாக சங்கரத்தை, வட்டுக்கோட்டை செல்லும் வீதியில் நவாலி அரசடிச் சந்தியிலிருந்து யாழ்ப்பாண கல்லுண்டாய் வீதியை இணைக்கும் தெற்குப் பக்கமாகச் செல்லும் 2 கிலோமீற்றர் நீளமான கொத்துக்கட்டி வீதியில் இரு பக்கங்களும் வயற்காணிகளும் மேட்டுக்காணிகளும் அமைந்துள்ளன. அராலியைச் சேர்ந்த அனேகமான மக்கள் வலி. தென்மேற்கு பிரதேசத்துக்கு தமது தேவைகளுக்காகச் செல்வதற்கு இந்த வீதியையே பயன்படுத்தி வருகின்றனர். இதேபோல் கால போக நெற்செய்கையின் போது விவசாயிகளும் இந்த வீதியைப் பயன்படுத்தி வருகின்றனர்.
இந்த நிலையில் மேற்படி வீதி பல வருடங்களாகப் புனரமைக்கப்படாமல் குண்டும் குழியுமாகக் காட்சியளிக் கின்றது. இதனால் இந்த வீதியைப் பயன்படுத்தும் மக்கள் பெரும் சிரமங்களுக்குள்ளாகின்றனர். வீதி அபிவிருத்தித் திணைக் களத்துக்குச் சொந்தமான மேற் படி வீதியைப் புனரமைக்குமாறு பாதிக்கப்பட்ட மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பல தடவைகள் அறிவித்திருந்த போதிலும், இன்று வரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. சண்டிலிப் பாய் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திலும் இந்த வீதியின் நிலை குறித்து, பொது அமைப் புக்கள் சுட்டிக் காட்டியிருந்தன. இதேவேளை- மேற்படி வீதியின் இரு பக்கங்களிலும் பற்றைகள் வளர்ந்து காடு போல் காட்சியளிப்பதனாலும் சமூகச் சீர்கேடுகள் இடம்பெற்று வருகின்றன. இது குறித்துத் தட்டிக் கேட்க எவரும் முன்வராததனால் சமூக விரோதச் செயலில் ஈடுபடுபவர்கள் வாடிக்கையாக இந்த இடத்தைப் பயன் படுத்தி வருகின்றனர். அயல் கிராமத்தில் வசிக்கும் மக்கள் துணிகரமான முறையில் இடம் பெற்று வரும், சமூக விரோதச் செயலைக் கட்டுப்படுத்தும் நோக் குடன் இரு மாதங்களுக்கு முன்பு சிரமதானம் மூலம் பற்றைகளை வெட்டி அப்புறப்படுத்தியிருந்த போதிலும், மீண்டும் பற்றைகள் வளர்ந்துள்ளதால் சமூக விரோதச் செயலில் ஈடுபடுபவர்களுக்கு வாய்ப்பாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-115)

## சந்தை விற்பனைப் பிரிவுகள் தற்காலிகமாக இடமாற்றம்

சாவகச்சேரி பொது விளையாட்டு மைதானத்தில் பெருமழையால் வெள்ளம் நிறைந்துள்ளதால் அங்குள்ள தற்காலிக கட்டடத்தில் இயங்கிய பழவகை விற்பனைப் பிரிவும், வெற்றிலை விற்பனைப் பிரிவும் தற்காலிகமாக முன்னர் மீன் சந்தை இயங்கிய கட்டடத்துக்கு இடமாற்றப்பட்டுள்ளது. இந்தப் பிரிவுக்குள் வெள்ளம் புகுந்து கொண்டதால் வியாபாரிகள் விடுத்த வேண்டுகோளையடுத்து இந்த விற்பனைப் பிரிவுகள் மாற்றப்பட்டுள்ளதெனவும், மரக்கறி விற்பனைப் பிரிவுகள் தொடர்ந்து அங்கேயே இயங்குமெனவும் நகரசபையின் செயலாளர் கா.சண்முகதாசன் தெரிவித்துள்ளார்.
சாவகச்சேரி நகர்ப் பகுதியில் மழை வெள்ளம் விளையாட்டு மைதானத் தின் ஊடாக வெளியேறுவதால் அருகில் உள்ள பற்றைக் காணிகளுக்குள் காணப்பட்ட பாம்புகள் இந்தக் கட்டடத்தினுள் வந்து வெற்றிலைக்கட்டுக்குள் தங்கியிருந்தமை தொடர்பாகவும், இந்தக் கட்டடத்தினுள் நெருக்கமாக வியாபாரிகள் விற்பனைப் பிரிவுகளை அமைத்திருந்ததால் நுளம்புகள் பெருமளவில் காணப்பட்டமை தொடர்பாகவும் வியாபாரிகளால் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. பொதுச் சந்தைக்கான கட்டட மற்றும் இதர வேலைகள் பூர்த்தியடைந்த நிலையில் உள்ள போதிலும், இன்னமும் அவை கையளிக்கப்படாததால், வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட விற்பனைப் பிரிவுகள் தற்காலிகமாக இட மாற்றப்பட்டுள்ளது. இந்தக் கட்டடம் அண்மையில் தீபாவளி வியாபாரத்துக்கு வருகை தந்த தென்னிலங்கை வியாபாரிகளுக்கு உடுபுடைவைகள் விற்பனை செய்ய வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அச்சுவேலி உகரம் அறக்கட்டளையால் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு

அச்சுவேலி,நவ.17

அச்சுவேலி உகரம் அறக்கட்டளையால், அச்சுவேலி தோப்பு அருள் நந்தி வித்தியாசாலையில் கல்வி கற்கும் 68 மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. பாடசாலை அதிபர் ம.இராஜவரோதயன் தலைமையில் கடந்த தீபாவளி தினத்தன்று நடைபெற்ற நிகழ்வில், மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் கையளிக்கப்பட்டன. பயிற்சிப் புத்தகங்கள், பென்சில்கள், கணித உபகரணப்பெட்டி மற்றும் பிளாஸ்ரிக் பெட்டி உள்ளிட்ட தலா 500 ரூபா பெறுமதியான உபகரணங்கள் உள்ளடங்கிய பொதி வழங்கப்பட்டது. நிகழ்வை நினைவு கூரும் வகையில் உகரம் அறக்கட்டளையால் பாடசாலை வளவில் பலாமரக் கன்றுகளும் நடப்பட்டன. (ஐ-11)

# போலி ஆவணம் தயாரித்தவர் கைது

முள்ளியவளை,நவ.17

பிரதேச செயலகத்தால் மணல் ஏற்றுவதற்கான அனுமதிப்பத்திரம் வழங்குவது நடைமுறையிலுள்ள நிலையில், அதேபோன்று போலியாக ஆவணம் தயாரித்துப் பணம் திரட்டிய ஒருவர் முள்ளியவளைப் பகுதி [illegible] வைத்து முள்ளியவளைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக முள்ளி யவளை பொலிஸ் நிலைய உப பொலிஸ் பரிசோத கர் ஜே.ஜெயரோன் தெரிவித்துள்ளார். தண்ணீரூற்றுப் பிரதேசத்தில் மணல் ஏற்றி வந்த உழவு இயந்திரத்தை பரிசோதனை செய்தபோது, ஆவணங் களைச் சாரதி சமர்ப்பித்துள்ளார். கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரத்தைப் பரீட்சித்த போது அது போலியானது என்பதை பொலிஸார் தெரிந்து கொண்டு அது தொடர்பாக சாரதியிடம் விசாரணை நடத்தினர். தொடர்ந்து உழவு இயந்திரத்தின் உரிமையாளரை விசாரித்தபோது, கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரத்தை தான் ஸ்கான் செய்து, அதிலுள்ள கையெழுத்தை வைத்து கடந்த ஆறு மாதங்களாக இவ்வாறு செய்து வருவதாகவும் தெரிவித்தார். மேற்படி நபரின் வீட்டை சோதனையிட்ட போது, ஆவணம் தாயாரிக்கப் பயன் படுத்திய கணினி மற்றும் ஸ்கானர், பிறிண்டர் என் பனவற்றை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பாக முள்ளியவளைப் பொலிஸார் தொடர்ந்தும் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (ஐ)

# இலங்கையின் சுதந்திர தின விழா அடுத்த ஆண்டு காலி முகத்திடலில்

அடுத்த ஆண்டில் இடம்பெறவுள்ள இலங்கையின் சுதந்திர தின விழாவை கொழும்பு காலிமுகத் திடலில் நடத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளது. அடுத்த வருடத்துக்கான சுதந்திர தின விழா பிற்பகல் 3 மணிக்கு ஆரம் பமாகவுள்ளதோடு நாட்டின் தேசிய சுதந்திரதின விழாவொன்று பிற்பகல் வேளையில் இடம்பெறும் முதலாவது தடவையும் இதுவேயாகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் இடம்பெறும் இந்த விழாவில் வழமை போன்று முப் படைகளின் மற்றும்பொலிஸ்துறையின் அணிவகுப்பு மரியாதைகள் இடம் பெறவுள்ளதோடு, அதையடுத்து கலாசார நிகழ்வுகள் மற்றும் வாணவேடிக்கைகள் நடத்துவதற்கும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக உள்நாட்டு விவகார அமைச்சின் செயலாளரான பீ.ஜீ.ரத்ன சிறி தெரிவித்துள்ளார். (ஐ-22)

UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
FACULTY OF MEDICINE
ACADEMIC PROGRAMME

The Academic Programme for the New Batch (2014 A/L) of Medical Students will commence on Monday , 23rd November 2015 An Inauguration Programme will be held on 23 rd November 2015 at 9.00 am in the Hoover Auditorium, Faculty of Medicine for the above Students.Parents of each Student are requested to attend this Inauguration Programme too.

Registrar
University of Jaffna (65495)(12.15.17) 16.11.2015

**வீடு வாடகைக்குத் தேவை**

யாழ். மாநகர எல்லைக்குள் சிறிய குடும்பத்துக்கு வீடு வாடகைக்குத் தேவை.

(66129)(11.17) 077 883 6361

**தேவை**

இணுவிலிலுள்ள அரைக்கும் ஆலை ஒன்றுக்கு மா வறுப்பதற்கு ஆள் ஒருவர் தேவை.

(66125)(11) தொடர்பு: 076 801 0846

**யாழ்ப்பாணத்தில் காண்டம் வாசிக்கப்படுகின்றது**

ஸ்ரீ கௌசிக அகத்திய
நாடி சோதிட நிலையம் (Pvt) Ltd

P. ஜெய்சங்கர்

கொழும்பில் கடந்த 25 வருடங்களாக கௌசிக அகத்திய முனிவர்களால் எழுதப்பட்ட ஏட்டுச் சுவடிகள் மூலம் தங்களின் கடந்த காலம், நிகழ் காலம், எதிர்காலம், கல்வி, திருமணம், குழந்தைகள், தொழில்வாய்ப்பு, வெளிநாட்டுப் பயணம் போன்றவற்றைக் கூறி புகழ்பெற்ற சோதிடர்களால் தற்போது யாழ்ப்பாணத்தில் பலருடைய வேண்டுகோளுக்கிணங்கி கீழ்க் கண்ட முகவரியில் காண்டம் வாசிக்கப்படுகின்றது.

**தொடர்புகளுக்கு:**

384A, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
கைலாசபிள்ளையார் கோயில் அருகில்
தொலைபேசி: 021 2217944

**கொழும்பு முகவரி :**

19 1/1, கொத்தலாவல மாவத்தை,
பம்பலப்பிட்டி.
0112 586180, 0112 586208



# கண்டாவளை பிரதேச செயலகத்தை இடமாற்றுவதை எதிர்த்துப் போராட்டம்



கிளிநொச்சி, நவ.17

கிளிநொச்சி புளியம்பொக்கணையில் புதிதாக அமைக்கப்பட்டுவரும் பிரதேச செயலகக் கட்டடத்தில் மழைநீர்வழிந்தோடாது பயிர்கள் அழிந்துள்ளன என்றும் கண்டாவளை பிரதேச செயலகத்தை இடம் மாற்றம் செய்யவேண்டாம் என்றும் தெரிவித்து கண்டாவளைப் பகுதி மக்கள் அடையாள உணவு தவிர்ப்புப் போராட்டம் ஒன்றை நேற்று முன்னெடுத்தனர். சுமார் 50 வரையானோர் அதில் கலந்து கொண்டனர்.

மு.ப.11 மணியளவில் கரைச்சி பிரதேச சபை முன்பாக ஒன்று கூடிய கண்டாவளை பிரதேசத்தை சேர்ந்த மக்கள் பிரதேச சபையின் முன்பாக போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இரணைமடுக் குளத்து கழிவு நீர் பாயும் இடத்தில் பிரதேச செயலகம் அமைக்க முற்பட்டதன் காரணத்தால் இன்று வெள்ளம் பெருகி பயிர் அழிவு ஏற்பட்டுள்ளது. விளை நிலங்கள் வெள்ளத்தில் மிதக்கின்றன. எமது உண்மையான அவலத்தை சுயநலம் மிக்க அரசியல் வாதிகளும் அரச அதிகாரிகளும் புரிந்து கொள்ளவில்லை என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

(ற-21,ரி3)

## பாரம்பரிய விளையாட்டுக்கள்

யாழ்ப்பாணம்,நவ.17

நவாலி அட்டகிரி கந்தசுவாமி ஆலயத்தின் சூரன்போர் தினமான இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பாரம்பரிய 5 விளையாட்டு நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன. ஆலயத்தின் பிரதான வீதியில் சூரன் போர் வீதி உலா இடம்பெறும்போது, பாரம்பரிய சிலம்பு ஆட்டம், மடு, கண்டங்கோடரி, தீப்பந்தம், சங்கிலிப் பந்தம் உட்பட பல சிறப்பு விளையாட்டுக்கள் நவாலி இளைஞர்களால் மேற்கொள்ளப்படவுள்ளன. கடந்த 30 ஆண்டுகளுக்குப் பின்னர் இந்த விளையாட்டுக்கள் வலி.தென்மேற்கில் சிறப்புப் பெற்றுள்ளன. கடந்தகாலங்களில் ஆனைக்கோட்டை மூத்த விநாயகர் ஆலயத்தில் இடம்பெற்ற இந்த விளையாட்டுக்கள் தற்போது நவாலி அட்டகிரி கந்தசுவாமி ஆலய சூரன்போர் தினத்தன்று இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஐ-50)

## சாவகச்சேரி நகர சபையினரால் இருவேளை சுத்திகரிப்புப் பணி

சாவகச்சேரி நகர சபையினர் கடந்த வெள்ளிக்கிழமை முதல் தினமும் இரு நேர சுத்திரிப்புப் பணிகளை ஆரம்பித்துள்ளனர்.

இதுவரை காலமும் தினமும் காலை 5 மணி தொடக்கம் பி.ப.2.30 மணி வரை சாவகச்சேரி நகர் உட்பட வட்டாரங்களில் சுத்திகரிப்புப் பணிகள் நடைபெற்றன. எனினும் தற் போது டெங்குத் தொற்று அதிகரித்து வருவதால் காலையிலும் மாலையிலும் சுத்திகரிப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

தற்போது மழை ஆரம்பித்துள்ளதால் அனைத்து வீதிகளிலும் மரக்கிளைகள் வெட்டப்பட்டுக் குவிக்கப்படுகின்றன என்று முறைப்பாடுகள் கிடைப்பதால் வட்டார ரீதியாக சுத்திகரிப்புப் பணிகள் நடைபெறுகின்றன.

வரியிறுப்பாளர்கள் வீதிகளில் குப்பைகளைப் போடாது வளவுகளில் சேகரித்து வைத்து நகர சபைக்கு அறிவித்தால் சபையினர் வாகனங்கள் மூலம் குப்பைகளை அகற்ற நடவடிக்கை எடுப்பார்கள் என்று நகர சபைத் தலைவர் கா.சண்முகதாசன் தெரிவித்தார்.

சாவகச்சேரி நகர சபையின் திண்மக் கழிவுகளைப் பசளையாக்கும் திட்டம் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதால் கழிவகற்றல் செயற்பாடுகள் இலகுவாக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

(ற-9)

## பிற்போடப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம்,நவ.17

கைதடி நவீல்ட் செவிப்புலன் விழிப்புலன் இழந்தோர் பாடசாலையில் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெற இருந்த நத்தார் இன்னிசை ஆராதனை சீரற்ற காலநிலை காரணமாக பிற்போடப்பட்டுள்ளது. இந்த நிகழ்வு பற்றிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனப் பாடசாலை அதிபர் திருமதி வாசுகி ராஜசிங்கம் அறிவித்துள்ளார். (ஐ-ரி6)

## விவரணப் போட்டிக்கு விருது

கண்டாவளை,நவ.17

அரச இலக்கிய கலை பெருவிழாவில் , பிரான்பற்றுப் பிரதேசத்தைச் சேர்ந்த சமாதான நீதிவான் கணபதிப்பிள்ளை தெய் வேந்திரம் திறந்த விவரணப் போட்டியில் இரண்டாம் இடத்துக்கான விருதையும், சான்றிதழையும் பெற்றுக் கொண்டுள்ளார். வலி.தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பிரதேச இலக்கிய போட்டித் தொடரில் பத்மாவதி சரித்திரநாவல் எனும் ஆக்கத்தை சமர்ப்பித்து இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார். கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அனூா கோகுல பெர்ணாந்து கையெழுத்திட்ட சான்றிதழை வலி. தென்மேற்கு பிரதேச செயலாளர் திருமதி யூ.யசோதா அவருக்கு வழங்கிக் கௌரவித்துள்ளார். சமூக சிந்தனையாளரான கணபதிப்பிள்ளை தெய்வேந்திரனின் ஆக்கத்திறனுக்கு 2013 இல் கலாபூஷண விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை கடந்த 20 ஆண்டுகளில் ஆன்மிகம் தொடர்பான 223 கவிதைப் பாடல்களை இவர் இயற்றிப் பாடியுள்ளார். (ஐ-50)

## மரண அறிவித்தல்கள்

### முருகையா விஜயகுமாரன் (திருமால்)



இணுவிலைப் பிறப்பிடமாகவும், சுவிஸ்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட முருகையா விஜயகுமாரன் (திருமால்) 15.11.2015 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகையா - சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மகனும், கனகரத்தினம் - வள்ளியம்மை தம்பதியினரின் மருமகனும், புவனலோஜினியின் (மோகனா) அன்புக் கணவரும். சபிதா, விஜிதா ஆகியோரின் பாசமிகு தந்தையும், கருணானந்தம் (இந்தியா), காலஞ்சென்றவர்களான கணேஸ்வரன், கெங்காதரன் மற்றும் தர்மகுலராணி (பிரான்ஸ்), கணேசலிங்கம் (சின்னராசா), கதிர்காமநாதன் (அரசன்-சுவிஸ்), கமலநாதன் (உமாபதி - லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் சுவிஸ்லாந்தில் நடைபெறும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இணுவில் கிழக்கு.
077 401 4792 (66127)(11.17)

தகவல்: சகோதரன்
கணேசலிங்கம் (சின்னராசா)

### வல்லி சிதம்பரநாதன்

(முன்னாள் கட்டட நிர்மாண மேஸ்திரியும், சோதிடரும்)



கைதடி, நாவற்குழியைப் பிறப்பிடமாகவும், இராமலிங்கம் வீதி, உடுவிலை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட வல்லி சிதம்பரநாதன் நேற்று (16.11.2015) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற தங்கவேலு மற்றும் ருக்குமணி, மனோன்மணி, தவமணி (ஆசிரியை- யா/கைதடி, நாவற்குழி அ.த.க. பாடசாலை ), குணமணி (ஆசிரியை- யா/ஸ்கந்தவரோதயா கல்லூரி - சுன்னாகம் ) ஆகி யோரின் அன்புத் தந்தையும், யோகாம்பிகை, கனகரத்தினம் காலஞ்சென்ற வைத்திலிங்கம் மற்றும் சண்முக நாதன், சிவநடராஜா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சசிகலா, மாலதி, விஜயபாரதி, குணசீலி, சியாமளா, மனோகரதாசன், மணிவண்ணன், வாசுகி, காண்டீபன், நேசராஜன், அஸ்வினி, சண்முகப்பிரியா,சுஜீவன், சிவானுஜன்,சஜீவன் ஆகியோரின் பாசமிகு பேரனும், புகழினி, பாலகணன்,கீர்த்தனா, ஜினித்தா, கோமகள், விது, சதுஷன், பிருந்தகி, ஜஸ்வினி, டஸ்வினி, றியான் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (17.11.2015) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று மு.ப.10.00 மணிக்கு பூதவு டல் சுன்னாகம் பூவோடை இந்து மயானத்துக்குத் தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இராமலிங்கம் வீதி,
உடுவில்,
சுன்னாகம். (66132)(11.17)

தகவல்:
குடும்பத்தினர்.

## சூரசங்ஹாரம்

யாழ்ப்பாணம்,நவ.17

சரசாலை நுணாவில் சிதம்பர விநாயகர் ஆலயத்தில் கந்தசஷ்டி விரதம் கடந்த 12 ஆம் திகதி ஆரம்பமாகி சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அபிஷேகம் ஆரம்பமாகி 4.30 மணிக்கு சூரசங்ஹாரம் நடைபெறவுள்ளது. நாளை புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அபிசேகம் ஆரம்பமாகி வள்ளி தெய்வசேனா சமேத சிவசுப்பிரமணிய சுவாமிக்கு திருக்கல்யாண வைபவமும் நடைபெறவுள்ளது. (ஐ)

✦ ✦ ✦

தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் கந்தசஷ்டி விரதத்தை முன்னிட்டு இடம்பெறும் சூரன் போர் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு இடம் பெறவுள்ளது. கந்தசஷ்டி விரதத்தின் இறுதி நாளான நாளையதினம் பாறணைப்பூசை அதிகாலை 3 மணிக்கு நடைபெறவுள்ளது. தொடர்ந்து இரவு 7மணிக்கு தெய்வானை அம்மன் திருக்கல்யாண விசேட பூசை இடம் பெறவுள்ளது. (ஐ-108)

## அலங்காரத் திருவிழா

பூநகரி கிராஞ்சி சிவசுப்பிரமணியர் ஆலயத்தில் கந்தசஷ்டி விரதத்தை முன்னிட்டு அலங்காரத் திருவிழா கடந்த பத்தாம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வரு கின்றது. நாளை மறுதினம் வியாழக்கிழமை விசேட அபிசேகத்துடன் திருவிழா நிறைவுபெறும்.

(ஐ-9)

# கடும் மழையால் வெள்ளத்தில் கொடிகாமம் அ.த.வி. வளாகம்

### அண்டிய குடியிருப்புகளுக்குள்ளும் வெள்ளம்

நெல்லியடி, நவ.17

அண்மையில் பெய்த கடும் மழையால் கொடிகாமம் அரசினர் தமிழ் வித்தியாலய வளாகமும் அதனை அண்டிய குடியிருப்புகளும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

அந்தப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள ரயில் பாதையில் உரிய முறையில் பாலம் அமைக்கப் படாததாலும், வெள்ள நீர் வழிந்தோடக் கூடியவகையில்வடிகால்முறையை கமநல சேவைகள் திணைக் களத்தினர் மேற்கொள்ளாததாலும் வெள்ளம் தேங்கியுள்ளது என்று பொதுமக்கள் கூறுகின்றனர்.

முன்னர் இந்தப் பகுதியில் தேங்கும் மழை வெள்ளம் ஏ 9 வீதியிலிருந்து குடமியனில் உள்ள குளத்துக்கு செல்வதற்கு வடிகால் அமைக்கப்பட்டிருந்தது.

குறித்த பகுதியில் படையினர் முகாமிட்டிருந்த வேளையில் வெள்ள வாய்க்காலின் பல இடங்களில் தடுப்புகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. அதனால் மழை வெள்ளம் வெளியேற முடியாது தேங்கி நின்று வந்தது. ஆயினும் அங்கிருந்து படையினர் வெளியேறிய பின்னர் மக்கள் வாய்க்காலில் ஏற்படுத்தப்பட்டிந்த தடுப்புக்களை அகற்றியிருந்தனர். அதனால் வெள்ளம் தேங்குவது ஓரளவு குறைந்திருந்தது. எனினும் ரயில் பாதை அமைக்கப்பட்டபோது உரிய முறையில் பாலம் அமைக்கப்படவில்லை என்று மக்கள் தெரிவித்தனர்.

அந்தப் பகுதி மக்கள் ஆண்டுதோறும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு வந்த நிலையில் ஏ-9 வீதிப் புனரமைப்பின்போது கொடிகாமம் நகரப் பகுதி வடிகால்கள் அனைத்தும் தமிழ் வித்தியாலத்துக்கு முன்பாக உள்ள வாய்க்காலில் இணைகின்றன. அதனால் வெள்ள நீர் வரத்து அதிகரித்தது என்று பொதுமக்கள் தெரிவித்தனர். அதனால் பாலத்தை மேவி நீர் பாய்கின்[illegible] என்றும் அவர்கள் விசனம் தெரிவித்தனர்.

இம்முறை மழையாலும் அந்தப் பகுதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. அதனால் அந்தப் பகுதி மக்கள் வித்தியாலய கட்டடங்களில் தஞ்சமடைந்துள்ளனர். இதனால் பாடசாலையின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.


அதேவேளை தென்மராட்சி பிரதேசத்தின் நாவற்குளிப் பகுதி வீடமைப்புத் திணைக்களத்தின் காணியில் குடியேறியுள்ள மக்கள் தாம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவித்தனர். அங்குள்ள பல வீடுகள் சேதமடைந்துள்ளன என்றும் அங்குள்ள 174 குடும்பங்களுக்கு தறப்[illegible] வழங்குமாறு பிரதேச செயலகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளோம் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

(ற-9)

# ஐ.நா. பிரதிநிதிகளுடன் பிரஜைகள் குழு சந்திப்பு

யாழ்ப்பாணம்,நவ.17

காணாமற் போனோரின் உறவுகள் மற்றும் வவுனியா மாவட்ட பிரஜைகள் குழு இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள ஐ.நா. செயற்குழுப் பிரதிநிதிகளை கடந்த 12 ஆம் திகதி வியாழக்கிழமை கிளிநொச்சியில் அமைந்துள்ள உலக உணவுத்திட்ட அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர். இந்தச் சந்திப்பின் போது, போர் நிறைவு பெற்றதன் பிற்பாடு இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்ட தமது உறவுகளை மீட்டுத்தர நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டதாகவும், இந்த விடயங்களை ஜனாதிபதி மற்றும் அரசின் கவனத்துக்குக் கொண்டுவர முயற்சிப்பதாக ஐ.நா. பிரதிநிதிகள் தெரிவித்துள்ளதா கவும், அத்துடன் தம்மால் தீர்வைப் பெற்றுத்தர முடியாது என்று தெரிவித்ததாகவும் வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார். (ஐ-9)




# புகைப்படத்தின் மூலம் உணர்ச்சிகளைச் சொல்லும் கருவி

எமது புகைப்படத்தை வைத்தே முகத்தில் வெளிப்படும் உணர்ச்சிகளைத் தெரிவிக்கும் புதிய கருவியை மைக்ரோசொப்ட் நிறுவனம், புரயெக்ட் ஒக்ஸ்போர்ட் (Project Oxford) என்ற திட்டத்தின் கீழ் உருவாக்கியுள்ளது. புகைப்படத்தில் இருக்கும் ஒருவரின் முகத்தை வைத்தே அவர் எந்தவிதமான உணர்வில் உள்ளார் என்பதைத் தெரிவிக்கும் விதமாக மைக்ரோசொப்ட் நிறுவனம் புரயெக்ட் ஒக்ஸ்போர்டின் கீழ் புதிய கருவியை உருவாக்கியுள்ளது. அதன்படி, நமது புகைப்படங்களை www.projectoxford.ai/demo/Emotiondetection என்ற தளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும். பின்னர் புகைப்படத்தில் உள்ள ஒருவரது முகத்தை வைத்தே அவர் எந்த வித உணர்ச்சியில் உள்ளார் என்பதை அது எமக்குத் தெரிவிக்கும். இதன் மூலம் கோபம், பயம், வெறுப்பு, மகிழ்ச்சி, இகழ்ச்சி, கவலை, ஆச்சரியம் ஆகிய உணர்ச்சிகளைக் கணக்கிடலாம் என்று கூறப்படுகிறது. இதற்கு முன்னதாகவே மைக்ரோசொப்ட் நிறுவனம் வயதை அறியும் கருவியையும், புகைப்படத்தில் இருப்பவர்கள் நண்பர்களா? அல்லது இரட்டையர்களா? என்பதைக் கண்டறியும் கருவியையும் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மர நடுகை மாதம்

## காடழிப்பின் பாதக விளைவுகளை உணருவோம்

"மரம்தான் மரம்தான் எல்லாம் மரம்தான்
மறந்தான் மறந்தான் மனிதன் மறந்தான்
மனிதன் மனிதனாக வேண்டுமா
மரத்திடம் வா... ஒவ்வொரு மரமும் போதிமரம்"

கவிஞர் வைரமுத்து

ஆதிகாலம் முதல் இற்றைவரை இயற்கை வளமாகக் கருதப்படும் காடுகளைச் சூழலுடன் நேரடியாகவும், மறைமுகமாகவும் இடைத்தாக்கம் செய்துகொண்டு வாழ்ந்துவரும் மனிதன் சிந்தனையற்ற முறையில் பல்வேறு தேவைகளைக் கருதித் திட்டமிடாமல் அழித்து வருகின்றான். பசுமையான காடுகள் அழிக்கப்படுவதால் மழை வீழ்ச்சி குறைவதுடன், பருவம் தப்பிய மழையையும் மக்கள் எதிர்கொள்ள வேண்டிவரும். பெரும்பாலான காடுகள் தொடராக அழிக்கப்படின் அந்தப்பகுதிகள் பாலைவனம் போல் காட்சியளிக்கும்.

காடழிப்பால் காட்டு மரங்களிலிருந்து வெளியேறும் ஒட்சிசன் வாயு குறைவடைந்து செல்லும். மனிதன் சீவிக்க ஒரு நாளைக்கு மூன்று சிலிண்டர் அளவான ஒட்சிசன் வாயுவைச் சுவாசிக்க வேண்டும்.

எனவே, நாம் வாழும் காலத்தைச் சுருக்கிக் கொள்ளாதீர்கள். காடுகள் அழிக்கப்படுவதால்தான் புவி வெப்பமடைதல் என்ற பாதகவிளைவு ஏற்படுகின்றது. புவிக்குத் தேவையான பாதுகாப்பை வழங்குவதற்குப் பதிலாக அச்சுறுத்தலை வழங்கிய வண்ணம் உள்ளோம். புவியை வெப்பமடையச் செய்வது புவியை நோயாளியாக்குவதாகும்.

புவியைச் சூடாக்குவதன் மூலம், வாழப் பிறந்த நாம் உயிரின அழிவுக்குக் காரணமாக ஆகிவிடக்கூடாது. எதை எப்போது செய்ய வேண்டும், எப்படிச் செய்ய வேண்டும் என நாம் சிந்திக்கத் தொடங்கினாலே எமக்குள் எதையும் நியாயமாக நேர்மையுடன் ஒழுக்கத்துடன் செய்ய வேண்டும் என்ற பக்குவம் ஏற்படும்.

இந்தப் பக்குவத்துடன் சுற்றுச் சூழலியல் என்ற கோட்பாட்டை ஒழுங்காகப் பின்பற்றி குறிக்கோள்களின் உண்மையான நோக்கங்களிலிருந்து விலகிச்செல்லாது சூழலின் இயற்கைச் சமநிலை பற்றிப் பூரணமாக அறிந்து சுற்றாடலில் அக்கறை கொண்டவர்களாக முறையான ஒழுங்கான முகாமைத்துவத்தின் மூலமும் காடுகளை அழிக்காது, காடுகளின் முக்கியத்துவத்தை உணர்ந்து இழந்துபோன மரங்களுக்குப் பதிலீடு செய்வதற்காக மரங்ளை நட்டு வளர்க்க இந்த மாதம் பொருத்தமாக அமைந்துள்ளதால் வருங்காலத் தலைமுறையினரும் பயனடைய மீண்டும் நடுவோம் மரங்களை.

சி.நற்குணலிங்கம்
நெல்லியடி

# முதியோர் தின விழாவும் முதியோர் கௌரவிப்பும்









யாழ்ப்பாணம்,நவ.17

நயினை அன்னை சிவகாமி அறக்கட்டளை நிலையத்தின் அனுசரணையுடன் புதுமுறிப்பு மூத்த பிரஜைகள் அமைப்பால் நடத்தப்பட்ட முதியோர் தின விழாவும் முதியோரைக் கௌரவப்படுத்தும் நிகழ்வும் அண்மையில் கிளிநொச்சி, சோலைநகர் சேரமான் முன்பள்ளி மைதானத்தில் நடைபெற்றன. புதுமுறிப்பு மூத்த பிரஜைகள் குழுத்தலைவர் அ.நவரட்ணம் தலைமையில் நடைபெற்ற இந்த முதியோர் கௌரவிப்பு விழாவில் புதுமுறிப்புப் பகுதியைச் சேர்ந்த 110 இற்கும் மேற்பட்ட முதியவர்கள் கௌரவிக்கப்பட்டனர். அத்தோடு முதியவர்களை மகிழ்விக்க கலை நிகழ்வுகள், கவியரங்கங் கள், மற்றும் முதியவர்களுடைய கலைநிகழ்வுகள் எனப் பல நிகழ்வுகள் இடம் பெற்றதோடு முதியவர்களுக் கான பரிசில்களும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக நயினை அன்னை சிவகாமி அறக்கட்டளை நிலைய இயக்குநரும், சிவகாமி கல்வி நிலைய முதல்வருமான சி. மாகாதேவன், சிறப்பு விருந் தினர்களாக கரைச்சி பிரதேச செயலர் கோ. நாகேஸ்வரன் மற்றும் கரைச்சி முதியோர் மேம்பாட்டு உத்தியோகத்தர் திருமதி சண்முகம் காந்திமதி, கிராம சேவை உத்தியோகத்தர் திருமதி மங்களா பாலகுமாரன், முன்னாள் புதுமுறிப்பு கிராமசேவகர் சி.சிவனேசன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக கரைச்சி பிரதேச குடியேற்ற உத்தியோகத்தர் திருமதி சாருமதி யோதிராஜ், அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சிவகுமாரி துஸ்யந்தன், புதுமுறிப்பு விக்னேஸ்வரா வித்தியாலய முதல்வர் தங்கவேலு கண்ணபிரான், கிளிநொச்சி ஊற்றுப்புலம் பாடசாலை முதல்வர் மகேசன் உமா சங்கர் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஐ-ரி3,21)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வருத்தப்படாத வாலிபர் சங்கம் உதவி





யாழ்ப்பாணம்,நவ.17

இளவாலை, சேந்தாங்குளம் பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தால் சமைத்த உணவுப் பொதிகள் மற்றும் பால் மா பைக்கற்றுக்களும் வழங்கி வைக்கப்பட்டன். குறித்த பகுதியில் குடிமனைகளுக்குள் வெள்ளம் புகுந்ததன் காரணமாக மீனவர் சங்கக் கட்டடத்தில் தற்காலிகமாக இடம் பெயர்ந்திருக்கும் பொதுமக்களின் எண்ணிக்கை 198 ஆக உயர்ந்திருப்பதுடன் தொடரும் கன மழை காரணமாக அவர்கள் இன்னும் பலசிக்கல்களைஎதிர்கொண்டுள்ளனர். இவர்களுக்கு இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம் சமைத்த உணவுப்பொதிகளை வழங்கி வருகிறது. அத்துடன் 3 வயதுக்குட்பட்ட பிள்ளைகளைக் கொண்ட 20 குடும்பங்களுக்கு பால்மா பொதிகளையும் வழங்கி வைத்தனர். ஐ




# பரிஸ் தாக்குதலின் பிந்திய தகவல்கள்

பரிஸ், நவ.17
கடந்த வெள்ளிக்கிழமை பிரான்ஸ் தலைநகர் பரிஸில் நடத்தப்பட்ட தீவிரவாதத் தாக்குதல்களில் 129 பேர் கொல்லப்பட்டுள்ள நிலையில், அந்தச் சம்பவங்கள் தொடர்பில் தினமும் புதிய தகவல்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.
தாக்குதல் நடத்தப்பட்ட பத்தங்லேன் இசை அரங்குக்கு வெளியே காணப்பட்ட சொகுசு வாகனத்தை தாக்குதலாளிகளுக்கு வாடகைக்குக் கொடுத்தவர் ஒரு பிரான்ஸ் பிரசை என்று தெரியவந்துள்ளது. அதையடுத்து குறித்த நபரைப் பொலிஸார் தீவிரமாகத் தேடத் தொடங்கியுள்ளனர்.
தாக்குதலாளிகளில் ஒருவர் பிரான்ஸ் குடியுரிமை கொண்டவர் என்று பொலிஸார் முன்னர் தெரிவித்திருந்தனர். ஆயினும் தற்போது மேலுமொரு தாக்குதலாளியும் பிரான்ஸ் குடியுரிமை கொண்டவர் என்று அறியப்பட்டுள்ளது. தாக்குதலாளிகளில் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார் என்றும் - அவருடன் தொடர்புடையவர்கள் என்று கருதப்படும் 6 பேர் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகின்றனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
பிரான்ஸின் அயல் நாடான பெல்ஜியத்தில் நடத்தப்பட்ட தீவிர தேடுதலில் இதுவரை 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் பரிஸ் தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் என்று சந்தேகிக்கப்படுகின்றது. அவர்களில் மூவர் பிரான்ஸ் குடியுரிமை பெற்றவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.
தாக்குதலில், பின்தளமாக பெல்ஜியத்தின் தலைநகர் ப்ரூசெல்ஸ் இருந்துள்ளது என்று பிரான்ஸ் பொலிஸார் கூறுகின்றனர். அதையடுத்து பெல்ஜியத்தில் தேடுதல்கள், சுற்றிவளைப்புக்கள் தீவிரமாக்கப்பட்டுள்ளன.
தாக்குதல் நடத்தப்பட்ட இடங்களில் ஒன்றான ஸ்டேட் டி பிரான்ஸ் பகுதியில் சிரியக் கடவுச் சீட்டு ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. 25 வயதான அகமட் அல்மோஅகமட் என்பவருடைய கடவுச் சீட்டே கண்டெடுக்கப்பட்டுள்ளது. இரு தற்கொலைக் குண்டுதாரிகளில் குறித்த நபரும் ஒருவர் என்று நம்பப்படுகின்றது.
தாக்குதலில் ஈடுபட்ட 8 பேர் கொல்லப்பட்டனர் என்று பொலிஸார் அறிவித்திருந்தனர். எனினும் 7 பேருடைய உடல்களே மீட்கப்பட்டுள்ளன. அதனால் எஞ்சிய ஒருவர் உயிருடன் தப்பியிருக்கக் கூடும் என்று கூறப்படுகின்றது. குறித்த நபரைத் தேடும் விசேட நடவடிக்கையைப் பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.
தாக்குதல் நடத்தியவர்களில் மூவர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஜனவரி மாதம் பிரான்ஸின் சார்லி எப்தோ பத்திரிகை நிறுவனம் மீது தாக்குதல் நடத்தியவர்களும் குவாச்சி எனும் குடும்பப் பெயரைக் கொண்ட சகோதரர்களே.
உதைபந்தாட்ட மைதானத்துக்கு அருகே தற்கொலைத் தாக்குதல்கள் நடத்தியவர்களில் ஒருவர் உதைபந்தாட்டப் போட்டிக்கான நுழைவுச் சீட்டை வைத்திருந்துள்ளார். குறித்த தாக்குதலாளி மைதானத்துக்குள் நுழைய முற்பட்டபோது காவலர்கள் உடற்சோதனை செய்ய முயன்றுள்ளனர். அதையடுத்து தற்கொலைத் தாக்குதலாளி குண்டை வெடிக்க வைத்துள்ளார். அதன் பின்னர் 3 நிமிடங்கள் கழித்து மற்றைய நபர் குண்டை வெடிக்க வைத்துள்ளார். குறித்த உதைபந்தாட்ட மைதானத்துக்குள் சுமார் 80 ஆயிரம் பேர் அந்தச் சமயம் இருந்துள்ளனர்.
தாக்குதலில் கொல்லப்பட்டவர்கள், காயமடைந்தவர்களில் 15 நாடுகளைச் சேர்ந்தோர் அடங்குகின்றனர். பெரும்பாலானோர், பிரான்ஸ் பிரசைகளாவர். இறந்தவர்களில் 109 பேரின் உடல்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.
பரிஸின் மொந்ரோய் பகுதியில் நடத்தப்பட்ட திடீர் சோதனையில் கார் ஒன்றில் இருந்து நவீன ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன என்று தகவல் வெளியாகியுள்ளன. அதனால் மேலும் தீவிரவாதத் தாக்குதல்கள் நடத்தப்படலாம் என்ற அச்சம் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.
தற்போது அங்கு பிறப்பிக்கப்பட்டுள்ள அவசரகால நிலைமை மூன்று மாதங்களுக்கு நீடிக்கப்படவுள்ளது என்று - அந்த நாட்டு ஜனாதிபதி பிரான்சுவா ஒல்லோந்த் தெரிவித்துள்ளார். பிரான்ஸில் நாடுமுழுவதும் அவசரகால நிலைமை பிறப்பிக்கப்படுவது இது இரண்டாவது முறையாகும். முன்னர் அல்ஜீரியப் போரின்போது நாடு முழுவதும் அவசரகால நிலைமை பிறப்பிக்கப்பட்டிருந்தது. (ற-ரி4)



# பதிலடியை ஆரம்பித் பிரான்ஸ் விமானப் ப

## ஐ.எஸ். இலக்குகள் மீது கடும் தாக்குதல்



பரிஸ், நவ.17
பிரான்ஸ் ஐ.எஸ். தீவிரவாத அமைப்பின் மீது கடும் தாக்குதல்களை நேற்று ஆரம்பித்துள்ளது.
சிரியாவில் தெரிந்தெடுக்கப்பட்ட இலக்குகள் மீது கடும் விமானத் தாக்குதல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
ஐ.எஸ். அமைப்பின் வெளிநாடுகள் மீதான தாக்குதல்களின் கட்டளை மையங்கள் அமைந்திருக்கும் ரக்கா நகரிலேயே இந்தத் தாக்குதல்கள் நடத்தப்படவுள்ளன. 10 தாக்குதல் விமானங்கள், 2 கட்டளை விமானங்கள் என 12 விமானங்கள் இந்த தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன.
ஐ.எஸ்.. அமைப்பின் ஆள்சேர்ப்பு மற்றும் மேற்குலக நாடுகள் மீதான தாக்குதலுக்கான பயிற்சி மையங்களே தாக்குதலின் முக்கிய இலக்காகக் கொள்ளப்பட்டுள்ளன. எரிபொருள் வழங்கல் மையம் மீதும் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
எமது முக்கிய இலக்குகள் ஐ.எஸ். அமைப்பின் கட்டளை மையங்களை அழிப்பதும், அவர்களின் பயிற்சி மற்றும் ஆள்சேர்ப்பு நடவடிக்கையை செயலிழக்க வைப்பதுமே - என்று பிரான்ஸ் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.
இந்தத் தாக்குதல்களுக்கான ஒத்துழைப்புகளை அமெரிக்கப் பாதுகாப்புத் தலைமையகமான பெண்டகன் செய்துள்ளது. கூட்டுப் படைகளின் பாதுகாப்பும், உதவிகளும் பெறப்பட்டுள்ளன.
இந்தத் தாக்குதல்களில் 500 கிலோ எடையுள்ள குண்டுகள் இலக்குகள் மீது வீசப்பட்டுள்ளன. ஜோர்தானின் விமானத் தளங்கள் இந்தத் தாக்குதல்களுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ள
படுகின்றது.
கடந்த வெள்ளிக்கிழமை பிரான்ஸ் தலைந
தீவிரவாதத் தாக்குதல்களை அடுத்து அந்த ந
கள் மீது இரக்கமற்ற தாக்குதல் நடத்தப்படும்
அதேவேளை குறித்த தாக்குதல்களுக்குப் பெ
அமைப்பு இந்தத் தாக்குதல்கள் ஒரு ஆரம்
யிருந்தது.

# சிரியப் பிரச்சினையை தீர்க்க தக்க தருணம்

ஐ.நா. பொதுச் செயலர் தெரிவிப்பு



அண்டல்யா, நவ.17
சிரியாவில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையை முடிவுக்குக் கொண்டு வர இதுவே சிறந்த தருணம் என்று தெரிவித்துள்ளார் ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ–மூன்.
துருக்கியின் அண்டல்யா நகரில் தற்போது ஜி–20 மாநாடு நடைபெற்று வருகின்றது. அங்கு செய்தியாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே –மூன் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
சிரியாவில் தற்போது ஏற்பட்டுள்ள போர்ச் சூழ்நிலையை முடிவுக்குக் கொண்டுவர நாம் அந்த நாட்டின் முக்கிய அதிகாரிகள் அனைவரிடமும் வலியுறுத்தியுள்ளோம். நாட்டில் ஏற்பட்டுள்ள வேறுபாடுகள், அரசியல் பிரச்சினைகள் அனைத்தையும் ஒரு புறம் ஒதுக்கி வைத்துவிட்டு சமாதானத்துக்காகவும், பேச்சுக்காகவும் அனைத்துத் தரப்பினரும் முன்வருவார்கள்என்றால் போர் நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்த முடியும். அங்கு ஏற்பட்டுள்ள வன்முறைகளுக்குச் சிறந்த ஒரு தீர்வு காண்பதற்கு நீண்டகாலத்தின் பின்னர் தற்போது எமக்குச் சந்தர்ப்பம் ஒன்று கிட்டியுள்ளது. அதேபோன்று பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு அனைத்து ஆட்சிகளிலும் உள்ள சட்டங்கள் மிகவும் வலிமையாக இருக்க வேண்டும் - என்றார். (ற)



பிரான்ஸில் நடத்தப்பட்ட தீவிரவாதத் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு உ
வகையில் பிரான்ஸ் தேசியக் கொடியின் வர்ணம் மூலம் முக்கிய கட்டடங்கள


# ஜேர்மனியின் எல்லைகள

## பரிஸ் தாக்குதல்களை அடுத்து

பெர்லின், நவ.17
பிரான்ஸ் தலைநகரான பரிஸில் நிகழ்ந்த கொடூரமான தீவிரவாதத் தாக்குதலைத் தொடர்ந்து ஜேர்மனியின் எல்லைகளை கட்டுப்படுத்த உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்த நாட்டு அரசின் கூட்டணிக் கட்சிகள் வலியுறுத்தியுள்ளன.
ஜேர்மன் சான்சலரான ஏஞ்சிலா மெர்க்கலின் கூட்டணியில் உள்ள கன்சர்வேட்டிவ் கட்சி தலை
வர்கள் ஜேர்மனியில் நிலவும் அகதிக
சினைகளை பரிஸ் தாக்குதலுடன்
இந்தக் கோரிக்கையை வலியுறுத்திய
பரிஸ் தாக்குதல் ஜேர்மனியில் நிலவு
கள் தொடர்பான சூழ்நிலையை மா
ளது. ஜேர்மனிக்குள் யார் நுழைகிறார்க
கள் தற்போது வரை என்ன செய்து
இருக்கிறார்கள் என்பது எமக்குத் தெ
ஆனால் தற்போது நிலவும் அசா

# ...பித்தது ...ப் படை

...ல்



...ன்படுத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் நடத்தப்பட்ட ...ள அடுத்து அந்த நாட்டு ஜனாதிபதி தீவிரவாதி ...தல் நடத்தப்படும் என்று அறிவித்திருந்தார். ...க்குதல்களுக்குப் பொறுப்பேற்றிருந்த ஐ.எஸ். ...தல்கள் ஒரு ஆரம்பம் மட்டுமே என்று கூறி (ற)



தென்கொரிய ஜனாதிபதியை பதவி விலகுமாறு கோரி நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் கடும் மோதல் ஏற்பட்டுள்ளது. பல்லாயிரக் கணக்கானோர் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கு கொண்டனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தடைகளை மீறி ஜனாதிபதி செயலகத்துக்குள் செல்ல முற்பட்டனர். அதையடுத்து பொலிஸார் கண்ணீர்ப் புகைக் குண்டு வீசி ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைத்தனர். (ற-ரி4)



...ரிழந்தவர்களுக்கு உலகெங்கும் அஞ்சலி செலுத்தப்பட்டு வருகின்றது. பல நாடுகள் துக்கத்தைப் பகிர்ந்து கொள்ளும் ...முக்கிய கட்டடங்களை ஒளியூட்டியுள்ளன. உயிரிழந்தவர்களுக்காக பேர்லினில் அஞ்சலி செலுத்தும் மக்கள். (ற)

# சுமுகமான முறையில் அதிகாரம் கைமாறும்

## மியன்மார் ஜனாதிபதி உறுதி

யங்கூன், நவ.17

நடந்த முடிந்த தேர்தலில் வெற்றி பெற்ற ஆங் சான் சூகியின் கட்சிக்கு ஆட்சி அதிகாரத்தைக் கையளிக்கும் நடைமுறை சுமுகமாக நடைபெறும் என்று தெரிவித்துள்ளார் மியன்மார் ஜனாதிபதி தெய் செய்ன். யங்கூன் நகரில் இடம்பெற்ற அரசியல் கட்சிகளின் கூட்டம் ஒன்றில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் நாட்டு மக்களுக்கு இவ்வாறு உறுதியளித்தார்.



(தேர்தலில் வெற்றி பெற்ற சூகி

கடந்த வாரம் நடைபெற்ற தேர்தலில் சூகியின் கட்சி 80 வீதத்துக்கும் அதிகமான ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது. அதைடுத்து புதிய அரசை அமைப்பது தொடர்பான பேச்சு அடுத்த வாரம் ஆரம்பமாகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. மியன்மாரில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டால் 50 ஆண்டுகளுக்கும் அதிகமான காலம் நீடிக்கும் இராணுவப் பின்புலம் கொண்ட அரசின் நிர்வாகம் முடிவுக்குவரும். (ற)

# ஒபாமாவும் புடினும் திடீரெனச் சந்திப்பு

## சிரியப் பிரச்சினை குறித்து ஆராய்வு

இஸ்தான்புல், நவ.17

ஜி-20 மாநாட்டில் கலந்துகொள்வதற்காக துருக்கி சென்றுள்ள அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவும், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினும் திடீரென சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.



இந்தச் சந்திப்பு மாநாட்டின் தேநீர் இடைவேளையின்போது சுமார் 30 நிமிடங்களுக்கு மேல் தொடர்ந்தது என்று தெரிவிக்கப்படுகின்றது. எனினும் அதில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பான பூரணமான தகவல்கள் இதுவரையில் வெளியிடப்படவில்லை.

கடந்த மாதம் சிரியாவில் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராக ரஷ்யா தாக்குதல் நடத்தத் தொடங்கியது முதல் அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்குமான உறவில் விரிசல் ஏற்பட தொடங்கியது. இதனால் உலகின் இரண்டு வல்லரசுகளுக்கும் இடையில் மீண்டும் பனிப் போர் நிகழக் கூடுமோ என்ற அச்சம் ஏற்பட்டிருந்தது.

இந்த நிலையில் ஒபாமாவும், புடினும் திடீரென சந்தித்து நடத்திய பேச்சில் சிரியா பிரச்சினை பற்றி அதிகம் பேசப்பட்டது என்று கூறப்படுகிறது. (ற)

# ...லைகளை உடன் மூடுமாறு கோரிக்கை

...து

...னியில் நிலவும் அகதிகளின் பிரச் ...பாரிஸ் தாக்குதலுடன் ஒப்பிட்டு ...கையை வலியுறுத்தியுள்ளனர். ...ல் ஜேர்மனியில் நிலவும் அகதி ...ன சூழ்நிலையை மாற்றியுள் ...க்குள் யார் நுழைகிறார்கள், அவர் ...வரை என்ன செய்துகொண்டு ...ள் என்பது எமக்குத் தெரியாது. ...போது நிலவும் அசாதாரணமான சூழ்நிலையை உடனடியாக முடிவுக்குக் கொண்டு வர வேண்டும். பாரிஸ் தாக்குதலைத் தொடர்ந்து அந்த நாடு தனது எல்லைகளை உடனடியாக கட்டுப்படுத்தியுள்ளதை முன்னுதாரணமாக கொண்டு ஜேர்மனி அரசும் தனது நாட்டின் எல்லைகளைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று பவேரிய நிதி அமைச்சரான மார்கஸ் சோடர் வலியுறுத்தியுள்ளார்.

ஆயினும் அந்த நாட்டு உள்துறை அமைச்சர் இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது என்று தெரிவித்துள்ளார். ஜேர்மனியில் நிலவும் அகதிகள் பிரச்சினைகளைப் பாரிஸ் தாக்குதலோடு ஒப்பிடக்கூடாது. கூட்டணிக் கட்சிகளின் இது போன்ற அர்த்தம் இல்லாத கோரிக்கைகளால் ஜேர்மனியில் புகலிடத்துக்காகக் காத்திருக்கும் அகதிகள் மீதும் அவர்களின் இருப்பிடங்கள் மீதும் மோசமான தாக்குதல்கள் நிகழ வாய்ப்புள்ளது - என்று அவர் சுட்டிக்காட்டினார். (ற)

மதுரகவி
காரை. எம்.பி. அருளானந்தன்
(பணிப்பாளர், சைவத் தமிழ்
பண்பாட்டுக்கழகம்)

## மண்ணில் நல்லவண்ணம் வாழ வழிகாட்டும் மகத்தான விரதம்

# கந்தசஷ்டி

ஐப்பசி மாதம் வளர்பிறையில் அமாவாசையை அடுத்து வரும் பிரதமை முதல் சஷ்டி திதி ஈறாக ஆறுநாள்கள் கந்தப் பெருமானை வேண்டி அனுஷ்டிக்கப் படுகின்ற விரதம் கந்தசஷ்டியாகும்.

கந்தப் பெருமான், சூரபத்மனைத் தலைவனாகக் கொண்ட அசுரப் படையை வாட்டி அழித்த திருவிளையாடலைத்தான் கந்த சஷ்டி விரதமாக அனுஷ்டித்து வருகின்றோம்.

பரமேஸ்வரனுக்கும் - பார்வதிதேவிக்கும் குமாரனாக உதித்த முருகப்பெருமான், தேவர்களுக்குச் சொல்லொணாத் துன்பம் செய்த சூரபத்மன், சிங்கமுகன், பானுகோபன் போன்ற கொடிய அசுரத் தலைவர்களையும் அசுர குலத்தையும் ஆறுநாள் போரில் அடக்கி ஒடுக்கி சங்காரம் செய்தார்.

வேலினால் சூரபத்மனைப் பிளந்த முருகப் பெருமான் அவனது உடலின் ஒருபகுதியை மயில்வாகனமாகவும் மற்றொரு பகுதியைச் சேவற்கொடியாக்வும் தமதாக்கி ஆட்கொண்டு தேவலோகத்தைக் காத்தருளினார்.

*"ஆறாறையும் நீத்து*
*அதன்மேல் நிலையை*
*வேறா அடியேன் பெறுமாறு உளதோ*
*கீறா வரு சூர் சிதை வித்து*
*கூறா உலகம் குளிர்வித்தவனே"*

என்பது இந்த சூரசங்காரத்தை எடுத்து உரைக்கும் கந்தரனுபூதிப் பாடலாகும்.

உலகிலே ஜீவராசிகளுக்குத் தாயாய் தந்தையாய் இறைவனாய் இருந்து அருள் பாலிக்கும் கந்தவேள் யாரை அழிப்பது? யாரைக் காப்பது? மறக்கருணையால் அசுரர்களின் இயல்பை அழித்து தேவ இயல்புடன் அவர்களை ஆட்கொண்ட திருவிளையாடலே சூரசங்காரம் ஆகும்.

பிளக்கப் பிளக்க முளைத்த சூரன், ஈற்றில் கடலில் மரமாக வளர்ந்து நின்றான். கடலில் மரமாக நின்ற சூரனைக் கந்தப் பெருமான் சஷ்டியில் அறுத்தார் என்பதும் பிளவுதோறும் முளைத்த அவனது ஆணவத்தை அழித்து அவனை ஆட்கொண்டார் என்பதுமே சூரசங்காரத்தின் கருத்தாகும்.

எமது வாழ்க்கைத் தத்துவத்தை விளக்குவதற்கு ஏற்பட்ட ஒரு புற உபகாரத் திருவிளையாடலே கந்தவேலுக்கும் அசுரப் படைக்கும் இடையில் நடந்த போரும், சூரசங்காரமும் ஆகும்.பிரபஞ்ச வாழ்வும் ஒரு தொடர்ச்சியான போராட்டமே. ஒவ்வொருவரின் உள்ளத்தில் எழுகின்ற தேவ இயல்புக்கும் அசுர இயல்புக்கும் இடையில் இடையறாப் போரும் பூசலும் சங்காரமும் நடைபெற்றுக் கொண்டேதான் இருக்கின்றன.

எம்மில் எழும் அகங்கார காம, குரோத, மதமாச்சய விருத்திகளே அசுரத் தலைவர்கள் என்றும், தீய எண்ணங்களே அசுரப்படை என்றும் சொல்லலாம். இந்த அசுர இயல்புடன் தொடர்ச்சியாக இருக்காது, போராடி அடக்கி ஒடுக்கி அழித்து நற்பேறு அடையவேண்டும் என்பதே மனித வாழ்க்கையின் குறிக்கோளாகும்.



பிளக்கப் பிளக்க
முளைத்த சூரன் ஈற்றில் கடலில்
மரமாக வளர்ந்து நின்றான். கடலில்
மரமாக நின்ற சூரனைக் கந்தப் பெரு
மான் சஷ்டியில் அறுத்தார் என்பதும்
பிளவுதோறும் முளைத்த அவனது
ஆணவத்தை அழித்து அவனை
ஆட்கொண்டார் என்பதுமே
சூரசங்காரத்தின் கருத்தாகும்.

நாம் உடம்பைப் பெற்றது இறைவனை வணங்கி முத்தியடைவதற்கே என்பது ஆன்றோர் மொழி. கந்தசஷ்டிவிரதம் முருகப்பெருமானுக்கு உரிய விரதங்களுள் முதன்மையானதாகும். இதை முறைப்படி கடைப்பிடிப்போர் மற்ற எல்லா விரதங்களையும் நோற்ற பயனைப் பெறுவர் என்பது எம் முன்னோர் எமக்குச் சொல்லித் தந்தது.

கந்தசஷ்டி விரதம் ஆறு நாள்களை உள்ளடக்கியது. ஆறுநாள்களும் முழு விரதம் இருப்போர் பூரண உபவாசமிருந்து ஏழாம் நாள் காலை பாரணை பண்ணுவர். அவ்வாறு கடைப்பிடிக்க இயலாதவர்கள் தத்தமது தேக நிலைக்கு, மனநிலைக்கு ஏற்ப திரிகரண சுத்தியுடன் இயன்ற மட்டும் கடைப்பிடிக்கலாம். மனச் சுத்தமும் ஆழ்ந்த பக்தியும், தெய்வ நம்பிக்கையுமே இந்த விரதத்துக்கு முக்கியமானவை.

இந்த விரத நாள்களில் கந்தசஷ்டி கவசம், கந்தர் கலிவெண்பா,கந்தர் அலங்காரம், கந்தர் அனுபூதி, திருப்புகழ், சண்முக கவசம் ஆகியவற்றில் மனதுக்கு உகந்த பாடல்களைப் பாடி கந்தப் பெருமானின் பேரருளைப் பெற்று உய்யலாம்.

ஆகவே இந்த கந்தசஷ்டி நாள்களில் மட்டுமன்றி வாழ்நாள் முழுவதும் நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் முருகனையே நினைத்து அவன் அருட்பாடல்களைப் பாடிப் பரவி உலகத்தில் தாண்டவமாடும் அநீதிகள், தீமைகள், அறியாமைகள் யாவும் ஒழிந்து அழிந்து எல்லோரும் இந்த மண்ணில் நல்ல வண்ணம் வாழப் பிரார்த்திப்போமாக.

# திருவள்ளுவர் உருவச்சிலை பொருத்தமான இடத்தில் மீண்டும் வைக்கப்படும்

## கூறுகிறார் யாழ்.மாநகர ஆணையாளர்

சந்திப்பு -லக்ஸ்மன்

சமிக்ஞை விளக்குகள் அமைப்பதற்காக யாழ்.சத்திரச் சந்தியில் அமைக்கப்பட்டிருந்த திருவள்ளுவர் உருவச்சிலை அங்கிருந்து அகற்றப்பட்டு, அது தற்போது யாழ்.மாநகரசபை வளாகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. இந்தச் சிலையைப் பொருத்தமான இடத்தில் வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என யாழ்.மாநகரசபை ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித் துள்ளார்.

சத்திரச் சந்தியில் இருந்து அகற்றப்பட்ட திருவள்ளுவர் உருவச்சிலையின் தற்போதைய நிலை தொடர்பாகவும் மாநகரசபை தீர்மானித்தபடி தபாலகத்துக்கு முன்பாக உள்ள சுற்றுவட்டப் பாதையில் திருவள்ளுவர் சிலையை வைப்பது குறித்து ஏன் தாமதம் எனவும் கேட்டதற்கு மாநகர ஆணையாளர் திருவள்ளுவர் சிலையை அமைப்பதற்கான தாமதம் குறித்து விளக்கமளித்தார். யாழ்ப்பாணம் பிரதான தபாலகத்துக்கு அண்மையில் உள்ள கே.கே.எஸ்.வீதி தீவுப் பகுதிக்கான வீதிச்சுற்றுவட்டத்தில் திருவள்ளுவர் சிலையை அமைக்க யாழ்.மாநகர சபை தீர்மானித்திருந்தது. இது தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகார சபையுடன் தொடர்பு கொண்ட போது மேற்படி வீதியில் புனரமைப்புப் பணிகள் இடம்பெற வேண்டியுள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். எனவே திருவள்ளுவர் சிலையைத் தற்சமயம் அந்தப் பகுதியில் அமைத்தால் மீண்டும் அதனைத் திரும்ப எடுக்க வேண்டியேற்படும். ஆகவே வேறு பொருத்தமான இடத்தில் திருவள்ளுவர் சிலையை அமைப்பதற்காக வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சிடம் அனுமதி பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம் எனவும் ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார்.

நடைபெற்ற போரினால் யாழ்.மாநகர சபையின் கட்டடம் முழுமையாகச் சேதமடைந்தது. அதற்குப் பதிலாக புதிய கட்டடத்தை எமது கலாசாரத்தை மையமாகக் கொண்டதாக அமைக்கத் தீர்மானிக்கப்பட்டு, பிரதான வீதியில் உள்ள மாநகரசபைக்கான காணியில் இரண்டு தடவைகள் அடிக்கல் நடப்பட்டும் உள்ளது. மூன்று வருடங்கள் கடந்தும் புதிய கட்டடம் அமைக்கும் பணிகள் இடம்பெறவில்லை. விரைவில் புதிய கட்டடம் அமைக்கப்படும் எனக்கூறப்பட்டபோதும் எதுவுமே இடம்பெறாமல் இருப்பது குறித்து உங்களது கருத்தென்ன? என்று கேட்டபோது- முதல் கட்ட நடவடிக்கைகளுக்கென வழங்கப்படுவதாகக் கூறப்பட்ட ரூபா 200 மில்லியன் நிதியே இன்னமும் கிடைக்க வில்லை. புதிய கட்டட நிர்மாணம் தொடர்பாக வடக்கு மாகாண முதலமைச்சருடன் தொடர்பில் இருக்கிறோம். அவர்கள் மூலம் மத்திய அரசின் நிதி ஒதுக்கீடு கிடைக்கும் பட்சத்தில் புதிய கட்டத்துக்கான வேலைகளை உடனடியாக ஆரம்பிக்க முடியும்.

யாழ்.நகரப் பகுதியில் மீண்டும் டெங்கு நோய் அபாயம் அதிகரித்துள்ளதாகத் தகவல்கள் கூறுகின்றன. டெங்கு நுளம்புப் பெருக்கத்துக்குக் காரணமாக உள்ள குடியிருப்புக்கள் இல்லாத காணிகளை மாநகரசபை துப்புரவு செய்யத் தீர்மானித்திருந்தது. அந்த நடவடிக்கையை மாநகரசபை தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றதா எனக் கேட்டபோது,

குடியிருப்பற்ற வெற்றுக்காணிகளில் இதுவரை இருநூறு காணிகள் மாநகரசபையால் துப்புரவு செய்யப்பட்டுள்ளன. தற்சமயம் அந்த நடவடிக்கை இடம்பெறவில்லை. எனினும் எமது சுகாதாரப் பகுதி டெங்கு ஒழிப்பு தொடர்பில் கூடிய கவனம் செலுத்திச் செயற்படுகின்றது. குடியிருப்புக்கள் உள்ள நூற்றி இருபது காணிகள் உரிமையாளர்களைக் கொண்டு துப்புரவு செய்யப்பட்டுள்ளது. தொடர்ந்தும் வெற்றுக்காணிகளைத்துப்புரவுசெய்யும்நடவடிக்கைகளை சபை துரிதமாக ஆரம்பிக்கவுள்ளது. டெங்கு ஒழிப்புக் குறித்து பொதுமக்களும் விழிப்பாகச் செயற்படுவதன் மூலம் அதனை முழுமையாகக் கட்டுப்படுத்த மாநகர சபையுடன் இணைய வேண்டும் என்ற விருப்பத்தையும் ஆணையாளர் தெரிவித்தார்.

# வடக்கின் இடமாற்றக் கொள்கை தாமதமாவது ஏன்?

அரச நிர்வாக இடமாற்றக் கொள்கையின் பிரகாரம் வருடாந்த இடமாற்றம் (1.1.2016) என்பது பிரதான மான ஒன்றாகும்.

வடமாகாணம் 5 மாவட்டங்களைக் கொண்ட பிரதான நிர்வாக அலகாகும்.

கடந்த மூன்று மாதத்துக்கு முன்னர் வடமாகாணப் பொதுநிர்வாகச் செயலகத்தினால் இடமாற்றப் பட்டியல் வெளியிடப்பட்டது.

இதில் அபிவிருத்தி உதவியாளர், முகாமைத்துவ உதவியாளர், சாரதிகள் எனப் பல சேவையினரை உள்ளடக்கியதான நீண்ட பட்டியல் வெளியிடப்பட்டு இணையத்தளங்களிலும் வெளியாகி இருந்தது.

ஆனால் இடமாற்றம் வழங்கப்படுவதற்கான எந்த அறிகுறியும் இதுவரை தென்படவில்லை.

ஒரு சேவை நிலையத்தில் ஐந்து வருடங்கள் பூர்த்தி செய்தால், இடமாற்றம் வழங்கப்படும் என சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதிலும் வசதியானது, வசதியற்றது, மிக வசதியானது என்ற 3 அடிப்படைகள் உள்ளன.

இங்கு 7 முதல் 10 வருடங்கள் சேவை செய்தவர்கள் தொடர்ந்து வசதியான சேவை நிலையங்களில் கடமையாற்ற மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் கஷ்டப் பிரதேசங்களில் கடமையாற்றுபவர்கள் தொடர்ந்தும் கஷ்ட நிலையையே அனுபவித்து வருகின்றார்கள்.

எனவே வடக்கு மாகாணத்தின் பிரதம செயலாளர் தாம் முன்னிறுத்திய இடமாற்றத்தைச் செயற்படுத்துவதன் மூலமே அனைவரும் பரவலாக்கப்படுவர். அனைவருக்கும் சம சந்தர்ப்பம் கிடைக்கும். முதலில் தொடர்ந்து 7 வருடங்களுக்கு மேல் சேவை செய்பவர்களை இனங்கண்டு இடமாற்றம் வழங்கி வன்னியில் கடமையாற்றும் எம்மைப் போன்றவர்களுக்கு சுபீட்சமளிக்குமாறு வடக்கு பிரதம செயலாளரை மிகவும் தயவாகக் கேட்டுக்கொள்கிறோம்.

**மு.கணபதிப்பிள்ளை**
பாதிக்கப்பட்ட அலுவலர்.

# வாசகர் திருமுகம் என்றால் என்ன?


மக்களின் குறைகளை அல்லது பாதிப்புக்களை வெளிக்காண்பிக்க உதயன் ஆற்றும் சேவை அளப்பரியது என கடந்த 9.11.2015 திங்கட்கிழமை உதயனின் வாசகர் திருமுகம் என்னும் பகுதியில் ஒரு நண்பர் புகழ்ந்து எழுதியதை நானும் பார்த்தேன். அவரிடம் ஒரு கேள்வி? இந்த வாசகர் திருமுகம் பகுதியின் நோக்கம் என்ன? மக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களை, சிரமம், இடையூறு, ஏதாவதை சீர்செய்ய சம்பந்தப்பட்டவர்கள் உணர வேண்டும். அதனை ஏனைய மக்களும் அறிய வேண்டும் என்பதுதான் என நான் நினைக்கின்றேன். அவை மாநகர சபை, மாகாண சபை, அரச அதிகாரிகள், நிர்வாகிகளால் ஏற்படும் பாதிப்புக்களை மட்டுமே பிரசுரம் செய்கின்றார்கள். மக்களால் அதுவும் ஒரு சில மக்களால் செய்யப்படும் சில வேலைகள் எத்தனையோ மக்களை மிகவும்பாதிக்கின்றன. அவைகளை வெளிக் கொண்டு வர உதயனுக்கு எழுதி அனுப்பினால் அவைகளை அதில் பிரசுராவதில்லை. அதிகாரிகளின் கவனக் குறைகளை அனுப்பினால்




உடனே பிரசுரம் செய்பவர்கள், மக் களில் ஒரு சிலரது தவறுகள் குறித்து எழுதி அனுப் பினால் ஏன் பிரசுரம் செய்வதில்லை. இதுவும் ஒரு பத்திரிகை தர்மமா? அரச அதிகாரிகளும் மனிதர்கள் தானே. எனவே யார் தவறு செய்தாலும் அவைகளை வெளிக்கொண்டு வந்து சீர்செய்ய வேண்டியது வாசகர் திருமுகம் பகுதியின் கடமை அல்லவா? ஒருத லைப் பட்சம் காட்டுவது ஏனென்று அந்தப் புகழ்பாடும் நண்பர் சொல்வாரா? வாசகர்களிடம் இருந்து கருத் துக்களை எதிர் பார்ப்பதாக இடைவெளியை நிரப்ப விளம்பரம் செய்வதைவிட்டு மக்களில் ஒரு சில தரப்பினரால் ஏற்படுத்தப்படும் துன்பங்களை மக்களுக்கு எடுத்துச் சொன்னால் அவைகளையும் பிரசுரம் செய்து மக்களை விழிப்படையச் செய்யலாம் அல்லவா? நாமென்ன சன்மானமா கேட்கிறோம். நல்லதை, காலத்துக்கு ஏற்றதை, நல்ல காரியங்களை மக்களுக்கு எடுத்துரைக்கவே எமது கருத்துக்களைஅனுப்பி வைக்கின்றோம். சென்ற வாரம் கூட, மரம் நடும் மாதம் என்பதால் சும்மா குறோட்டன், றோசா செடிகளை வைக்காமல் நன்மை பயன் தரும் கன்றுகளை வைப்பதால் எமக்கும் எமது எதிர்காலச் சந்ததியினருக்கும் பிரயோசனம் கிட்டுமென்ற கருத்தை அனுப்பினேன். இடம் இருந்தும் அதனை பிரசுரிக்கவில்லை. ஏன் அது மக்கள் குறை என்பதாலா? எனவேதான் வாசகர் திருமுகம் வெளப்படுத்துவது பொதுமக்கள் மத்தியில் கொள்ளப்படும் குறைபாடா அல்லது அதிகாரிகளின் குறைபாடா என்கின்ற சந்தேகம் தோன்றியதாலே இதன் மூலம் விடை கேட்டுள்ளேன். யார் எவர் என்று பாராமல் மக்களுக்கு நல்லதைச் சொன்னால் தணிக்கை செய்யாமல் அதனையும் உதயன் பிரசுரித்து நடுநிலையாக இருக்குமென நம்புகின்றேன். வாசகர் திருமுகம் என்பதை மாற்றி நெற்றிக்கண் எனத் தலையங்கம் போட்டால் பொருத் தமாக இருக்கும் என்பது எனது கருத்து.

**- யாழ்.வீமன்.**

## கேலிச் சித்திரம்



நன்றி: மவ்பிம

# சோதனை தரும் மாரிகாலம்

வருடந்தோறும் மாரி காலம் வரும். அந்தக் காலத்தில் தொடர்மழை பெய்யும். கடும் காற்று வீசும். வெள்ளம் பெருக்கெடுக்கும். பள்ளமான பகுதிகளில் வெள்ளநீர் பெருகும்; தேங்கும். அவ்வாறான பகுதிகளிலுள்ள வீடுகளுக்குள் உள்ளேயும் மழைநீர் பாயும். சிறுகுடில்கள், கொட்டில்களில் வாழும் ஏழை மக்கள் பாதிக்கப்படுவார்கள். மழையும் - வெள்ளமும் நீடித்தால் பொது மண்டபங்கள், பாடசாலைகளில் அவர்கள் தற்காலிகமாகக் குடியேறுவார்கள். வெள்ளம் வடிந்ததன் பின் பழையபடி தம் இருப்பிடங்களுக்குத் திரும்புவார்கள்.

பள்ளமான காணிகளில் வெள்ளம் பாய்ந்து பயிர்கள் அழியும். அவற்றை நம்பிவாழும் விவசாயிகள் துன்புறுவார்கள்.

அவ்வாறிருக்க, ஆட்சியாளர்கள், அரசியல்வாதிகள், பொதுச்சேவைக்குரிய அதிகாரிகளுக்கு இந்த வருடாந்த இயற்கை நிகழ்வுகள் தெரியாமலில்லை. அவர்களும் இடர்காலத்துக்குரிய பணிகளில் இறங்குவார்கள். நிவாரணம், உதவி என்று ஏதேதோ நடக்கும்.

இதற்கிடையில் வயிற்றோட்டம், குளிர்க்காய்ச்சல் மட்டுமின்றி நுளம்புகள், ஈக்களால் ஏற்படும் தொற்றுநோய்களும் வேகமாகப் பரவத் தொடங்கும்.

பொதுவாகக் குறிப்பிடப்படும் இந்த நிகழ்வுகள் அளவு மீறும்போது - இயற்கையின் சீற்றம் கட்டுமீறும்போது - மழை யின் கொடுமை, வெள்ளத்தின் தாக்கம் மற்றும் காற்று, சூறாவளியாக - புயல்காற்றாக மாறும்போது விளையும் இடர்களை ஈடுசெய்யமுடியாமல் போய்விடுகின்றது. வீடுகள், கட்டடங்கள், மதகுகள், பாலங்கள் தகர்வதும் கிளைவிரித்த மரங்கள் பாறி விழுவதும் அவற்றால் போக்குவரத்துகள் முதற்கொண்டு பொதுமக்களின் அன்றாட வாழ்வு சீர்குலைந்து போய்விடுவதும் சர்வசாதாரணமாகி விடுகின்றன.

வருடந்தோறும் இத்தனை இடர்கள் நிகழப் போகின்றன என்பது முன்கூட்டியே தெரிந்திருந்தும் மத்திய மற்றும் மாகாண அரசுகளும் உள்ளூராட்சி சபைகளும் அவற்றை எதிர்கொள்ள முற்கூட்டியே தயாராவது மிக மிகக் குறைவு.

வெள்ளம் வந்தபின் அணைகட்டுவதுபோன்று இடர் விளைந்த பின் மக்களைக் காப்பாற்றுவதும், நிவாரணச் செயற்பாடுகளை மேற்கொள்வதும் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல.

அபரிமிதமான மழைநீரைச் சேகரிக்கும் திட்டம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. வாய்க்கால் இல்லாத இடங்களில் மழைநீர் சேகரிப்புக்கான கிடங்குகள் அல்லது ஏரிகள் அமைக்கப்படுமானால், வறட்சியின்போது நிலத்தடி நீர் வற்றிப்போவதைப் பெரும்பாலும் தவிர்க்க முடியும்.

வெள்ளப் பாதிப்புகள் ஏற்படுவதைத் தடுப்பதற்கான திட்டங்களும், செயற்பாடுகளும் அவசியமாகும். மழைநீர் வழிந்தோடுவதற்கான வாய்க்கால் சகல பகுதிகளிலும் ஒரு திட்டமிடப்பட்ட ஒருங்கிணைந்த முறையில் அமைக்கப்படுவதும் அவசியம்.

இப்பொழுது ஏற்பட்டுள்ள காலநிலை, கடந்த சில வருடங்களில் இந்தக் காலப்பகுதியில் நிலவிய நிலைமைகளுக்கு மாறாக, மோசமானதாகவே காணப்படுகின்றது. வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பான நிலைமைகளால் தாழமுக்கமொன்று உருவாகி தற்போது நாட்டின் தென் கிழக்கில் நிலைகொண்டிருப்பதாகவும், அது மெதுவாக நகர்வதால், காங்கேசன்துறையிலிருந்து திருகோணமலை, மட்டக்களப்பு ஊடாக அம்பாந்தோட்டை வரைக்கும் உள்ள கடற்கரைப் பகு திகளில் கடல் கொந்தளிப்பாக இருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கடந்த சில நாள்களாகப் பெய்த மழையினாலும் வெள்ளம் மற்றும் கடும் காற்றினாலும் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்டங்களில் ஏறத்தாழ 3 ஆயிரத்து 500 குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் -

யாழ்ப்பாணத்திலும் ஏனைய பகுதிகளிலும் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் நிவாரணப் பணிகளில் கவனம் செலுத்துமாறு முதலமைச்சர் ஏனைய அமைச்சர்களைப் பணித்திருப்பதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

மாகாண மட்டத்தில் அதிகாரிகளும் நிவாரணப்பணிகளில் ஈடுபட்டுவருகிறார்கள். காலநிலை அவதான அதிகாரிகளின் அறிவித்தல்களை கேட்கும்போது, வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் தொடர்ந்து மழை பெய்யும் வாய்ப்பிருக்கிறது.

அவ்வாறு நிகழுமானால் மழை வெள்ளத்தினால் ஏற்படக் கூடிய இழப்புகளும் பாதிப்புகளும் மேலும் மோசமாகலாம். பாதிப்புகளைப் பார்வையிடுவதும் கணிப்பீடு செய்வதும் காலத்தை விரயமாக்குவதாக இருக்கலாகாது. பாதிக் கப்பட்டு நிர்க்கதிக்கு உள்ளாகியுள்ளவர்களுக்கு உடனடி நிவாரண வசதிகளைச் செய்வது, அவசர தேவை. தாமதமின்றி விரைந்து செயற்படவேண்டிய வேளையும் இதுவே.

**பத்தி எழுத்து**

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021-492 7474, 021-492 7475, 021- 567 9933, 021-567 9944

விளம்பரம் : 021-493 1111

விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com

விளம்பரம்: advt@uthayan.com

## மனித நேயத்தை நாடியேனும் தமிழ்க் கைதிகளை விடுவிக்கலாகாதா...?

கடும் மழை, வெள்ளப்பெருக்கு இடர்களால் முழு நாடும் இயற்கையின் சோதனைக்குள்ளாகித் தவிக்கின்ற நிலையில், தமிழ் மக்கள் இந்தக் கொடுமைகளுடன் வேறுபல இன்னல்களையும் அனுபவித்து வருகிறார்கள். மழை - வெள்ள இடர்கள் இயற்கையின் விளைவு என்றால் ஏனையவை மனிதர்களால் ஏற்படுத்தப்பட்டவை.

அவற்றில் ஒன்றே, கடந்த ராஜபக்ச ஆட்சியின் போது வெறும் சந்தேகத்தின் பேரில், அவசரகால பயங்கரவாதச் சட்டங்களைப் பயன்படுத்தி, சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டு, விடுதலைக்காக உயிரைப் பணயம் வைத்து, உணவைத் தவிர்த்து போராடிக்கொண்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் நிலைமை.

தமிழ்க் கைதிகளின் உணவுத் தவிர்ப்பு உச்சக் கட்டத்தை அடைந்தபோது, தமிழ்த் தரப்புக்கள் மேற்கொண்ட தீவிரமுயற்சிகளைத் தொடர்ந்து, இந்த மாதம் 7ஆம் திகதிக்குள் ஒரு தீர்வைத் தருவதாக அறிவித்திருந்தார் ஜனாதிபதி. அவர் உரிய காலத்தில் அதனை நிறைவேற்றவில்லை. ஆனால், கைதிகளின் விரக்தி நிலை தீவிரமடைந்து மீளவும் அவர்கள் தமது போராட்டத்தை ஆரம்பித்து, தொடர்ந்து மேற்கொண்டு வருகிறார்கள்.

பல்வேறு சிவப்பு நாடா செயற்பாடுகளின் பின்னர், 31 கைதிகள் பலத்த நிபந்தனைகளின் பேரில் பிணையில் விடுவிக்கப்பட்டனர். ஏனையவர்களின் போராட்டம் தொடர்கிறது. நேற்றைய தினம் (திங்கட்கிழமை) எஞ்சியிருப்பவர்கள் தொடர்பாகத் தமது முடிவைத் தெரிவிப்பதாக ஜனாதிபதி அறிவித்திருந்தார். அதேவேளை, இந்தக் கைதிகளின் விடுதலை தொடர்பாக நேற்று அலரிமாளிகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சட்டமா அதிபர், சிறைச்சாலைகள் சீரமைப்பு அமைச்சர் ஆகியோர் கலந்துகொள்ளும் அவசர சிறப்பு ஆலோசனைக் கூட்டம் நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்தப் பத்தியை நாம், மாலையில் எழுதி முடிக்கும் வரை அந்தக் கூட்டத்தின் முடிவோ, ஜனாதிபதியின் தீர்வு பற்றிய அறிவித்தலோ கிடைத்திருக்கவில்லை.

உணவு தவிர்த்து வரும் கைதிகளின் உடல் நிலை நிமிடத்துக்கு நிமிடம் மோசமடைந்து வருவதாகத் தகவல்கள் கூறுகின்றன. 15 பேர் வரை மருத்துவமனைகளுக்கு கொண்டு செல்லப்பட்டிருப்பதாகவும் தகவல் வெளிவந்தது.

இத்தகைய நிலையில் அரசும் ஜனாதிபதியும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் செயற்பாடுகளை சுட்டிக் காட்டிக் கொண்டு காலம் தாழ்த்தலாகாது. தம் வாழ்வில் பல வருடங்களைச் சிறையில் கழித்துவிட்ட இவர்களை மனிதாபிமானத்தோடு அரசு நோக்க வேண்டும்.

போரின்போது மகிந்த அரசு போர்க்குற்றங்களுடன் மனித உரிமைகளையும் மீறியதாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. அதே மனப்போக்கில் அல்லது பாணியில் ஜனாதிபதியும் நகர்வதாக தமிழ் மக்கள் மத்தியில் இப்பொழுது சந்தேகமும், அச்சமும் துளிர்விட ஆரம்பித்துள்ளன. இதற்கு முற்றுப்புள்ளி வைப்பதுமட்டுமன்றி, தமக்குள்ள அதிகாரங்களைப் பயன் படுத்தி தர்ம சிந்தையுடன் ஜனாதிபதியும் பிரதமரும் செயற்பட வேண்டிய தருணம் வந்துவிட்டது.

தமிழ் கைதிகள் விடுதலையாவதில் முன்னாள் இராணுத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகா மற்றும் ஜனதா விமுக்தி பெரமுன தலைவர்களும் சாதகமான கருத்துக்களையே விடுத்துள்ளார்கள். ஆக, முன்னைய ஆட்சியாளரும் அவரோடு இணைந்தவர்களும் மாத்திரமே எதிர்ப்புக்குரல் எழுப்பி அரசியல் நடத்த முயல்கிறார்கள்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இன்னமும் செயற்பட வைத்திருப்பதே கைதிகள் விடுதலைக்கு முட்டுக்கட்டை என்றால், அதனை உடனடியாக நீக்கும் அதிகாரம் அரசுக்கு உண்டு. ஜெனிவாத் தீர்மானமும் அதனையே வலியுறுத்தியுள்ளது. ஜனாதிபதி முழுமனதுடன் தர்மத்தைக் காக்கவேண்டும்.

ஐ.நாவுக்கான அமெரிக்கப் பிரதிநிதி சமந்தா பவர் அம்மையார் அடுத்தவாரம் அனேகமாக இலங்கை வரவிருக்கும், இந்தச் சந்தர்ப்பத்தில் ஜெனிவா தீர்மானத்தை முன்னெடுக்கும் விதத்தில், அரசு நகர்வதாகக் காட்டுவதாகவும் கைதிகளின் விடுதலை அமையாமுடியும்.

எதுவானாலும் கைதிகளை விடுவிப்பது அரசின் மீதான தமிழ் மக்களின் ஆதரவையும் நம்பிக்கையையும் மேலும் உறுதி செய்வதாக இருக்கும் என்பதை மட்டும் அரசு மனதில் கொள்ள வேண்டும்.

# கிடைக்குமா நீதி?

உடுவிலூர் கலா

யாழிசைத்துப் பெயர் பெற்றது, எம் அழகிய யாழ்ப்பாண நகர் என்று கூறுவதில் இறுமாப்படைகிறோம். அறுசுவையுணவை விரும்தோம்பி அகமகிழ்ந்ததும், அழகிய பண்பாட்டு விழுமியங்களைப் பறைசாற்றி, தமிழின் பெருமையை உலகுக்கு எடுத்தியம்பியதும், வாளுடன் வீரமுடன் போராடி எட்டப்பரின் கொட்டமடக்கியதும், மண் விடுதலைக்காக வகைதொகையில்லா இளைஞர்களும் பருவப் பெண்களும் சமர்க்களத்தில் துப்பாக்கி ஏந்தியதும், பெறுமதி மிக்க இன்னுயிரை நாட்டுக்காக ஈந்ததும் இந்த மண்ணில்தான். ஆனால் இன்று எமது யாழ்ப்பாணம் துக்கசாகரத்தில் அமிழ்ந்து விட்டது. அன்பு, நேர்மை, புண்ணியம், விருந்தோம்பல், அரவணைப்பு என மானுடதர்மத்தைத் தயங்காது வாரி வழங்கிய யாழ்ப்பாணம், மானுடதர்மத்தையே கொன்று போட்டுவிட்டது. மானசீகமாகத் தமிழன்னைக்கு நன்றி கூறியவர்கள் நன்றியுணர்வு அற்றவர்களாக, மனிதாபிமானம் மரித்தவர்களாக, செல்லரித்துப் போன சிந்தனையாளர்களாக எமது மண்ணில் இன்று வாழ்கிறார்கள். இதன் விளைவு....

பெண்களுக்குப் பாதுகாப்பான வாழ்க்கை இல்லை. சிறுமி, பருவப்பெண், வயோதிப மாது என வயது வித்தியாசமின்றி வன்முறைகளும், வன்புணர்வுகளும் தொடர்கின்றன. படுகொலைகளால் பெண்ணினம் அழிக்கப்படுகிறது. சுயமாக வாழ வேண்டிய பெண்கள் தமது சுயத்தை இழந்து எந்நேரம் என்ன நடக்குமோ என ஏங்கிய வண்ணம் வேதனையோடு வாழும் நிலை உருவாகியுள்ளது. பாடசாலை செல்லும் சிறுமி உயிரோடு வீடு திரும்புவாளா? கற்பிக்கப்போன ஆசிரியை பாடசாலையை விட்டு திரும்பி வருவாரா? விதவைப் பெண்கள் தமது சுய உழைப்பில் நிம்மதியாய் வாழுவார்களா? எவருமற்ற வயோதிபப் பெண்கள், தமது சொந்த வீடுகளில் நிம்மதியாக ஓரிரவு துயில்கொள்ளத்தான் முடியுமா? இதுபோன்ற பல உளநெருடலான வினாக்களுக்கு விடை என்பது பூச்சியமாகவே உள்ளது.

கடந்த வாரம் மானிப்பாய் வீதி உடுவிலில் தனது சொந்த வீட்டில் தனியே வசித்து வந்த 67 வயதான வயோதிபப் பெண்மணி பலத்த சித்திர வதைக்குள்ளாகி கைகால் கட்டப்பட்ட நிலையில் படுகொலை செய்யப்பட்டிருந்தார். உடுவில் பிரதேசமே மயான அமைதியாகி விட்டது. பெண்கள் பீதியடைந்த வர்களாக, தமக்கான பாதுகாப்பற்ற நிலையை எண்ணிப் புலம்பிய வண்ணம் உள்ளார்கள். இந்த வயோதிபப் பெண்மணி எதற்காகக் கொலை செய்யப்பட்டார்? கொலைகாரன் யார்? என்பது புரியாத புதிராகவே உள்ளது.


பெண்களுக்கு பாதுகாப்பு இல்லையா? கடந்த காலங்களில் வேற்று இனத்தவரின் பல வன்புணர்வுச் செயல்களை (போராட்ட நாள்களில்) சந்தித்தோம். அதற்காகக் குரல் கொடுத்தோம். ஆனால், இன்று வேலியே பயிரை மேய்கிறது. எமது பெண்களை எம்மினத்து ஆண்களே வன்முறை, வன்புணர்வு, படுகொலை என சகலதையும் செய்கின்றனர். இன்னுமொரு வேதனையான, அருவருக்கத்தக்க ஒரு கசப்பான உண்மையையும் இங்கு பதிவு செய்துதான் ஆகவேண்டும். பெண்களை வன்புணர்வு, படுகொலையின் பின் நிர்வாணமாகக் காட்சிப்படுத்துவது எவ்வளவு வேதனை. சீ.... என்ன மனிதர்கள்? ஒவ்வொரு பெண்ணும் வாழ்ந்த வாழ்க்கையைச் சற்றேனும் எண்ணிப்பாராத ஈனப்பாவிகளாக இந்த வேலைகளைச் செய்யும் கொடியவர்களுக்கு அழிவேயில்லையா? இவர்களை அழிக்க முடியாதா?

கொட்டும் மழையும், இடி மின்னலும் வெளியே எவரும் வெளியேறிச் செல்ல முடியாத நிலையில் கொலைஞர்கள் பெண் கனைக் கொல்களத்தில் கொலை செய்கிறார்கள். வித்தியாவின் கொலைக்குத் தீர்ப்புக் கிடைத்திருந்தால், அதன் பின்னர் இத்தனை பெண்கள், சிறுமிகள் பலிக்கடா வாகியிருப்பார்களா? பெண்களின் வாழ்க்கையைச் சூனியமாக்கும், அழித்தொழிக்கும் நாசகாரர்கள் உயிரோடு வாழ்ந்து கொண்டிருப்பது நியாயமா? உடலை வருத்தி உழைத்துண்ணத் தெரியாத, உலுத்துக் கெட்டவர்கள், அடுத்தவர்கள் வருந்தி, வியர்வை சிந்தி உழைத்துத் தேடிய செல்வத்தை களவாடக் கள்வர்களாக மாறி, கொலையும் செய்கின்றனர். சரி, பொருள் பண்டங்கள் எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு போகட்டும் என்றால், எதற்காகப் பெண்களைக் கொலை செய்கிறார்கள்? இந்த நிலை தொடருமானால், இந்த நாட்டில் பெண்கள் வாழமுடியாத நிலை உருவாகும்.

எந்தப் பெண்ணும் தனக்கென ஒரு கொள்கையோடு தனது சுயவிருப்போடு வாழும் உரித்துடையவள். அவளது வாழ்வை தட்டிப் பறித்தலோ, அவளது உடம்பில் தொடுகையை ஏற்படுத்தவோ, அல்லது அவளது உணர்வுகளை, உயிரைக் கொலை செய்வதோ முடியாத காரியம். எந்தவொரு பெண்ணாவது எந்தவொரு ஆணையும் இதுவரை இப்படி எந்தவொரு அநியாயமும் செய்ததுமில்லை. வாழ்வை முடிந்ததுமில்லை.

வெளிநாடுகளில் பெண்களுக்கென உருவாக்கப்பட்ட சட்டங்களை ஒரே ஒரு தடவையில் எமது நாட்டுச் சட்டங்களோடு சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். சட்டங்களில் மாற்றங்கள் கொண்டு வரப்பட வேண்டும். பெண்களின் வாழ்வுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்த, சட்டமாற்றம் ஒரு கட்டாயத் தேவையாகும். பெண்கள் அமைப்புகள் பாரபட்சமின்றி குரல் கொடுக்க வேண்டும். பெண்களுக்கான அநியாயங் களுக்கு தண்டனை பெற்றுக்கொடுக்கத் தொடர்ந்து செயற்பட வேண்டும்.

ஆணினமே, பெண்ணினத்தை எதற்காக அசிங்கப்படுத்துகிறாய்? கொல்களத்தில் சாவுக்காய் கட்டப்பட்ட ஆவினங்களாய், கொலைஞர்கள் எந்நேரமும் வரலாம் என்ற ஏக்கத்தோடு நித்திரையின்றி வாழ்கின்ற பெண்ணினத்தை ஒருதடவை சிந்தித்துப்பார். உன்னைப்பெற்ற தாயும் பெண். நீ வன்புணர்வு செய்து படுகொலை செய்யும் பெண்ணும் ஒரு பெண் என்பதை ஏன் மறந்து வாழ்கிறாய்? ஆண் என்பதற்காகப் பெண் களை அழித்திடலாம் என்ற உனது எண்ணம் பகற்கனவாகவே கலைந்துவிடும். நீ அழிந்து விடும் நாள் வெகுதூரத்திலில்லை. இனியாவது பெண்களை நிம்மதியாக வாழவிடு. நீயும் மனிதனாக வாழ முற்படு. மானுடதர்மம் கொலை கார ஆண்களாய் மரித்துப் போகாதா? பெண்களுக்கு நீதி கிடைக்குமா? புலரும் பொழுது பெண் விடியலுக்காய் புலருமா? ஆண்களே மனிதத்தோடு வாழ்வீர்களா?



# கூட்டமைப்பை பிளவுபடுத்தும்



# முயற்சிகள் பயன் தருமா?

■ சேரலாதன்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் எப்படியாவது பிளவை ஏற்படுத்தியே தீரவேண்டும் என்ற எண்ணத்துடன் சில தீயசக்திகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது. எங்கு எது நடந்தாலும், அந்த விடயத்துடன் கூட்டமைப்பைத் தொடர்புபடுத்துவதில் இவர்கள் முனைப்புடன் காரியமாற்றுவதும் தெளிவாகத் தெரிகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வடக்குக் கிழக்கில் வசிக்கின்ற தமிழ் மக்களின் ஆதரவு எப்போதுமே உண்டு. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் இது நிரூபணமானது. பல்வேறு தரப்பினர் கூட்டமைப்புக்கு எதிராக வரிந்து கட்டிக்கொண்டு தீவிரமானதும், வரம்பை மீறியதுமான பரப்புரைகளில் ஈடுபட்ட போதிலும் கூட்டமைப்பின் வெற்றியைத் தடுப்பதற்கு அவர்களால் முடியவில்லை. மக்களுக்கும் அந்த அமைப்புக்கும் இடையேயான பிணைப்பையும் அவர்களால் தகர்க்க முடியவில்லை.

தற்போது வடக்கு மாகாண முதலமைச்சருக்கும், கூட்டமைப்புக்குமிடையே சிண்டு முடித்து பிளவை ஏற்படுத்துவதில் சிலரால் தீவிர கவனம் செலுத்தப்படுகின்றது. வடபகுதி மக்களுக்குப் பரிச்சயமில்லாத முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் கூட்டமைப்புத் தலைமையின் ஆதரவுடன் அந்தப் பதவியில் அமர்ந்தவர். மாகாணசபைத் தேர்தலின்போது அதிக விருப்பு வாக்குகளையும் மக்கள் அவருக்கு அளித்திருந்தனர். கூட்டமைப்பின் மீதுள்ள நம்பிக்கை காரணமாகவே மக்கள் அவ்வாறு நடந்துகொண்டனர். ஆனால் கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது, கூட்டமைப்புக்கு ஆதரவாக முதலமைச்சர் பரப்புரைகளில் ஈடுபடவில்லை. தாம் பரப்புரைகளில் ஈடுபடப்போவதில்லை என அவர் பகிரங்கமாகவே அறிவித்திருந்தார். இந்த அறிவிப்பானது கூட்டமைப்பு ஆதரவாளர்கள் மத்தியில் பெரும் பதற்றத்தையும், கவலையையும் ஏற்படுத்தியிருந்தது. மாகாணசபைத் தேர்தலுக்கான பரப்புரையின்போது மேடைகள் தோறும் ஏறி உரையாற்றிய முதலமைச்சரால் நாடாளுமன்றத் தேர்தலிலும் அவ்வாறு ஏன் நடந்துகொள்ள முடியவில்லை என்பது



புரியாத புதிராகவே இன்றளவும் உள்ளது.

இந்த நிலையில்தான் தமிழர் பிரச்சினையென எது வந்தாலும் அதில் கூட்டமைப்பின் மீது பழியைப் போடுகின்ற நிலை காணப்படுகின்றது. தற்போது தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பிலும் கூட்டமைப்பின் மீதே பழி போடப்படுகின்றது. இந்தக் கைதிகளின் விடுதலை தொடர்பாகக் கூட்டமைப்பு நீண்டகாலமாகவே முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களும் சிறைச்சாலைகளுக்குச் சென்று கைதிகளை அவ்வப்போது பார்வையிட்டு அவர்களின் நிலை தொடர்பாக விசாரித்தும் வருகின்றனர். மேலும் சம்பந்தன் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருடன் கைதிகளின் விடுதலை தொடர்பாக அவ்வப்போது கலந்துரையாடி வருகின்றார்.

மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் இந்த நிலை காணப்படவில்லை. சர்வாதிகார ஆட்சி என்பது மட்டுமல்லாது தமிழர் விரோத ஆட்சியும் அன்று இடம்பெற்றதால் தமிழர்களால் எதுவுமே செய்ய முடியாத நிலை காணப்பட்டது. இன்று நல்லாட்சி ஒன்று மலர்ந்துள்ளதாகக் கூறப்படும் நிலையில் தமிழர்களின் பிரச்சினைகளுக்கு அரசு தீர்வைத்தரும் என்ற நம்பிக்கை ஏற்பட்டது. அதற்கு ஏற்றாற் போன்று அரசின் தலைவர்களால் சில உறுதிமொழிகள் வழங்கப்பட்டன. இதில் பிரதானமானது அரசியல் கைதிகளின் விடுதலையாகும். ஆனால் அந்த உறுதி மொழிகள் காற்றோடு காற்றாகப் பறந்து சென்று விட்டன. நவம்பர் 7 ஆம் திகதி அரசியல் கைதிகளுக்கு விடுதலை என்று கூறப்பட்டபோதிலும் அதுகூடச் சாத்தியமாகவில்லை. இந்தக் கைதிகளின் விடுதலை தொடர்பாக கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தம்மாலான முயற்சிகளை மேற்கொண்டிருந்தார். ஜனாதிபதியுடனும், பிரதமருடனும் இது தொடர்பாகப் பல சுற்றுப் பேச்சு வார்த்தைகளை நடத்தினார்கள். அரசின் சார்பில் நம்பிக்கையான உறுதிமொழிகள் வழங்கப்பட்ட போதிலும், அவை வழக்கம் போலவே மீறப்பட்டு விட்டன. இதற்குக் கூட்டமைப்புத்தான் காரணமெனச் சிலர் கூச்சலிடுவதில் எவ்வித அர்த்தமும் கிடையாது. ஏனென்றால் கைதிகளின் விடுதலை என்பது அவர்களின் கரங்களில் இல்லை.

மேலும் வடக்கு முதலமைச்சரை முன்னிலைப்படுத்தி கூட்டமைப்பினுள் பிளவை ஏற்படுத்த வேண்டுமெனச் சிலர் தீர்மானித்துச் செயலிலும் இறங்கியுள்ளதைக் காண முடிகின்றது. கூட்டமைப்பிலிருந்து முதலமைச்சரைப் பிரித்து எடுத்து விட்டால் கூட்டமைப்புப் பலவீனமடைந்து விடுமென இவர்கள் தவறாகக் கணித்துள்ளனர். கூட்டமைப்பு என்பது பல இலட்சம் ஆதரவாளர்களால் உருவாக்கப்பட்டதொரு அமைப்பாகும். இதற்குப் பெரியதொரு அடித்தளம் உள்ளது. அதன் பலமான அத்திபாரமாக இலட்சியவெறி படைத்த ஆதரவாளர்கள் உள்ளனர். ஆகவே கூட்டமைப்பு என்ற கூட்டத்தை இலகுவில் அழித்துவிட முடியாது. சென்ற மாகாணசபைத் தேர்தலுடன் கூட்டமைப்பில் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட முதலமைச்சர் விக்னேஸ்வரனைப் பிரித்து எடுப்பதால் கூட்டமைப்புக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்பட மாட்டாது. அத்துடன் சிலர் கூறுவது போன்று அவரை உடனடியாகத் தமது தலைவராக ஏற்றுக் கொள்வதற்கு தமிழ் மக்கள் விரும்புவார்கள் எனவும் சொல்ல முடியாது.

ஆகவே கூட்டமைப்பு என்ற பெரும் விருட்சத்தை வெட்டி



வீழ்த்துவதன் மூலமாகத் தமது குறுகிய அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றிக் கொள்வதற்குச் சிலர் முயற்சி செய்வது அவர்களின் அறிவீனத்தையும், குறுகிய நோக்கத்தையுமே சுட்டி நிற்கின்றது. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமது நோக்கம் நிறைவேறாது மூக்குடைபட்ட இவர்கள் குறுக்கு வழிகளில் சென்றாவது தமது இலட்சியங்களை அடைந்து விடாலாமென எண்ணுகின்றனர். ஆனால் இது ஒருபோதுமே நிறைவேறப் போவதில்லை. தமிழ் மக்களும் அதை அனுமதிக்கவே மாட்டார்கள். சுயநலம் கொண்ட அரசியல்வாதிகளை அவர்கள் இனிமேல் ஏறெடுத்தும் பார்க்க மாட்டார்கள். சுயநலவாதிகள் மீண்டும் ஏமாறப்போகின்றனர் என்பதே நிஜம்.

# கர்ப்பிணிகளுக்கு என்னென்ன விற்றமின்கள் தேவை?



கர்ப்பமாக இருக்கும்போது பெண்கள் விற்றமின்கள் நிறைந்த உணவுகளை அதிகம் சாப்பிட வேண்டும். ஏனெனில் வயிற்றில் வளரும் குழந்தையின் வளர்ச்சிக்கு விற்றமின்கள் மிகவும்இன்றியமையாதவை. தினமும் கர்ப்பிணிகள் 5 வகையான விற்றமின்களைத் தவறாமல் எடுத்துக் கொள்ள வேண்டும். அதில் குழந்தைகளில் எலும்புகள் மற்றும் பற்களின் வளர்ச்சிக்குத் தேவையான விற்றமின் 'ஏ', நோயெதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கும் விற்றமின் 'சி', கல்சியம் மற்றும் பொஸ்பரஸ் சத்துக்கள் உடலில் உறிஞ்சுவதற்குத் தேவையான விற்றமின் 'டி'. குழந்தையின் உடலில் குருதிச் சிவப்பணுக்கள் மற்றும் தசைகள் ஆரோக்கியமாக இருப்பதற்கு விற்றமின் ஈ மற்றும் கர்ப்பிணிகளுக்கு குருதிச்சோகை, குறைந்த நிறையுடன் பிறக்கும் குழந்தை, குறைப்பிரசவம் போன்றவற்றை தவிர்க்க விற்றமின் 'கே' போன்றவை குறிப்பிடத்தக்கவை.

1. வாரத்துக்கு ஒரு முறை முட்டையை வேக வைத்துச் சாப்பிட்டு வந்தால், கருவுக்கு நல்ல அளவில் விற்றமின் 'ஏ' கிடைக்கும்.

2. கர்ப்பிணிகள் கரட்டை அப்படியே அல்லது ஜூஸ் போட்டுக் குடித்து வருவது நல்லது. ஆட்டு ஈரலை நன்கு வேக வைத்து, மிளகுத் தூள் மற்றும் உப்புச் சேர்த்துச் சாப்பிட்டுவருவது நல்லது. ஏனெனில் இதிலும் விற்றமின் 'ஏ' சத்து அதிகம் உள்ளது.

3. கர்ப்பிணிகள் அவ்வப்போது ஸ்ட்ராபெர்ரியை மில்க்கேக் போன்றோ அல்லது அப்படியே சாப்பிட்டு வந்தாலோ, அதில் உள்ள விற்றமின் 'சி' சத்தை நன்கு பெறலாம்.

4. தோடம்பழத்தில் விற்றமின் 'சி' சத்து நிறைந்திருப்பது அனைவரும் நன்கு அறிந்த விடயமே.

5. கொய்யாப்பழத்திலும் விற்றமின் 'சி' அதிகம் நிறைந்துள்ளது. எனவே தினமும் ஒரு கொய்யாப்பழத்தைக் கர்ப்பிணிகள் சாப்பிடும் பழக்கத்தைக்கைக் கொள்ள வேண்டும்.

5. தக்காளியில் விற்றமின் 'சி' சத்து அதிகம் உள்ளது. சிலருக்கு குடைமிளகாய் மிகவும் பிடிக்கும். அவ்வாறு குடைமிளகாய் சாப்பிடுவதாக இருந்தால், சிவப்பு நிறக் குடைமிளகாயை வாங்கிச் சாப்பிடுங்கள்.

6. நெத்தலி மீன்களில் விற்றமின் 'டி' சத்து அதிகம் உள்ளது. ஆனால் கர்ப்பிணிகள் இதனை அளவாகச் சாப்பிட வேண்டும். கானாங்கெளுத்தி மீன், உடலுக்கு மிகவும் நல்லது.

7. எனவே கர்ப்பிணிகள் அந்த மீனை வாரத்துக்கு ஒரு முறை சாப்பிடுவது, 'விற்றமின் டி' சத்தை அதிகரிக்கும்.

8. உடலில் விற்றமின் 'ஈ' சத்தை அதிகரித்து, குழந்தையையும் ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள சாதாரண எண்ணெய்க்கு பதிலாக இனிமேல் ஒலிவ் எண்ணெய்க்கு மாறுங்கள். ஏனெனில் ஒலிவ் எண்ணெயில் விற்றமின் 'ஈ' சத்து சுமாரான அளவில் உள்ளது.

## நாளை

கார்த்திகை-2 புதன்கிழமை (18.11.2015)

திதி: ஸப்தமி மு.இ. 09.54 வரை
நட்சத்திரம் : திருவோணம் மாலை 5.58 வரை
சுபநேரம்: 04.38-06.08 வரை
இராகு காலம்: 12.08-01.38 வரை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### வெற்றியின் இரகசியம்

நமது மனநிலைக்கு தகுந்தவாறு உலகம் காட்சியளிக்கிறது. நமது எண்ணங்களே உலகத்தை அழகுடையதாகவும், அவலட்சணமுடையதாகவும் ஆக்குகின்றன. ஒருவன் நெருப்பினுள் கூட தூங்கி ஓய்வெடுக்க முடியும். ஆனால், வறுமையில் ஒருவனால் கண்மூடித் தூங்குதல் என்பது முடியாது. குறிக்கோளை மட்டும் கருதாமல், அதை அடையும் வழியையும் சிந்திக்கவேண்டும். இதில் தான் வெற்றியின் இரகசியமே அடங்கி கிடக்கிறது..........

## மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 70 | – | 80 | 80 | 80 | 40 | 40 |
| கத்தரி | 170 | 140 | 200 | 180 | 100 | 120 | 90–100 |
| கரட் | 100 | 120 | 160 | 120 | 140 | 200 | 250 |
| மரவள்ளி | 50 | 50 | – | 50 | 50 | – | 30 |
| பயிற்றை | 200 | 100 | 200 | 400 | 120 | 220 | 200 |
| பாகல் | 300 | 400 | 400 | 600 | 340 | 300 | 300 |
| கருணைக்கிழங்கு | 120 | 100 | 100 | 120 | 80 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 150 | 140 | 160 | 160 | 140 | 160 | 150 |
| சி.வெங்காயம் | 120 | 140 | 160 | 150 | 120 | 200 | 50 |
| பூசணி | 50 | 50 | 60 | 50 | 50 | 80 | 140 |
| தக்காளி | 140 | 160 | 160–200 | 140 | 160 | 200 | 40–50 |
| வாழைக்காய் | 60 | 50 | 60 | 60 | 70 | 70 | 50 |
| கீரை | 40 | 50 | 50 | 30 | 40 | 40 | 50 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | – | 30 | 40 | 10 |
| பச்சை மிளகாய் | 800 | 800 | 1000 | 600 | 600 | 300 | 80 |
| புடோல் | 140 | 140 | 120 | 120 | 120 | 120 | 120 |
| கோவா | 160 | 140 | 160 | 160 | 140 | 160 | 150 |
| வெண்டி | 120 | 120 | 120 | 120 | 120 | 50 | 100 |
| போஞ்சி | 240 | 240 | 300 | 280 | 240 | 320 | 100 |
| லீக்ஸ் | 150 | 160 | 160 | 140 | 140 | 140 | 150 |
| தேங்காய் | 50 | 50 | 50 | 60 | 45 | 50 | 40 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 120 | 110 | 120 | 120 | 120–130 |
| தேசிக்காய் | 400 | 400 | 400 | 350 | 320 | 300 | 250 |
| வல்லாரை | 30 | 20 | 10 | 20 | 20 | 20 | 12 |
| கறிமிளகாய் | 200 | 200 | 300 –400 | 280 | 350 | 320 | 350 |
| இராசவள்ளி | – | – | – | – | – | – | – |
| முருங்கைக்காய் | 250 | 200 | 400 | 120 | 240 | 200 | 300 |

## கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்

| | சாவகச்சேரி | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | யாழ்ப்பாணம் | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 500 | 600 | 600 | 700 | 700 | 500 |
| நண்டு | 200 | 400 | 200 | 400 | 300 | 400 |
| கணவாய் | 600 | 600 | 400 | 600 | 700 | - |
| பாரை | 400 | 500 | 350 | 600 | 500 | 300 |
| சுறா | - | 500 | 350 | 650 | 800 | 370 |
| சீலா | 300 | 400 | 300 | - | 400 | 250 |
| விளை | 400 | 400 | 260 | - | 500 | 200 |
| முரல் | 300 | 300 | 250 | 400 | 400 | - |
| கும்பிளா | 400 | 350 | 200 | - | 300 | 200 |
| கிழாக்கன் | 500 | 800 | - | 400 | - | - |
| ஓரா | 300 | 300 | 220 | 400 | - | 200 |
| திரளி | 100 | 200 | 150 | 300 | 200 | - |
| நகரை | 200 | 200 | 100 | - | 200 | 200 |
| சூடை | 100 | 150 | 50 | - | 100 | - |
| ஒட்டி | 200 | 150 | 180 | 200 | 200 | 100 |
| திருக்கை | 200 | 300 | 150 | - | 200 | 110 |
| பாலை | 300 | 200 | - | 300 | - | - |
| வாழை | - | 100 | 150 | 100 | - | - |
| கொய் | 500 | 100 | 40 | 400 | 50 | - |
| மதனம் | - | 200 | 130 | - | - | 150 |

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 8 | | 5 | | | | | |
| | 2 | 7 | | | | | | 8 |
| | 5 | | | | 7 | 4 | | |
| | | 6 | | 5 | 8 | 1 | 9 | |
| | | | 6 | 9 | 3 | | | |
| | 7 | 9 | 4 | 1 | | 3 | | |
| | | 4 | 3 | | | | 1 | |
| 7 | | | | | | 5 | 4 | |
| | | | | | 4 | | 7 | |

நேற்றைய சுடோக்குக்கான விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 3 | 6 | 1 | 5 | 2 | 4 | 8 | 9 |
| 9 | 1 | 4 | 8 | 3 | 6 | 5 | 7 | 2 |
| 2 | 8 | 5 | 9 | 7 | 4 | 3 | 1 | 6 |
| 1 | 4 | 9 | 6 | 8 | 5 | 7 | 2 | 3 |
| 5 | 2 | 3 | 7 | 4 | 9 | 8 | 6 | 1 |
| 8 | 6 | 7 | 3 | 2 | 1 | 9 | 5 | 4 |
| 6 | 7 | 8 | 2 | 9 | 3 | 1 | 4 | 5 |
| 3 | 5 | 2 | 4 | 1 | 8 | 6 | 9 | 7 |
| 4 | 9 | 1 | 5 | 6 | 7 | 2 | 3 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப் பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



# உங்கள் பிறந்த மாத பலன்கள் எப்படி?



## செப்ரெம்பர்

சூரியனுக்கு மிக அருகில் உலவும் புதனின் உச்சமனையாகிய கன்னி ராசியில் சூரியன் சஞ்சரிக்கும் போது கன்னித் திங்கள் என்றும்– செப்ரெம்பர் மாதமெனவும் அழைக்கின்றோம். புதன் என்றால் தெரிந்தவன் என்று பொருள். இதனால் தான் புதனைக் கல் விக்காரகன் அல்லது, வித்தியாகாரகன் என்று சோதிடப்புலவர்கள் அழைத்தனர் போலும்! சூரியனுக்கு வெகு அருகாமையில் ஒளிர்வதோடு மிகத்துரிதமாய் மூன்றே மாதங்களுக்குள் சூரியனைச் சுற்றிவரும் ஆற்றலுடைய கிரகமாகையால் சூரியனைப் பற்றி நன்கு தெரிந்தவன் புதன். செப்ரெம்பர் மாதத்தில் பிறந்தவர்கள் எதையும் கற்றறியும் பாண்டித்தியம் உடையவர்களே. அதுவும் துரிதமாய்க் கற்றுணரக்கூடியவர்கள். சிறுவயதிலேயே அரிய பெரிய நூல்களைப் புரட்டிப் பார்த்து விடுவார்கள். செப்ரெம்பர் மாதத்தில் தோன்றிய இவர்கள் மிகவும் அதிர்ஷ்டசாலிகளே!

**தோற்றம்:**
நடுத்தர உயரம், வட்டமான தலை, அகன்ற முகம். குறைந்த ரோமம், உயர்ந்த அகன்ற நெற்றியை உடையவர். நெற்றியில் கோடுகள் இருக்கும். புருவங்கள் வளைந்தும் ஒன்று சேர்ந்தும் காணப்படும். வரிசையான பற்கள் உடையவர். மேலுதடு குவிந்தும் கீழுதடு முன் சரிந்தும் காணப்படும். தடித்த கழுத்துடையவர். முகபாவனையில் இவர் மேதாவி என்பதைக் காட்டும்.

**குணபாவங்கள்:**
பல நூல்களை நன்றாகப் புரட்டியவர்களாகையால் தர்க்கம் பேசுவதிலும் சமர்த்தர். குதர்க்கம் செய்வதிலும் வித்தகர். 'கண்டதைக் கற்கப் பண்டிதனாவான்' என்பது போல, 'கூற்றுவன் செய்ததை மாற்றுபவன் கொற்றவனாவான்!' என்பது இவர்களுடைய கருத்து. அரிய நூல்களைச் சேகரிப்பர். சீக்கிரத்தில் அரசயோகத்தை அடைந்திடுவர். கற்றதை மாற்றிப் பேசிப் போற்றுதலைப் பெறுவர். மற்றவர்களைப் போல நடிப்பதில் வெகு சமர்த்தர். படிக்காத மேதைகளும், படித்த பட்டதாரிகளும் விஞ்ஞானிகளும் மெய்ஞானிகளும் இந்த மாதத்தில் பிறந்தவர்களே. ஆழ்ந்து சிந்திக்காமல் எந்த விவகாரங்களிலும் தலையிடார். எதையும் திறம்படச்செய்யவேண்டுமென்ற கொள்கை உடையவர். மற்றவர்கள் செய்யும் குற்றங் குறைகள் முதன்முதலில் இவர்களின் கண்களுக்குத்தான் தோன்றும். ஒளிவு மறைவின்றி சாமர்த்தியமாக ஆனால், அழுத்தம் திருத்தமாக எடுத்துக் கூறிடுவர். மற்றவர்கள் சாதாரணமாகப் புரியக்கூடிய தவறுகள் ஏற்படாவண்ணம் தாம் நடந்துகொள்வர். மற்றவர்களுடைய முன்னேற்றத்துக்குத் தன்னலமற்றுப் பாடுபடுவர். தம்முடைய திறமையினாலும் உழைப்பினாலும் உயர்ந்த அந்தஸ்தைத் தேடியடைந்திடுவர். பிறரைப் புகழ்ந்தோ அல்லது குறுக்கு வழிகளைக் கடைப்பிடித்தோ காரியத்தைச் சாதிப்பது இவர்களுக்குப் பிடிக்காது. இயற்கையை ரசிப்பவர். சுவையான பண்டங்களைப் புசிப்பவர். நல்ல பேச்சாளர். கலாரசிகர், நடிப்பாற்றல் உடையவர். கற்பனா சக்தியும் கருத்து நிறைந்த தத்துவங்களடங்கிய கவி பாடுவதிலும், தொடர் கதைகளையும், சிறு கதைகளையும் எழுதுவதிலும் நிகரற்று விளங்குவர். இவருக்கெனத் தனி நடையை அமைத்துக்கொள்வர். மற்றவருக்குச் சிறந்த வழிகாட்டியாகவும் விளங்குவர். சந்தர்ப்பத்துக்கேற்றவாறு தமது கொள்கைகளை மாற்றிக்கொள்வர். காரியத்தை எளிதில் சாதித்து முடிக்கும் சக்தி வாய்ந்தவர். நயமாகப் பேசி மற்றவர்களைத் தம்வசமாக்கிக் கொள்வர்.
சுறுசுறுப்பானவர்கள். ஆனால், சுகஜீவிகள், நேரத்தை வீணாக்காமல் இயந்திரம் சுழல்வது போல் ஒரே இடத்தில் நிலைத்துக் கால வரம்புக்குள் செய்வனவற்றைத் திருந்தச் செய்வர். சிறிய முயற்சியில் பல காரியங்களைச் சாதித்திடுவர்.

**பிணியும், மருந்தும்:**
இரவு நேரங்களில் அதிக நேரம் விழித்திருக்க நேரிடுவதாலும் பகல் நேரங்களில் நேரம் கழித்து உணவு உட்கொள்வதாலும் ஜீரண கோசத்தில் இவருக்குச் சில கோளாறுகள் இயற்கையாகவே தோன்றிடும். நரம்புத்தளர்ச்சி, பலவீனம் போன்றவையும் ஏற்படலாம். ஜீரண கோசத்தில் புளிப்பு ரசங்கள் அதிகம் சுரப்பதால் உணவு உட்கொண்ட பின் வயிற்றில் அசதியும், வலியும் ஏற்படும். சுமார் ஒரு மணி நேரம் அல்லது இரண்டு மணி நேரம் சற்று சங்கடமாகவே இருந்திடும். இவர் அவ்வப்போது தேநீர், கோப்பி அருந்துவது ஆகாது. கூடுமான வரையில் புளிப்பு, காரம் இரண்டையும் குறைத்துக் கொள்வது நல்லது. பச்சை மிளகாய் அறவே நீக்கப்பட வேண்டும். காரத்துக்கு மிளகையும், புளிப்புக்கு இலேசான எலுமிச்சை ரசமும் சேர்த்துக் கொள்வது மிகச் சிறந்ததாகும். பகலில் முன் நேரத்திலும் அதாவது உச்சி நேரத்துக்கு குறைந்தது இரண்டு மணிக்கு முன்பாவது பகலுணவு எடுத்துக் கொள்வது சிறந்தது. இரவிலும் சீக்கிரமாகவே எண்ணெய் சேராத சிற்றுண்டிகளை உட்கொள்வது நல்லது. பால், தயிர், மோர், நெய் முதலியவை தவறாமல் சேர்க்கப்பட வேண்டியவை. கீரை, தக்காளி நித்தியமும் சேர்க்க வேண்டியவை. கத்தரிக்காய், முட்டைக்கோஸ், மாங்காய், உருளைக்கிழங்கு முதலியவை ஆகாத வஸ்துகளாகும். இரவு நேரங்களில் தூக்கம் கெடாமல் இருப்பின் இவருக்கு வயிற்றுவலி தானாகவே நின்றுவிடும். பத்தியம் தவறியவர்கள் சத்திர சிகிச்சைக்கும் உள்ளாக நேரிடும்.
இவருக்கு எளிதில் நோய் பற்றுவது கடினம். அதிகம் படித்துப் படித்து மூளையைக் குழப்பிக் கொள்வர். பித்தம் தலைக்கேறிடும். பித்துப் பிடித்தவர் போல் பிறர் புலனுக்குத் தோற்றமளித்திடுவர். தினசரி செய்தித்தாள்களை ஆதியோடு அந்தம் படித்து முடிக்காமல் உறங்கமாட்டார்கள். தினசரி முக்கியமான பிரசங்கங்கள் எங்கிருந்தாலும் சென்றிடுவர். நட்புடன் ஒழுகுவதற்கு நல்லவர்கள். இவரிடம் கற்க வேண்டிய அம்சங்கள் அனேகம். ஆனால், இவரைப்போல் நடப்பதற்கும், நடிப்பதற்கும், சீக்கிரத்தில் சமூக வட்டாரத்தில் உயர்ந்த அந்தஸ்தை அடைவதற்கும் மற்ற மாதங்களில் பிறந்தவர்களால் முடியாது.

**பலமும், பலவீனமும்:**
அறிவில் சிறந்தவர். பல ஆராய்ச்சித் தத்துவங்களைத் தாமும் கற்று, பிறருக்கும் போதித்திடுவர். அவ்வாறே செயலிலும் ஈடுபடுவர். சமூகசேவையில் கைம்மாறு கருதாது தொண்டு புரிவர். இவரால் முடியாத காரியங்கள் இவ்வுலகில் இல்லை எனலாம். அற்புத சக்தி வாய்ந்தவர். இருப்பிடத்திலிருந்துக்கொண்டே பலரிடத்தில் பல துறைகளில் பல காரியங்களைச் சாதித்திடுவர். தம்மைப் பலர் கேலியாகவும், கிண்டலாகவும் பேசினாலும், பொருட்படுத்தார். சிறுவயதிலேயே முதிர்ந்த உலக அனுபவமும் உடையவராதலால் எவரிடத்தில் எவ்வாறு பழக வேண்டுமோ அவ்வாறு நடந்துக் கொள்வர். பழைய சம்பிரதாயங்களில் முழு நம்பிக்கையுடையவர். புதிய கருத்துகளுக்கு இவர் எளிதில் இடம்கொடார். என்றும், முன்னேற்றப் பாதையிலேயே முன்னேறிச் செல்வர். ஆனால், இவருடைய முன்னேற்றத்துக்கு அடிக்கடி இவருடைய மனைவி மக்கள் தடைவிதிப்பர். சிந்தித்துச் சீர்தூக்கிப் பார்த்த பிறகுதான் காரியத்தில் தைரியமாக ஈடுபடுவர். சில சமயங்களில் மனக்குழப்பமும் மனோவியா கூலமும் இவரைப் பெரிதும் பாதிக்கும். காசைத் துச்சமாகச் செலவிடுவர்.
நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள் கைவிட்டபோது, இவரை அணுகினால் எண்ணிய விவகாரங்கள் சித்தியடையும். மற்றவர்களால் இயலாத காரியங்களை இவரிடத்தில் ஒப்படைத்தால் அதிசயிக்கும் அளவுக்கு வெற்றிகிட்டிடும்.

**வாழ்க்கைத் துணைவி:**
ஜனவரி, மே மாதத்தில் பிறந்தவர்கள் வாழ்க்கைத் துணையாகவோ கூட்டாளியாகவோ அமைவாராயின் வாழ்க்கையில் சுகமும், செல்வமும், செழிக்கும். அமைதி நிலவிடும். ஏப்ரல், ஒகஸ்ட், நவம்பர் மாதங்களில் பிறந்தவர்கள் அமைவாராயின கஷ்டமும், நஷ்டமும், ஓயாத தொல்லையும் நேரிடும்.

**தொழில்:**
அதிக மூலதனமில்லாமலேயே பெரும் நிதியைச் சம்பாதிக்கக்கூடிய வாய்ப்பைத் தேடிக்கொள்வர். வணிகத்துறையிலும், கலைத்துறையிலும் இவர் புகழுடன் விளங்குவர். தரகு முகவர்களாகவும், சுய தொழில் ஸ்தாபகர்களாகவும், அரசியல் வாதிகளாகவும், அரசின் பிரதிநிதியாகவும், தேசத்தூதுவர்களாகவும் சிறந்து விளங்குவர். வாழ்க்கையில் எதிர்ப்புகள் நிறைந்திருக்கும். இவரைக் கண்டு பலர் பொறாமை கொள்வர். வம்பு வழக்குகளில் இழுப்பார்கள்.
ஆனால், இவர் எதற்கும் செவி சாய்க்காமல் தம்முடைய குறிக்கோளை விடாமல் கடைப்பிடிப்பர். முடிவு எத்தகையது என்பது இவருக்கு முன் கூட்டியே தெரிந்து விடும். சிறந்த பேச்சாளராகவும், ஆசிரியராகவும், விரிவுரையாளராகவும் விளங்குவர்.




# பெண்களின் உரிமைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும்

(குறிப்பிட்ட தலைப்பில் வெளிவரும் தொடரின் தொடர்ச்சி...)
தொழில் ஸ்தாபனங்களில் பெண்கள் பாலியல் ரீதியான சுரண்டல்களுக்கு உள்ளாவதும் புதியதொரு விடயமல்ல. மேலதிகாரிகளை திருப்திப்படுத்தும் நோக்கிலும், தான் சில சலுகைகளை அனுபவிக்கும், பெற்றுக்கொள்ளும் நோக்கிலும் பெண்களே உடந்தையாக இருந்து சுரண்டல்களை விரும்பியோ விரும்பாமலோ ஏற்றுக் கொள்கின்றனர். இந்தச் செயலானது ஆண் வர்க்கத்தினருக்கு பழம் நழுவி பாலில் விழுந்தது போல் ஆகிவிடுகின்றது. மேலும் பெண்களுக்கு எதிரான சேட்டைகளை வெளிப்படுத்துவதற்கு இத்தகைய பல சம்பவங்கள் ஆண்களுக்கு வாய்ப்பாக அமைந்து விடுகின்றன. கல் வித் துறையைப் பொறுத்தமட்டில் சமையல் வேலை செய்யும் பெண்களுக்கு படிப்பெதற்கு என்ற காலம் மலை யேறிய நிலையில் தற்போது அதிகமான பெண்கள் ஆண்களைக் காட்டிலும் கல்வியில் அபிவிருத்தி கண்டு வருவது மகிழ்ச்சி தரத்தக்க விடயமாக உள்ளது.

பொதுவாக ஆண்களைக் காட்டிலும் கல்வித்துறை ஈடுபாடு, குடும்பத்தினரின் ஒத்துழைப்பு என்பன மிகுதியாகவே காணப்படுவது குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும். சர்வதேச மக ளிர் தினக் கோரிக்கைகளாக பல்வேறு அமைப்புகளும் பெண்களின் அபிவிருத்தி கருதி பல்வேறு கோரிக்கைகளை முன் வைக்கின்றன. எனினும் இவை அனைத்தும் காற்றோடு காற்றாய் வெறும் கோரிக்கைகள், கோசங்கள் என்ற ரீதி யிலேயே முடக்கம் பெற்று வருவதை எம்மால் அவதானிக்க கூடுமாக உள்ளது. மனித உரிமை பிரகடனத்தில் பெண்கள் மற்றும் சிறுவர்களின் உரிமைகள் தொடர்பாக தெளிவாக விளக்கிக் கூறப்பட்டுள்ளது. எனினும் இவற்றின் நடைமுறை செயற் பாட்டுத் தன்மைகள் எந்தளவுக்கு சாதக பாங்கை உரு வாக்கியுள்ளன என்பதில் சிக்கல் நிலை தோன்றியுள்ளதை மறுப்பதற்கில்லை. ஆண், பெண் சமத்துவம் பேணப்பட வேண் டும். பெண்களும் மனிதர்களே என்ற ரீதியில் அவர் தனது கருத்துக்களும் ஆண்களால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

# உண்மையின் விலை!




குமரேசன் வீட்டில் ஒருநாள் இரவு முகமூடிக் கொள்ளையர்கள் நுழைந்தனர். அவர்கள் வீட்டில் இருந்தவர்களைப் பார்த்து "மரியாதையாக நகையும், பணமும் எங்கே வைத்திருக்கிறீர்கள் என்று சீக்கிரம் சொல்லுங்கள்! இல்லையென்றால், உங்களைக் கொன்று விடுவோம்! - என்று கூறினர். குமரேசனையும், அவரது மனைவியையும் கட்டிப் போட்டு மிரட்டினார்கள். எங்கள் வீட்டில் நகை, நட்டு ஒன்றுமில்லை. தயவு செய்து எங்களை விட்டு விடுங்கள்!" - என்று கணவன், மனைவி இருவரும் கெஞ்சினார்கள். கொள்ளையர்கள் அதை நம்பவில்லை. அவ்விருவரையும் அடித்துத் துன்புறுத்தினார்கள். அதற்குள் குமரேசனின் மகனான பன்னிரண்டுவயதானசேகர், தான் ஒளிந்திருந்த இடத்திலிருந்துவெளியேவந்தான். கொள்ளையர்களிடம் சென்றான். "எனது அப்பா, அம்மாவைத்" துன்புறுத்தாதீர்கள். நான் உண்மையைச் சொல்கிறேன். அதோ! தெரிகிறதே, அந்த பீரோவின் காலில் ஒரு இரகசிய அறை இருக்கிறது. அதில் நகைகள், பணம் இருக்கின்றன. இதோ சாவி!' - என்றவாறு கட்டில் படுக்கைக்குக் கீழே இருந்து சாவியை எடுத்துக் கொடுத்தான். "அப்படி வா.. வழிக்கு. எங்களைப் பார்த்து இப்படித்தான் பயப்பட வேண்டும்!" - என்றான் கொள்ளையர்களில் ஒரு வன். "நானொன்றும் பயப்படவில்லை!" - என்றான் கோபத்தோடு சேகர். தன்னைப் பயந்தாங்கொள்ளி என்று கொள்ளையன் தூற்றியது அவனை ரோசம் கொள்ளச் செய்தது. இதைக் கேட்டதும் கொள்ளையர்களுக்கு வியப்பாக இருந்தது. கொள்ளையர்களின் தலைவன் சேகரிடம் வந்தான். "எங்களைப் பார்த்து பயப்படவில்லையா? அப்போது நீயும் உனது பெற்றோரைப் போல பணம் இல்லை என்று பொய் சொல்ல வேண்டியது தானே? உண்மையை ஏன் சொன்னாய்?" - என்று கோபத்துடன் அதட்டினான்.



அதற்குச் சேகர், "எனது பெற்றோருக்கு உண்மை, பொய் இவைகளின் விலை தெரியாது. எனக்கு நன்றாகத் தெரியும். அதனால் தான் உண்மையைச் சொன்னேன்!" - என்று அமைதியாகப் பதில் சொன்னான். "என்னது! உண்மை, பொய் இவற்றுக்குமா விலை? அப் படியானால், உண்மையின் விலை என்ன? பொய்யின் விலை என்ன?" - என்று வியப்புடன் கேட்டான் கொள்ளையன். சற்றும் தயங்காமல் சேகர், "உண்மையின் விலை எனது தாய், தந்தையரின் உயிர். பொய்யின் விலையோ சிறிது நகையும், கொஞ்சம் பணமும் ஆகும். இவை மீண்டும் சம்பாதித்துக் கொள்ளக்கூடிய மலிவானவை. ஆனால், எனது தாய், தந்தையரின் உயிரோ விலை மதிப்பில்லாதது. போனால், திரும்பவும் பெறமுடியாதது!' என்றான். சேகரின் பதில் கொள்ளையர்களைச் சிந்திக்க வைத்தது. சற்று நேரம் மௌனம் சாதித்தவர்கள், சேகரின் உண்மையை உரைக்கும் பண்பால் கவரப்பட்டார்கள். மனம் மாறிய அவர்கள் கொள்ளையடித்த பொருள்களை அங்கேயே போட்டுவிட்டுச் சென்றனர். **நீதி:** உண்மையின் விலை எப்போதும் விலை மதிப்பிட முடியாதது.



# வர்ணம் தீட்டலாம் வாங்க



# கண்டுபிடிப்புக்கள்

**சவர்க்காரம்**

குளியலறைகள் கட்டப்படும் முன்பே சவர்க்காரம் கண்டுபிடிக்கப்பட்டு விட்டது. ஆனால், பரவலாகப் பயன்பாட்டுக்கு வந்தது பல ஆண்டுகாலம் கழித்துத்தான். ஆரம்பத்தில், எண்ணெய், மணல் ஆகியவற்றைக் கலந்து தேய்த்துக் குளித்தனர். சிலர், வேலையாள்களை வைத்து மரக்கிளைகளால் உடலைத் தேய்த்துவிடக் கூறினர். சவர்க்காரத்தில் குறிப்பிடத்தக்கது, 1789 இல் ஆண்ட்ரு பியர்ஸ் கண்டுபிடித்த கண்ணாடி போன்ற சவர்க்காரம்.

**சக்கரம்**

உலகை நகர வைத்த முக்கிய கண்டுபிடிப்பு சக்கரம் ஆகும். தற்போது ஈராக் நாடாக உள்ள மெசடோமியாவில் வாழ்ந்த சுமேரியர்கள் கி.மு. 3000 ஆண்டளவில் சக்கரத்தைக் கண்டுபிடித்ததாகக் கூறப்படுகிறது. சக்கரம் இல்லையேல் இன்றைய உலக இயக்கமே இல்லை.

**பற்தூரிகை**

1400 இல் சீனர்களால் கண்டுபிடிக்கப்பட்டது இது. முதலில் விலங்குகளின் முடியைப் பயன்படுத்தினர். பன்றியின் முடியைக் கூடப் பயன்படுத்தி உள்ளனர். 1938 இல், முதன்முதலாக நைலோன் பற்தூரிகை உருவாக்கப்பட்டது.


'டூத் பேஸ்ட்' எனப்படும் 'பற்பசை', நூறு ஆண்டுகளுக்கும் மேலாகவே பயன்பாட்டில் உள்ளது. அதை ஒரு டியூப்பில் அடைத்து விற்கலாம் என்பதை 1892 இல் வொஷிங்டன் பெபீல்டு என்ற பல் மருத்துவர் கண்டுபிடித்தார்.

# அன்பு அப்பாவே.....

ஆயிரம் கவி வடித்தாலும் அப்பாவைப் பற்றி
கவி வடிக்கத் தெரியவில்லை எனக்கு....
கவிதைக்குள் அடக்கிவிட
காகிதம் போதாது அப்பா!
கண்ணுக்குள் நிற்கும் உங்களைக் கவி
வடிவில் வெளியேற்ற மாட்டேன் அப்பா!
வெறும் காகிதத்தில் கவி எழுதி
என் கடன் தீராதப்பா!
இருந்தும் எழுதுகிறேன் என் எழுத்துக்களும்
உங்களைப் பார்த்து வெட்கப்படட்டும் என்று
முதன்முதலில் என்னை உங்கள் கைகள்
அரவணைத்ததும் நீங்கள் என்ன நினைத்தீர்கள்
தெரியவில்லை- ஆனால் நான் நினைத்தேன்
என் உலகம் இது தான் என.....
உங்கள் குருதியை வியர்வை ஆக்கி
எனக்காய் உழைத்த போது உணர்ந்தேன்
என்னை உயர்த்தும் ஏணி நீங்கள் என...
என்னை உங்கள் தோளில் தூக்கிச் சுமந்தபோது
உணர்ந்தேன் என் காவலாளி நீங்கள் தான் என.....
வாழ்க்கை இதுதான் என நீங்கள்
கற்பித்த தருணங்களில் உணர்ந்தேன்.
உலகின் உன்னத ஆசான் நீங்கள் என..
என் குறும்புகளைப் பொறுத்து, என்
குழப்படிகளை இரசித்தபொழுது
நினைத்தேன், என் உற்ற நண்பன் நீங்கள் என....
என் வேதனையில் அழுது சோதனையில்
உதவி என் இன்பத்தில் மகிழ்ந்த பொழுது
நினைத்தேன் என் விம்பம் நீங்கள் என....
என் வாழ்வின் ஒவ்வொரு நொடியிலும்
ஒவ்வொரு பாத்திரம் ஏற்று என் கைகள்
பிடித்து நடந்த உங்களைக் கண்ணீரால்
வேடம் கலைக்க வைத்ததை நினைத்தால்
இதயம் பதறுகிறது அப்பா!
மறுபடியும் உங்கள் கண்ணீர் துடைத்து
உங்களைப் பாத்திரமேற்க வைப்பேன்
அப்பாவாக இல்லை குழந்தையாக
நான் மகளாக இல்லை தாயாக.....

ஆனந்தராஜா சங்கவி,
சாவகச்சேரி இந்துக் கல்லூரி.





## மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கர்ப்பிணிகள் விடுதியில் தங்கலாம்

### தென்மராட்சிப் பிரதேசத்தில் நடவடிக்கை

சாவகச்சேரி, நவ.17

தென்மராட்சிப் பிரதேசத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களிலும் உறவினர், நண்பர்கள் வீடுகளி லும் வசதிகள் குறைந்த நிலையில் வாழும் கர்ப்பிணிகள் மற்றும் ஆறு மாதங்களுக்கு உட்பட்ட குழந்தைகளை வைத்திருப்போர் ஆகியோர் வைத்தியசாலை விடுதிகளில் வைத்து மருத்துவ உதவியுடன் பராமரிக்கப்படவுள்ளனர்.

அதற்கான செலவை வைத்தியசாலை ஊழியர் நலன்புரி சங்கத்தினரும் வைத்தியசாலை நோயாளர் நலன்புரி சங்கத்தினரும் வழங்கவுள்ளனர்.

நேற்று வைத்தியசாலையின் பணியாளர்களுக்கு அனர்த்த முகாமைத்துவம் தொடர்பாக நடத்தப்பட்ட கலந்துரையாடலில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் வைத்தியசாலையில் கடமையாற்றும் மருத்துவர்கள் தாதிய உத்தியோகத்தர்கள் உட்பட அனைத்துப் பணியாளர்களும் கலந்து கொண்டனர்.

மழைவெள்ளத்தால் பாதிக்கப்பட்டு வருவோருக்கு வழங்கவேண்டிய சேவைகள் தொடர்பாக அங்கு கலந்துரையாடப்பட்டபோது மழை வெள்ளத்தால் பாதிக்கப்படும் கர்ப்பிணிகள் மற்றும் குழந்தைகளுக்கு ஏற்படும் பாதிப்புகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

மழைவெள்ளத்தால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களிலும், உறவினர், நண்பர்கள் வீடுகளிலும் சிரமங்களின் மத்தியில் தங்கியுள்ள கர்ப்பிணிகள் மற்றும் ஆறு மாதத்துக்கு உட்பட்ட குழந்தைகளை விடுதியில் தங்க வைத்து நோய்கள் பரவாமல் தடுக்கும் சிகிச்சைகளுடன் பராமரிப்பும் செய்யவேண்டும் என்றும் அதற்கான செலவை தாம் பொறுப்பெடுக்கின்றோம் என்றும் வைத்தியசாலை ஊழியர் நலன்புரி சங்கமும் நோயாளர் நலன்புரி சங்கமும் முன்வந்து தெரிவித்தன.

அதையடுத்து வசதிகளற்ற நிலையில் நலன்புரி நிலையங்களிலும், உறவினர், நண்பர்கள் வீடுகளிலும் தங்கியுள்ளவர்கள் வைத்தியசாலை விடுதிகளில் தங்கி சிகிச்சை பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ற-9)


**வீடு தேவை**

யாழ் நகரை அண்டிய பகுதியில் சிறிய குடும்பத்திற்கு வீடு வாடகைக்கு தேவை.

தொடர்புக்கு : 077 3530700


## மரண அறிவித்தல்கள்

### திருமதி தங்கமுத்து துரைராசா

(இளைப்பாறிய அதிபர்-இலகடி இந்து தமிழ் கலவன் பாடசாலை-காரைநகர்)

காரைநகர் புது றோட்டைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கமுத்து துரைராசா (இளைப்பாறிய அதிபர்-இலகடி இந்து தமிழ் கலவன் பாடசாலை-காரைநகர்) நேற்று (16.11.2015) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (68140) (10.17)

புது றோட், காரைநகர்.
T.P: 077 603 6522, 077 968 8350.

தகவல்: குடும்பத்தினர்.

### கணேசலிங்கம் சுகந்தினி



(உயர்தர வகுப்பு மாணவி-யோகபுரம் மகா வித்தியாலயம்)

மல்லாவி, யோகபுரம் 3ஆம் யுனிற்றைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணேசலிங்கம் சுகந்தினி நேற்று (16.11.2015) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் கணேசலிங்கம்-செந்தமிழ்செல்வி தம்பதியரின் அன்பு மகளும், அபிராமியின் (கனடா) அன்புத் தங்கையும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.11.2015) செவ்வாய்க்கிழமை மு.ப. 11.00 மணியளவில் இல. 243, பாரதி நகர் மல்லாவியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாவி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(68139) (10.17)

தகவல்: குடும்பத்தினர்.

### காசிலிங்கம் படியலிங்கம்



மண்டைதீவைப் பிறப்பிடமாகவும், 798, கட்சன் வீதி வட்டக்கச்சியை வதிவிடமாகவும், தற்போது விசுவமடுவில் வசித்தவருமாகிய காசிலிங்கம் படியலிங்கம் நேற்று (16.11.2015) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற காசிலிங்கம்-தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கௌசலாதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் (குலசிங்கம்)-தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சந்திரகாந்த், பிரசாந் (வட்டக்கச்சி) ஆகியோரின் அன்புத் தந்தையும், லீலாவதி, கமலாவதி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (16.11.2015) திங்கட்கிழமை பிற்பகல் அவரது விசுவமடு இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் விசுவமடு 12ஆம் கட்டை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்,

இல.54/2, விசுவமடு மேற்கு.
தொலைபேசி: 0779671954

(63571) (10.17)

தகவல்: குடும்பத்தினர்.

## கடும் வெள்ளம் காரணமாக முல்லையில் இரு கிராமங்களின் தொடர்பு துண்டிப்பு

### அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தகவல்

முல்லைத்தீவு, நவ.17

வெள்ளம் காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் இரு கிராமங்கள் தரைத் தொடர்புகள் எவையும் இன்றி தனிமைப்படுத்தப்பட் டுள்ளன என்று மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது-

நாட்டில் நிலவிய அசாதாரண சூழலில் பொழிந்த மழையை அடுத்து முல்லைத்தீவு மாவட்டத்தின் இரு கிராமங்கள் எந்த வித தரைத் தொடர்புகளும் இன்றி தனிமைப் படுத்தப்பட்டுள்ளன.

துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள தென்னியங்குளம் என்றகிராமமும், பாண்டியன்குளம் பிரதேச செயலாளர் பிரிவில் சிராட்டிகுளம் கிராமமும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

இரு கிராமங்களிலும் சேர்த்து 84 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இந்தக் கிராமத்தின் போக்குவரத்து துண்டிக்கப்படக் கூடிய சாத்தியங்கள் ஏற்பட்டதை அடுத்து அங்கு தேவையான பொருள்கள் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன. - என்றார்.

அதேவேளை, மடு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மாதா கிராமம், பெரிய முறிப்பு, குஞ்சுக்குளம் ஆகிய மூன்று கிராமங்களுக்கும் செல்லும் தரை வழிப்பாதை துண்டிக்கப்பட்டுள்ளது. அதனால் குறித்த கிராமத்தின் தொடர்புகள் முழுமையாக துண்டிக்கப்பட்டுள்ளன. குறித்த 3 கிராமங்களிலும் 230 குடும்பங்கள் வசிக்கின்றன. அங்கு எதுவித பாதிப்புக்களும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. போதுமான அளவு உலர் உணவுகள் கையிருப்பில் உள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

குறித்த கிராமங்களுக்குச் செல்லும் வீதி மற்றும் பாலத்தை மேவி மல்வத்து ஓய நீர் பாய்ந்து வருகின்றது. அத்துடன் மன்னார் முதல் யாழ்ப்பாணம் வரையான ஏ-32 பிரதான வீதியின் பாலியாற்று பகுதியில் உள்ள பாலத்தை வெள்ள நீர் மேவிப் பாய்கின்றது. மன்னாரில் இருந்து பாலியாறு வரை அரச தனியார் சேவைகள் இடம் பெறுகின்றன. பாலியாற்றைக் கடந்து செல்வது பெரும் சிரமமாக உள்ளது என்று பொது மக்கள் தெரிவித்தனர். தலைமன்னார், சௌத்பார், சாந்திபுரம், எமில் நகர் போன்ற கிராமங்களிலும் அதிகளவான வெள்ள நீர் சூழ்ந்து கொண்டுள்ளது. (ற-ரி5, 101)

## தட்டுவன்கொட்டி கிராமத்துக்கு செல்லும் பாதை வெள்ளத்தில்

### போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளதால் பொதுமக்கள் பெரும் சிரமத்தில்

கிளிநொச்சி, நவ.17

கிளிநொச்சி தட்டுவன் கொட்டி கிராமத்துக்குச் செல்லும் பிரதான வீதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. அதனால் அந்தப் பகுதிக்கான போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில நாள்களாகப் பெய்து வரும் மழை காரணமாக ஏ-9 பிரதான வீதியில் இருந்து தட்டுவன் கொட்டிக் கிராமத்துக்குச் செல்லும் பிரதான போக்கு வரத்து மார்க்கமே மழைநீரில் மூழ்கியுள்ளது.

இதனால் மக்கள் தமது நாளாந்தக் கடமைகள் நிமித்தம் வெளியில் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்தக் கிராமத்துக்கான குடிதண்ணீர் பவுசர் மூலம் விநியோகிக்கப்பட்டு வந்த நிலையில் பாதை துண்டிப்பால் தண்ணீர் விநியோகமும் பாதிக்கப்பட்டுள்ளது. அந்தப் பகுதி மக்கள் வைத்தியசாலைகளுக்குச் செல்ல முடியாத நிலை காணப்படுவதுடன் உணவுப் பொருள்களைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் உள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை படகுகள் மூலம் தற்காலிக போக்குவரத்துச்சேவையை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் மற்றும் கிராம அபிவிருத்திச் சங்கம் என்பன மேற்கொண்டுள்ளன.

தொடர்ச்சியாக மழை பெய்யுமாக இருந்தால் இந்தப் பகுதிமக்கள் பெரும் இடர்களை எதிர் நோக்க வேண்டி வரும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் இதற்கு அண்மையிலுள்ள உமையாள்புரம் முற்றாக நீரில் மூழ்கியுள்ளது. அங்குள்ளோரைப் பாதுகாப்பாக வெளியேற்றும் நடவடிக்கைகளை கிளிநொச்சி மாவட்ட செயலகத்தினர் மேற்கொண்டுள்ளனர். (ற-ரி5,108)

## இரு இந்திய மீனவர் கரையொதுங்கினர்

யாழ்ப்பாணம், நவ. 17

அசாதாரண காலநிலையினால் திசை மாறிய இந்திய மீனவர்கள் இருவர் ஊர்காவற்றுறைக் கடற்பரப்பில் நேற்றுத் திங்கள்கிழமை அதிகாலை கரையொதுங்கியுள்ளனர்.

திருவாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள் இருவரே படகு ஒன்றில் திசை மாறி ஊர்காவற்றுறைக் கடற்பரப்பில் கரையொதுங்கினர்.

குறித்த இரு மீனவர்களையும் கடற்படையினர் வட்டுக்கோட்டை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். வட்டுக்கோட்டைப் பொலிஸார் இவர்கள் குறித்த தகவலை யாழ். இந்திய துணைத்தூதுவர் அலுவலகத்துக்கு வழங்கியுள்ளனர்.

இதேவேளை, இரு மீனவர்களிடம் விசாரணை மேற்கொண்ட பின்னர் இன்றுசெவ்வாய்க்கிழமை ஊர்காவற்துறை நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கையை மேற்கொள்வர். (த-106)

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு உதவிகள் எவையும் கிடைக்கவில்லை

### சரசாலை தெற்கு மக்கள் விசனம்

யாழ்ப்பாணம், நவ.17

சரசாலை தெற்கில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தால் இடம்பெயர்ந்துள்ள 316 கிராம சேவகர் பிரிவுக்கு உட்பட்ட மக்களுக்கு உரிய உதவிகள் செய்து கொடுக்கப்படவில்லை என்று விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுக் கொட்டித்தீர்த்த மழையால் இடம்பெயர்ந்து சரஸ்வதி வித்தியாலயத்தில் தஞ்சம் புகுந்துள்ள போதும் தமக்கான உதவி செய்வதாக கூறி வந்தவர்கள், தாம் தங்கியிருப்பது அரசால் மூடப்பட்ட பாடசாலை என்பதால் இங்கே தங்கக்கூடாது என்றும் உடனடியாக வெளியேறி மட்டுவிலில் உள்ள வேறு பாடசாலையில் தங்க வேண்டும் என்றும் வற்புறுத்தினர் என்றும் அங்குள்ள மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக பிரதேச செயலகத்தைத் தொடர்பு கொண்டு கேட்டபோது -

பாடசாலை அரசால் மூடப்பட்டுள்ளது. அதனை முறையற்ற வகையில் பூட்டுடைத்துத் தங்கியுள்ளனர். இது சட்டவிரோதமான செயற்பாடாகும். எனினும் இந்த விடயத்தில் மக்களை பாதுகாப்பதற்கான அனைத்து உதவிகளையும் செய்துள்ளோம். அதற்காக சிறி கணேசா வித்தியாலயத்தில் முதலுதவியுடன் ஏற்பாடுகள் செய்யப்பட்டு அனைத்து சேவைகளையும் வழங்கிவருகின்றோம். மக்களுக்கு உடனடியாக உதவிகளைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள் ளப்படும் என்று பதிலளிக்கப்பட்டது.

அதேவேளை தாம் பாதிக்கப்பட்டுள்ளதால் தேவையான உதவிகளைச் செய்து தருமாறு பிரதேச அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுத்தோம் என்றும் உதவிகள் கிடைக்காத நிலையில் பொலிஸாரின் உதவியைப் பெற்று தாம் குறித்த பாடசாலையில் தங்கினர் என்றும் பொதுமக்கள் தெரிவித்தனர். (ற-ரி5)

## கலைப்பீடத்தின் செயற்பாடுகள்

### தற்காலிக நிறுத்தம்

யாழ்ப்பாணம், நவ.17

யாழ். பல்கலைக்கழகக் கலைப் பீடத்தின் கல்வி நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத் தப்பட்டுள்ளன.

நாட்டில் நிலவும் கடும் வெள்ள இடர் காரணமாக யாழ். பல்கலைக்கழகத்தின் கலைப்பீட அனைத்து ஆண்டுகளுக்குமான கல்வி நடவடிக்கைகளை நேற்றுத் தொடக்கம் எதிர் வரும் வெள்ளிக்கிழமை வரை தற்காலிகமாக இடைநிறுத்தி வைப்பதாக நேற்று நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாகக் கலைப் பீட சிரேஷ்ட உதவிப்பதிவாளர் எட்வேட் றெஜினோல்ட் தெரிவித்தார். (து)

## வெள்ளத்துடன் ஊருக்குள் புகுந்த முதலை

சாவகச்சேரி, நவ.17
கடந்த சனிக்கிழமை பெய்த கடும் மழையை அடுத்து இராமாவில் குடியிருப்பு ஒன்றுக்குள் பெரிய முதலை புகுந்தது. அதனால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.
வெள்ளத்துடன் வந்துள்ள குறித்த முதலை அங்குள்ள குடியிருப்புக் காணி துரவுக்குள் விழுந்துள்ளது. காலையில் முதலையைக் கண்ட வீட்டு உரிமையாளர் அது குறித்து கிராம அலுவலருக்கும், பொலிஸாருக்கும் அறிவித்துள்ளார். அதையடுத்து அங்கு கூடிய பெரும் எண்ணிக்கையானோர் முதலையைப் பிடிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். (ற-9)

# அன்பே சிவம் அமைப்பால் மரக்கன்றுகள் விநியோகம்



வடக்கு மாகாண சபையால் முன்னெடுக்கப்பட்டு வரும் மரநடுகை மாதத்தை முன்னிட்டு சுவிற்சர்லாந்து சூரிச் சிவன் கோவிலின் 'அன்பே சிவம்' அமைப்பு மரக்கன்றுகளை இலவசமாக வழங்கி வருகின்றது.
'அன்பே சிவம்' அமைப்பால் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பச்சிலைப்பள்ளி மல்வில் கிராம மக்களுக்கு நல்லின மாமரக்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன. மல்வில் கிருஸ்ணன் கோவிலில் இடம்பெற்ற மரக்கன்றுகள் விநியோக நிகழ்ச்சியில் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கலந்துகொண்டு மரக்கன்றுகளை வழங்கினார்.
அத்துடன் மல்வில் பகுதியில் உள்நாட்டுப் போரினால் பாதிக்கப்பட்டு மீள்குடியேறியவர்களில் இருந்து நான்கு குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு மின் மோட்டர்களும் அவற்றுக்குரிய நீர்விநியோகக் குழாய்களும் வழங் கப்பட்டுள்ளன. இவற்றை கனடா மொன்றியலில் வசிக்கும் ஜெயா-ஜெனா சகோதரர்கள் அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.
இந்த நிகழ்ச்சியில் அன்பே சிவம் அமைப்பின் இலங்கைக்கான அமைப்பாளர் கு.குமணன், நிகழ்ச்சி இணைப்பாளர் பி.கோகுலச்செல்வி, மல்வில் கிராமசேவையாளர் சு.காண்டீபன் ஆகியோருடன் பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டனர். (த-10)

## பரீட்சைகள் இன்று நடக்கும்

மாங்குளம், நவ. 17
தொண்டமானாறு வெளிக்கள நிலையத்தினால் நடத்தப்படும் ஜி.சி.ஈ. உயர்தரமாணவர்களுக்கான பரீட்சைகள் இன்று செவ்வாய்க்கிழமை நேர அட்டவணையில் குறிப்பிட்டதற்கிணங்க நடைபெறுமென யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் என்.தெய்வேந்திரராஜா அறிவித்துள்ளார்.
தற்போது பெய்துவரும் மழை காரணத்தால் நேற்றையதினம் பாடசாலைகள் நடைபெறவில்லை. இந்தப் பரீட்சையில் நேற்றைய தினம் குறிப்பிடப்பட்டிருந்த பாடப் பரீட்சை எதிர்வரும் 21ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும் எனவும் இதனை அதிபர்கள் கவனத்தில் கொண்டு செயற்படும்படியும் அவர் தெரிவித்தார். (த-422)


துயர் பகிர்கின்றோம்



எமது கூட்டுறவு திணைக்களத்தின் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் ம. கபிலன் அவர்களின் அன்பு தந்தையார்
சோமசுந்தரம் மயில்வாகனம்
அவர்கள் 15.11.2015 அன்று காலமாகிவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
கூட்டுறவுத் திணைக்கள உத்தியோகத்தர் நலன்புரி சங்கம்.

31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 24.04.1947 மறைவு 19.10.2015
அமரர்
கந்தையா சுந்தரலிங்கம்
கடந்த 19.10.2015 திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் அமரர் கந்தையா சுந்தரலிங்கம் அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (18.11.2015) புதன்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.
வற்றாக்கைப்பதி அம்மன் கோவிலடி, கந்தரோடை, சுன்னாகம்.
குடும்பத்தினர்.
(66138)(10.17)


## தொடர்ச்சி.........

### வீட்டுத் திட்டம்

உழவனூர் மற்றும் விசுவமடு, நாதன் திட்டக் கிராமங்களின் மக்கள்.
கடந்த சில நாள்களாகத் தொடர்ந்து பெய்து வரும் கடும் மழையை அடுத்து உழவனூர் மற்றும் நாதன் திட்ட கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பாடசாலை மற்றும் தென்னிந்தியத் திருச்சபைத் தேவாலயம் என்பவற்றில் அடைக்கலம் புகுந்துள்ளனர்.
உழவனூரைச் சேர்ந்த 268 குடும்பங்களைச் சேர்ந்த 972 பேர் இடம்பெயர்ந்து பாடசாலையில் தங்கியுள்ளனர். அவர்களுக்கு பிரதேச செயலகத்தால் சமைத்த உணவு வழங்கப்படுகிறது. நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் நேற்று நேரில் சென்று அவர்களைச் சந்தித்தார். குறைகளைக் கேட்டறிந்தார்.
இடம்பெயர்ந்து பாடசாலையில் தங்கியிருந்த அனைவருக்கும் சமைத்த உணவு வழங்குவதற்கான ஏற்பாடுகள் நேற்றுச் செய்யப்படவில்லை என்று மக்கள் சுட்டிக் காட்டினர். பாடசாலையில் போதிய இடமின்மை காரணமாக, நண்பர்கள் உறவினர் வீடுகளுக்குச் சென்று தங்கியவர்களுக்கு சமைத்த உணவு வழங்க ஏற்பாடு செய்யப்படவில்லை என்று மக்கள் குறைபட்டனர்.
நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் இது தொடர்பில் பிரதேச செயலரின் கவனத்துக்குக் கொண்டு வந்ததை அடுத்து முகாமில் தஞ்சமடைந்த அனைவருக்கும் சமைத்த உணவு வழங்குவதற்கான ஏற்பாடுகள் பிரதேச செயலரால் செய்யப்பட்டன.
நாதன் திட்டக் கிராமத்தில் உள்ள மொத்தம் 300 குடும்பங்களில் 256 குடும்பங்களைச் சேர்ந்த 716 பேர் இடம்பெயர்ந்து தென்னிந்தியத் திருச்சபையின் தேவாலயத்தில் தஞ்சமடைந்துள்ளனர். நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் அவர்களையும் நேரில் சென்று பார்த்துப் பேசினார்.
மீளக்குடியமர்ந்து 6 ஆண்டுகள் ஆகிவிட்டபோதும் தமக்கு நிரந்த வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படாமல் இருப்பதே ஒவ்வொரு ஆண்டும் தாம் தொடர்ந்து மழை வெள்ளத்தால் பாதிக்கப்படக் காரணம் என்று இரு கிராமத்து மக்களும் நாடாளுமன்ற உறுப்பினரிடம் குறைபட்டனர்.
காணிப் பிரச்சினையைக் கார ணம் காட்டி அதிகாரி கள் தமது கிராமங்களுக்கு வீட்டுத் திட்டங்கள் எவற்றையும் தருவதில்லை என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டினர்.
"நாங்கள் 20 தொடக்கம் 40 வருடங்களாகக் குடியிருக்கும் காணிகள் எங்கள் பெயரில் பதியப்படவில்லை என்கிற காரணத்தைக் கூறி எங்களுக்கு இன்னமும் வீட்டுத் திட்டம் தரப்படவில்லை. இதனால் நிரந்த வீடு இன்றி நாம் அல்லாடுகிறோம். நிரந்தர வீடு இருந்திருந்தால் இப்படி மழை வெள்ளத்துக்கு ஒவ் வொரு வருடமும் இடம்பெயர்ந்து கொண்டிருக்கமாட்டோம்" என்று மக்கள் தெரிவித்தனர்.
இரு கிராமத்து மக்களுக்கும் நிரந்தர வீடுகள் கிடைப்பதற்கு நாடாளுமன்றத்தில் தான் தொடர்ந்து அழுத்தம் கொடுப்பார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் அந்த மக்களுக்கு உறுதியளித்தார்.
கிளிநொச்சி மாவட்டதைச் சேர்ந்த உமையாள்புரம், காஞ்சிபுரம், குமரபுரம் பகுதியைச் சேர்ந்த 95 குடும்பங்களைச் சேர்ந்த 208 பேரும் மழை வெள்ளத்தால் இடம்பெயர்ந்து குமரபுரத்தில் உள்ள பாடசாலையில் தஞ்சம் அடைந்திருக்கின்றனர். அவர்களையும் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் நேரில் சென்று பார்த்து அவர் களின் தேவைகளை அறிந்து கொண் டார். அங்கு தங்கியுள்ள மக்களுக்கு உடனடியாகப் பாய்கள் தேவை எனக்கேட்கப்பட்டதை அடுத்து அவற்றை வாங்கி வழங்கினார். (உ)


## பதினாறாம், பதினோராம் ஆண்டு நினைவலைகள்


செல்வன்
பாலகிருஷ்ணன் பிரதீபன்
தோற்றம் : 17.04.1981


செல்வன்
சிவநாதன் ரவிசங்கர்
தோற்றம் : 02.02.1981


செல்வன்
சுந்தரலிங்கம் சிவோத்தமன்
தோற்றம் : 23.03.1981


செல்வன்
பூரணமூர்த்தி சுந்தர்வன்
தோற்றம் : 11.05.1981

17.11.1999 : மறைவு


செல்வன்
மரியரட்ணம் குணரட்னம்
தோற்றம் : 04.08.1981

17.05.2004

இந்நாளில் ஹாட்லியின் மைந்தர்கள் ஆகிய நாம் உங்களை பெருமையுடன் நினைவு கூருகின்றோம்
இன்று 17.11.2015 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் இன்பர்சிட்டி கடற்கரையில் நடைபெறும் நினைவுகூரல் நிகழ்விலும், 03.12.2015 வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு ஹாட்லிக் கல்லூரியில் நடைபெறும் நினைவு நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் இரத்த தான நிகழ்விலும் பெற்றோர் ஆசிரியர், உற்றார், உறவினர், நண்பர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
"ஹாட்லியின் மைந்தர்கள் நினைவு நிதியம்" ஏற்பாட்டாளர்கள்.
மேலதிக விபரங்களுக்கு : க.திருவரங்கன் - 0776 329 783 / அ. செந்தில்குமரன் - 0777 480 094
சு. கோகுலகுமார் - 0773 122 198 E-mail : hartleyboys@gmail.com

# பொதுநலவாய மாநாடு 27 ஆம் திகதி ஆரம்பம்

***தலைமைப்பதவி இலங்கையிடமிருந்து மோல்டாவுக்கு***

பொதுநலவாய நாடுகளின் 24 ஆவது அரச தலைவர்கள் மாநாடு எதிர்வரும் 27 ஆம் திகதி முதல் 29ஆம் திகதி வரை மூன்று நாள்கள் மோல்டாவில் நடைபெற வுள்ளது.

பொதுநலவாய நாடுகளின் தலைமைத்துவத்தை இலங்கை இந்த மாநாட்டின்பின்னர்மோல்டாவிடம் கையளிக்கவுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் 26 ஆம் திகதி இந்த மாநாட்டுக்காக மோல்டா செல்ல வுள்ளார்.

தெற்கு ஐரோப்பாவில் மத்திய தரைக் கடலில் அமைந்துள்ள மோல்டா, மக்கள் தொகை கூடிய ஒரு தீவாகும். இந்நாட்டில் மொத்தம் ஏழு தீவுகள் உள்ளன. சிசிலிக்குத் தெற்காகவும், டியுனிசியாவுக்குக் கிழக்கேயும், லிபியாவுக்கு வடக்கேயும் அமைந்துள்ளது.

இதன் உத்தி யோக பூர்வமொழிகளாக மோல்ட்டீஸ் மொழியும் ஆங்கிலமும் விளங்குகின்றன. றோமன் கத்தோ லிக்கம் இங்கு பெரும் பான்மையோரால் பின்பற்றப்படும் மதமாகும் என்பது குறிப் பிடத்தக்கது.

பொதுநலவாய தலை வர்களின் முதலாவது மாநாடு 1971 இல் சிங்கப்பூரில் நடை பெற்றது. இந்த மாநாடு இரண்டு ஆண்டுக ளுக்கு ஒரு தடவை அந்த அமைப்பின் உறுப்பு நாடு ஒன்றில் இடம் பெறும்.

மேலும் குறித்த மாநாடு நடைபெறும் நாட்டின் அரச தலைவர், பிரதமர் அல்லது ஜனாதிபதி மாநாட்டுக்குத் தலைமை வகிப்பதோடு, அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு அவரே பொதுநலவாய நாடுகள் அமைப்பின் நடப்புத் தலைவராகவும் செயற்படுவார்.

இதன்படி கடந்த 2013ஆம் ஆண்டு கொழும்பில் பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்கள் மாநாடு அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமையில் இடம்பெற்றது.

இதன்படி பொதுநலவாய அமைப்பின் தற்போதைய தலைவர் இலங்கை ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன ஆவார். இந்த நிலையில் விரைவில் அந்தப் பதவி மோ ல்டா அரசு க்கு செல்ல வுள்ளது. இதேவேளை இம்முறை மாநாட்டில் இங்கிலாந்தின் மகாராணியும் கலந்துகொள்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

# சூரன் போர் இன்று

புலோலி வட மேற்கு வில்லிபாதி முருகன் ஆலயத்தில் கந்தசஷ்டி விரதம் கடந்த 12 ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகிச் சிறப்பாகநடைபெற்றுவருகின்றது. இன்று செவ்வாய்க்கிழமை பி.ப.3 மணியளவில் அபிஷேகம் ஆரம்பமாகி விசேட பூசைகள் இடம்பெற்று சூரன் போர் நிகழ்வு நடைபெறும். நாளை புதன்கிழமை காலை 6.30 மணியளவில் பாறணைப் பூசையும், மாலை 6.30 மணியளவில் திருக்கல்யாண உற்சவமும் இடம்பெறும். (து)


**வேலையாள் தேவை**

யாழ். நகரில் உள்ள பந்தல் சேவை ஒன்றுக்கு ஆண் வேலையாள் தேவை.

தொடர்பு: 077 7750 318


## வலி கிழக்கு பிரதேச சபை, புத்தூர். கேள்வி அறிவித்தல் - 2015

கீழ்க்குறிப்பிடப்படும் வேலைகளுக்கு இக்ராட் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி :17.11.2015தொடக்கம் 01.12.2015. மு.ப 10.00 மணி வரை
கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி : 01.12.2015 நண்பகல் 12.00 மணி வரை
கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி: 01.12.2015. நண்பகல் 12.30 மணி
(கேள்விகள் திறந்து பரிசீலிக்கும் போது கேள்விப்பத்திரதாரரும் சமுகமளிக்கலாம்)

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை **"செயலாளர், வலி கிழக்கு பிரதேச சபை, புத்தூர்"** என்ற முகவரிக்கு பதிவு தபால் மூலமாகவோ அல்லது தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் நேரடியாகவோ எதிர்வரும் **01.12.2015** ஆம் திகதி நண்பகல் **12.00** மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைப்பதுடன் இணைப்பிரதியை **"பிராந்திய உள்ளுராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளுராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்"** என்ற முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பிவைக்கப்படல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயர் எழுதப்படல் வேண்டும்.

| இல | வேலையின் பெயர் | ஆகக் குறைந்த இக்ராட் தரம் | மீளளிக்கப் படும் கேள்வி வைப்புப்பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் (VAT, NBT தவிர) |
|---|---|---|---|---|
| 1 | காளிகோவில் வீதி திருத்தம், நீர்வேலி | C9 | 13600.00 | 1000.00 |
| 2 | மயான வீதி திருத்தம், தோப்பு, அச்சுவேலி | C9 | 14900.00 | 1000.00 |
| 3 | ஊரெழு 1ம் குறுக்கு வீதி திருத்தம், | C9 | 20000.00 | 1000.00 |
| 4 | யாழ் வீதி 1ம் ஒழுங்கை- கோப்பாய் இணைப்பு வீதி திருத்தம், உரும்பிராய் | C9 | 13800.00 | 1000.00 |
| 5 | ஞானவைரவர் வீதி திருத்தம் கட்டம் 11, புத்தூர் | C8 | 21650.00 | 1000.00 |
| 5 | இரும்பிலான விற்பனைப் பொருள்களை வைக்கப் பயன்படும் சட்டகம் | C10 | 4746.00 | 1000.00 |

மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

செயலாளர்
வலி கிழக்கு பிரதேச சபை,
தலைமை அலுவலகம்,
புத்தூர்.

16.11.2015

(C/20073)(10.17)

### பரீட்சைக்கான வழிகாட்டல் செயல் அமர்வுகள்

கோப்பாய் கல்விக்கோட்டத்தில் ஜி.சி.ஈ. சாதாரண பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு பரீட்சைக்கான வழிகாட்டல் செயல்அமர்வுகள்நாளை புதன்கிழமை, நாளை மறுதினம் வியாழக் கிழமை, மறுநாள் வெள்ளிக்கிழமை மூன்று தினங்களும் நான்கு நிலையங்களில் நடைபெறவுள்ளன.

காலை 8.30 மணி தொடக்கம் மாலை 3.30 மணிவரை நடைபெறும். சுகவாழ்வு நிலையம் 'லிபரா' நிறுவனத்தின் அனுசரணையுடன் நடக்கும் கணிதம், விஞ்ஞானம் ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கானபரீட்சை வழிகாட்டல் செயல் அமர்வுகள் நாளை புதன்கிழமை புத்தூர் சிறிசோமஸ்கந்தக் கல்லூரியில் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும். அச்சுவேலி மத்திய கல்லூரியில் மு.ப.11.30 மணிக்குஆரம்பமாகும்.

நாளை மறுதினம் வியா ழக்கிழமை கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும். உரும்பிராய் இந்துக்கல்லூரியில் மு.ப. 11.30 மணிக்கு ஆரம்பமாகும். செயல் அமர்வில் கலந்து கொள்ளும் மாணவங்களுக்குஉணவு மற்றும் பாடக் குறிப்புகள் இலவசமாக வழங்கப்படவுள்ளன. (த -11)


சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 2700 திகதி 16.11.2015
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து 23 31 33 69 U
போனஸ் இல. 65
புதன்கிழமை ஜக்பொட் ரூ. 35,470,900/-
வெற்றிபெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 423
சீட்டிழுப்பு திகதி 2015.11.16
வெற்றி இலக்கங்கள் 02 07 23 37 G
ரூ. 42,384,620/=

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1211
சீட்டிழுப்பு திகதி 2015.11.16
வெற்றி இலக்கங்கள் 09 20 26 39 D
ரூ. 34,761,360/=


## யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

### பதவி வெற்றிடம்

**விண்ணப்பம் கோரல்**

**பதவி - சாரதி குறியீட்டு இல. 312/13**

**1. சம்பள அளவுத்திட்டம்:-**

(கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவின் 13/2015 சுற்று நிருபத்திற்கமைய குறி இல.312/13)

14,230 - 120 X 10- 130X10 - 16730

இதர படிகள்,விசேட படிகளும் வழங்கப்படும்.

**02 வயதெல்லை :- 18 - 45 வருடங்கள்**

**03. அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:-**

அ. 8ஆம் வகுப்புக் கல்விச் சான்றிதழும் பஸ் அல்லது லொறி அல்லது இழுவைப் பெட்டியுடன் டிராக்டர் சாரதி அனுமதிப்பத்திரத்துடன் நான்கு (04) வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

**04. விண்ணப்பிக்கும் முறை:-**

மேற்படி பதவிக்கான விண்ணப்பத்தினைச் சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் ரூபா 10.00 இனைச் செலுத்தி படிவத்தினைப் பெற்றுப் பூரணப்படுத்தப்பட்டு சான்றிதழ்களின் பிரதிகளுடன் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் சாரதி குறி இல. 312/13 பதவிக்கான விண்ணப்பம் எனக் குறிப்பிட்டு "தலைவர், யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.து), இல.127, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்" என்னும் முகவரிக்கு 30.11.2015 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

விண்ணப்பதாரி சங்கப் பணியாளர் எனின் குறித்த சங்கத்திறூடாகவே விண்ணப்பிக்கப்படல் வேண்டும்.

மு.ஜெ.சுஜீந்திரன்
தலைவர்
யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.து)

## சாவகச்சேரி நகராட்சி மன்றம் கேள்வி அறிவித்தல்

கீழே குறிப்பிடப்படும் வேலைக்கான கேள்விகள் என்னால் **26.11.2015** ஆம் திகதி ந.ப **12.00** மணிவரை ஏற்றுக் கொள்ளப்பட்டு. அதே தினம் பி.ப **2.00** மணிக்கு கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும்.

கீழே அட்டவணையில் குறிப்பிட்ட வேலைகளுக்கு இக்ராட் C9 அல்லது அதற்கு மேல் உள்ள ஒப்பந்தகாரர்கள் கேள்வி கோர விரும்பினால் அதற்கான கட்டணங்களைச் செலுத்தி கேள்விப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

| தொ. இல. | வேலை விவரம் | மீளளிக்கத்தக்க கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப் படாத கேள்விப் படிவக் கட்டணம் (VAT+NBT உள்ளடங்கலாக) |
|---|---|---|---|
| 01 | நகராட்சி மன்ற வளாகத்தின் முன்பக்கம் மீள்தாரிடல் | 1000/= | 1130/= |
| 02 | சாவகச்சேரி பஸ்தரிப்பு நிலைய சுற்றுப்புற வீதி திருத்தம். | 5900/= | 1130/= |
| 03 | சண்முகானந்தா வீதி மீள் தாரிடல். | 2300/= | 1130/= |
| 04 | யாழ். வீதி, 2ஆம் ஒழுங்கை மீள் தாரிடல் | 2100/= | 1130/= |
| 05 | தாளையடி, அம்மன் கோவில் வீதியும் 2ஆம் ஒழுங்கையும் மீள்தாரிடல் | 3700/= | 1130/= |
| 06 | உப்புக்கேணி வீதி மீள்தாரிடல் | 3700/= | 1130/= |
| 07 | பெருங்குளம் சங்கத்தானை 2ஆம் ஒழுங்கை மீள் தாரிடல் | 2000/= | 1130/= |
| 08 | செருக்கல், பிள்ளையார் வீதி மீள் தாரிடல் | 2300/= | 1130/= |
| 09 | நெல்லியடி முருகன் வீதி, மீள் தாரிடல் | 4800/= | 1130/= |
| 10 | அம்மன் வீதி முதலாம் ஒழுங்கை மீள் தாரிடல். | 3000/= | 1130/= |
| 11 | சாவகச்சேரி கொல்களம் திருத்தம். | 1700/= | 1130/= |

கேள்விப் பத்திரங்களை சாவகச்சேரி நகராட்சி மன்றத்தில் **24.11.2015** ஆம் திகதி பி.ப **2.30** மணிவரை மேற் குறிப்பிட்ட கட்டணங்களைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப் படிவங்கள் இணைப் பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதி **செயலாளர், நகராட்சிமன்றம் சாவகச்சேரி** என முகவரியிடப்பட்டு, நேரடியாகப் பெட்டியில் இடப்படவேண்டும். இணைப்பிரதி **பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு 26.11.2015 ஆம் திகதி ந.ப12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

மேற்படி கேள்வியானது உறையிடப்பட்டு உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

இது தொடர்பான மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் இவ் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

செயலாளர்,
நகராட்சிமன்றம்,
சாவகச்சேரி.

நகராட்சிமன்றஅலுவலகம்
சாவகச்சேரி
17.11.2015.

(C/20074)(10.17)

# பிளேட்டினால் தன்னைத் தானே வெட்டி நோயாளி நேற்றுச் சாவு

கடந்த ஒரு வார காலமாக யாழ். போதனா வைத்தியசாலையில் முட்டு வருத்தத்துக்குச் சிகிச்சை பெற்று வந்த ஒருவர் பிள்ளைகள் தன்னை வெறுத்து வந்து பார்க்காத விரக்தியில் தன்னைத் தானே பிளேட்டினால் வெட்டிக் காயப்படுத்தி மூச்சுத் திணறல் ஏற்பட்டு உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் அதிகாலை 12.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. அச்செழு – நீர்வேலியைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான 63 வயதுடைய த.பெனடிக்ற் என்பவரே மேற்படி சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது:– பெனடிக்ற் முட்டு வருத்தத்துக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார். தன்னுடைய 4 பிள்ளைகளில் யாரும் தன்னை வந்து பார்க்காத காரணத்தால் கவலையுடன் இருந்த அவர் விரக்திக்கு உள்ளாகியுள்ளார்.

இந்த நிலையில் அவர் நேற்று முன்தினம் இரவு தன்னைத் தோனே பிளேட்டினால் வெட்டிக் காயங்களை ஏற்படுத்தியுள்ளார் இதனால் இரத்தப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. சம்பவம் இடம்பெற்று 45 நிமிடங்களுக்குப் பின்னர் அவர் உயிரிழந்துள்ளார்.

இவரது மரணவிசாரணை நீதிமன்றப்பணிப்புரைக்கு அமைவாக மரண விசாரணை அதிகாரி ந.பிரேம்குமாரினால் மேற்கொள்ளப்பட்டது. உயிரிழந்தவர் மூச்சுத்திணறலால் உயிரிழந்துள்ளதாக உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரியவந்துள்ளது. (த-86-10)

## மது

யில் நடைபெற்ற 'போதைப் பொருளில் இருந்து விடுதலை பெற்றநாடு' மூன்றாவது கட்ட நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:– சமூக சக்தியாக மாறியிருக்கின்ற போதைப்பொருளை முழுமையாகத் தடைசெய்வது முடியுமா என்பது முழு உலகமும் எதிர்நோக்கியுள்ள மிகப்பெரும் சமூகப் பிரச்சினையாகும். சட்டவிரோத போதைப் பொருள் தொடர்பான நடவடிக்கைகளில் பதவிகள் மற்றும் நட்பின் அடிப்படையில் எவருக்கும் எந்தவொரு சலுகைகளும் வழங்க முடியாது. குற்றவாளிகளுக்கு வழங்க முடியுமான உச்சபட்ச தண்டனைகளை வழங்குவது அரசின் கொள்கையாகும்.

பாடசாலைகள் மற்றும் நகருக்கு அண்மித்த இடங்களில் போதைப் பொருள் விற்பனை தொடர்பாகக் கடுமையான கட்டுப்பாடுகளைக் கொண்டுவருவதில் அரசு கவனம் செலுத்தியுள்ளது. போதைப்பொருள்களை ஒழித்தல் தொடர்பில் அதிகபட்ச சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அரசு செயற்பட்ட போதும் போதைப்பொருள் பாவனையைக் குறைப்பது சமூகப் பொறுப்பாகும். மகா சங்கத்தினர்கள், சமயத் தலைவர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட எல்லோரும் இந்த விடயத்தில் ஒன்றுபட வேண்டும்.

உலகில் உயர்ந்த அபிவிருத்திகளைக் கொண்டுள்ள நாடுகள் முதல் எல்லா நாடுகளும் எல்லா சமூகங்களும் இந்தப் போதைப் பொருள் பிரச்சினையை எதிர்கொண்டுள்ளன. போதைப்பொருள் பிரச்சினையை சமூகத்திலிருந்து முழுமையாக ஒழித்துக்கட்ட முடியாதபோதிலும் சமூகத்தைப் போதைப் பொருள்களில் இருந்து பாதுகாப்பதற்கு எல்லோரும் ஒன்றிணைய வேண்டும்.

போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பாக உருவாக்கப்பட்டுள்ள ஜனாதிபதி செயலணியூடாக மாவட்ட மட்டத்தில் போதைப்பொருள் ஒழிப்புத் தொடர்பாக தேவையான சுற்றறிக்கைகளும் ஆலோசனைகளும் வழங்கப்பட்டுள்ளன.

மாவட்ட செயலாளர் அலுவலகங்கள் மற்றும் பிரதேச செயலாளர் அலுவலகங்களுக்கு இது தொடர்பில் கூடிய அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அந்த நிகழ்ச்சித்திட்டத்தை செயல்திறனாக நடைமுறைப்படுத்துவதற்கு எல்லோரும் ஒன்றுபட வேண்டும்–என்றார்.

அமைச்சர்களான ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய, கபீர் ஹாசீம், சப்ரகமுவ மாகாண முதலமைச்சர் மகிபால ஹேரத், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேச பாடசாலைப் பிள்ளைகள் ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (த-ரி4)

## கடலில்

சங்கங்களின் சம்மேளனம் கோரியுள்ளது.

இதுதொடர்பான மனு தம்மிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் ரமேஷ் கண்ணா தெரிவித்தார்.

குடாநாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை, வெள்ளம் மற்றும் கடல் கொந்தளிப்பால் 90 வீதமான கடற்றொழிலாளர்கள் கடலுக்குச் சென்று தொழிலை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மீனவர்கள் கடந்த ஒரு வார காலமாகக் கடற்றொழிலுக்குச் செல்லாததனால் அவர்களின் நாளாந்த வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அவர்களுக்கான நிவாரணத்தைப் பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மீனவர்களின் இந்தக் கோரிக்கை யாழ். அரச அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

குடாப்பரப்பு மற்றும் தீவுப்பகுதி, வடமராட்சி, வடமராட்சி கிழக்கு போன்ற கடற்பகுதிகளில் மீன்பிடித் தொழில் பெரிதும் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-17)

## ஞாயிறு

பதிவாகியிருந்தது. இதுவே அதி கூடிய மழை வீழ்ச்சியாக இருந்தது. நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பகல் 10 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி வரையிலேயே பதிவாகியிருந்தது. இருப் பினும் நேற்றுமுன்தினம் இரவு 8.30 மணி தொடக்கம் நேற்றுக் காலை 8.30 மணி வரையிலான 12 மணி நேரத்தில் யாழ். மாவட்டத்தில் 126.1 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவானது. யாழ். மாவட்டத்தில் அதிகபட்சமாக பருத்தித்துறையில் 167 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் இரவு 67.8 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 62.6 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் பதிவாகியுள்ளது. (த-5-ரி4)

## அனைவரும்

துள்ளார்.

அனைத்து மக்களும் சமவு ரிமைகளுடன் வாழ்வதாக உண ரக்கூடிய சூழ்நிலை உருவாக் கப்படவேண்டியது மிகவும் இன்றியமையாதது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகத்தின் தென்னாசிய கல்வி நிறுவனத்தில் உரையாற்றிய போதே வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:–

புதிய அரசியல் சாசனத்தில் உரிமைகள் பற்றிய விடயங்களும் உள்ளடக்கப்படும். சிவில், அரசியல் உரிமைகள் மட்டுமன்றி பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகளும் உள்ளடக்கப்படும்.

புதிய அரசியல் சாசனம் அனைத்துப் பிரஜைகளின் உரிமைகளை உறுதி செய்யக்கூடிய வகையில் அமையும். அனைத்து மக்கள் மற்றும் சமூகங்களும் தீர்மானம் எடுப்பதில் உள்ளீர்த்துக்கொள்ளும் வகையில் அரசியல் சாசனம் உருவாக்கப்படும்.

பொறுப்பு கூறுதல் மற்றும் பொறுப்புணர்ச்சியுடன் கூடிய அரசு அமையும் வகையில் அரசியல் சாசனத்தில் திருத்தங்கள் செய்யப்படும்.

இதன்மூலம் தேர்தல் முறைமை மாற்றத்துடன் நாடாளுமன்றம் வலுவான ஓர் கட்டமைப்பாக உருவாகும்.

தெற்கில் இடம்பெற்ற வன்முறைகள் வடக்கில் இடம்பெற்ற பயங்கரவாதச் சம்பவங்கள் மீளவும் இடம்பெறாமல் இருப்பதனை தடுப்பதற்கு சிறந்த ஓர் அரசியல் சாசனம் அவசியமானது.

இவ்வாறான ஓர் அரசியல் சாசனத்தை அமைத்து ஆட்சி நடத்தும் போது நல்லிணக்கத்தையும் நிலையான சமாதானத்தையும் ஏற்படுத்த முடியும். அனைத்து மக்களும் சமவுரிமைகளுடன் வாழ்வதாக உணரக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டியது மிகவம் இன்றியமையாகது. இலங்கை அரசு ஐக்கிய நாடுகள் அமைப்புடன் இணைந்து செயற்பட்டு வருகின்றது. குறிப்பாக, ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் மற்றும் அவரது அலுவலகத்துடன் நெருக்கமான உறவைப் பேணுகின்றோம். இதன்மூலம் நீதி மற்றும் பொறுப்புக்கூறல் உள்ளிட்ட முக்கியமான பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெறுவதற்கு ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் தொழிநுட்ப உதவி பெறப்படும்.

மேலும் மீள்குடியேற்றம், மீள்கட்டுமானம் மற்றும் நல்லிணக்கத்துக்கு நிதி மற்றும் தொழிநுட்ப ஆலோசனைகளை சர்வதேச சமூகத்துடன் இணைந்து செயற்படுவதன் மூலம் இலங்கை அரசு பெற்றுக்கொள்ளும்.

அத்துடன் நல்லிணக்கம், அபிவிருத்தி, மக்களுக்கான நலன்புரித் திட்டங்கள் மற்றும் சமரச செயல்முறை ஆகியவை தொடர்பில் புலம்பெயர் அமைப்புக்களின் உதவி, ஆலோசனைகளைப் பெறுவது தொடர்பில் இலங்கை அரசு பேச்சுவார்த்தை நடத்துகின்றது.–என்றார். (த-வ)

## மேலும்

இடையிலானசந்திப்பைத் தொடர்ந்து, முதற் கட்டமாக 32 கைதிகளும் இரண்டாம் கட்டமாக எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் 30 கைதிகளும் விடுவிக்கப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய முதற் கட்டமாக 11 ஆம் திகதி 31 பேர் விடுவிக்கப்பட்டிருந்தனர். இந்த நிலையில் கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றத்தில் நேற்றைய தினம் 8 தமிழ் அரசியல் கைதிகள் முற்படுத்தப்பட்டிருந்தனர். இவர்களைப் பிணையில் விடுவிப்பதற்கு சட்டமா அதிபர் சம்மதம் வழங்கியிருந்தார். இதனால் நீதிமன்றம் பிணை வழங்கியது.

இவர்களை தலா பத்து இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளின் கீழ் விடுவிக்க உத்தரவிட்ட நீதிவான், அவர்களின் வெளிநாட்டுப் பயணங்களை முற்றாகத் தடை செய்துள்ளார். ஒவ்வொரு மாதமும் இரண்டாம் மற்றும் கடைசி ஞாயிறு தினங்களில் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுக்குச் சென்று கையொப்பமிட வேண்டுமென்றும் நீதிபதி பணித்துள்ளார்.

'கடந்த வாரம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதமருடன் நடத்தியிருந்த பேச்சுக்கு அமைய இந்த வாரம் 30 அரசியல் கைதிகளுக்கு பிணை வழங்க அரசு இணக்கம் தெரிவித்திருந்தது. இதன் முதல் கட்டமாக இன்று (நேற்று) 8 சந்தேக நபர்களுக்கு பிணை வழங்கப்பட்டது. ஏனையவர்களுக்கு இந்த வாரத்திற்குள் பிணை வழங்கப்படும்' என்று கூட்டமைப்பின் பேச்சாளரும் – நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். (த-5)

## பாதிக்கப்பட்ட

தற்போது பாதிக்கப்பட்டு நலன்புரி முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள 7486 குடும்பங்களுக்குச் சமைத்த உணவுகளை பிரதேச செயலகம் ஊடாக வழங்கி வருகிறோம். அத்தோடு மேலும் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு உலருணவுகள் மற்றும் தறப்பாள்களை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

அது மட்டுமன்றி நீர் தேங்கி நிற்கும் கால்வாய்களைச் சுத்தப்படுத்தி தண்ணீரை வெளியேற்றும் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. இதற்காக இராணுவத்தினரின் உதவியையும் நாடியுள்ளோம் – என்றார். (த-ரி6)

## புனர்வாழ்வளிக்க

சியல் கைதிகள் மேற்கொண்ட உணவு தவிர்ப்புப் போராட்டத்தின் போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் வழங்கப்பட்ட உறுதிமொழி நிறை வேற்றப்படவில்லை. இதனால் தமிழ் அரசியல் கைதிகள் கடந்த 8 ஆம் திகதி மீண்டும் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

இதற்கிடையில் இதுவரை 39 பேர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர். ஒன்பதாவது நாளாகவும் தமிழ் அரசியல் கைதிகள் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்திருந்த நிலையில், நேற்றைய தினம் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் அவசர கலந்துரையாடல் அலரிமாளிகையில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் பிரதமரின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கா, சட்ட ஒழுங்கு அமைச்சர் சாகல ரட்நாயக்க அமைச்சர் டி.எம். சுவாமிநாதன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். அத்துடன் சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் பங்குபற்றியிருந்தனர்.

இந்தக் கலந்துரையாடலில், தமிழ் அரசியல் கைதிகளில் பெரும்பான்மையானோர் ஜனாதிபதிக்குக் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்த, புனர்வாழ்வு வழங்குதல் தொடர்பிலான விடயம் ஆராயப்பட்டது.

உயர் நீதிமன்றத்தில் வழக்கு உள்ள 85 பேர் புனர்வாழ்வுக்கான கோரிக்கையை விடுத்திருந்தனர். அவர்களின் கோரிக்கையைச் சாதகமாகப் பரிசீலிப்பதாக அரசு இதன்போது உறுதியளித்துள்ளது. அத்துடன் புனர்வாழ்வுக்கு முதல் தொகுதியினர் இன்றிலிருந்து பத்து தினங்களுக்குள் அனுப்பப்படுவர் என்றும் இதன்போது அரசு உறுதி வழங்கியுள்ளது.

பிணை வழங்கி விடுவிக்கப்படுவதாகச் சொல்லப்பட்டவர்களில் இன்னமும் 23 பேர் மாத்திரமே உள்ள நிலையில், அவர்களுக்கு மேல் நீதிமன்றத்தின் ஊடாகப் பிணை விரைவில் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை, அமைச்சர் டி.எம். சுவாமிநாதன், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் மகசின் சிறைச்சாலைக்குச் சென்று அரசியல் கைதிகளுக்கு அறிவித்தனர்.

இதன்போது அரசியல் கைதிகள், தாம் இந்தத் தீர்மானங்களை – உறுதிமொழிகளை ஏற்று உணவு தவிர்ப்புப் போராட்டத்தை கைவிடுவதா இல்லையா என்பதை நாளை (இன்று) சிறைச்சாலைகள் ஆணையாளர் ஊடாக அறிவிப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

அரசியல் கைதிகளுக்கு புனர்வாழ்வு வழங்குவது கூட்டமைப்பின் முடிவு அல்ல என்றும் கைதிகள் தாமாக விரும்பியே அந்தக் கோரிக்கையை முன்வைத்தனர் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் குறிப்பிட்டார்.

இதேவேளை தண்டனை வழங்கப்பட்டுள்ள கைதிகளின் பொது மன்னிப்பு தொடர்பாக ஜனாதிபதியுடன் இன்று அல்லது நாளைய தினத்தினுள் பேசவுள்ளதாக, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் குறிப்பிட்டார். (த-5)

## வெள்ள

மழை வீழ்ச் சியும் பதிவாகியுள்ளது. இந்தக் கன மழை காரணமாக வடக்கு மாகா ணம் எங்கு வெள்ளக் காடாகியுள் ளது. குளங்கள் நிரம்பி வழிவதுடன், வான்கதவுகளும் திறந்து விடப்பட்டுள்ளன. இதனால் சில வீதிகளின் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் சில கிராமங்கள் தொடர்புகள் இல்லாமல் துண்டிக்கப்பட்டுள்ளன. அந்தக் கிராமங்களுக்குரிய உலர் உணவுகள் ஏற்கனவே களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தாகவும், அந்தப் பகுதி அரச அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நேற்றுப் பகல் வடக்கின் சகல மாவட்டங்களிலும் மழை ஓரளவு குறைந்திருந்தது. இருப்பினும் வெள்ளம் வடிந்தோடாமல் தேங்கிய நிலையில் இருந்தமையினால், மக்களால் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்ப முடியவில்லை.

யாழ்.மாவட்டத்தில் 21 ஆயிரத்து 437 குடும்பங்களைச் சேர்ந்த 76 ஆயிரத்து 673 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 3 ஆயிரத்து 161 குடும்பங்களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 499 பேர் இடம்பெயர்ந்து 63 தற்காலிக நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 4 ஆயிரத்து 656 குடும்பங்களைச் சேர்ந்த 16 ஆயிரத்து 450 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 820 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 683 பேர் இடம்பெயர்ந்து 13 தற்காலிக நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆயிரத்து 471 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 390 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 430 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 230 பேர் இடம்பெயர்ந்து 18 தற்காலிக நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் 537 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 28 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 324 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 275 பேர் இடம்பெயர்ந்து 15 தற்காலிக நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் 213 குடும்பங்களைச் சேர்ந்த 727 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 8 பேர் இடம்பெயர்ந்து ஒரு தற்காலிக நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ளனர். (த-5-101)

## ஐ.நா.

கால நிலையால் ஐ. நா. அலுவலகம் அமைந்துள்ள பகுதியில் வெள்ளம் தேங்கியிருந்தபோதும் அதனை யும் பொருட்படுத்தாமல் கைதிகளின் உறவினர்கள் இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது உலகுக்கு நல்லாட்சி தமிழருக்குக் கொடுங்கோலாட்சியா?, சிறை வாழ்வுதான் தமிழருக்கு நிரந்தரமா?, சர்வதேசமே அரசியல் கைதிகளின் விடுதலைக்கு அழுத்தம் கொடு போன்ற பல்வேறு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை அவர்கள் தாங்கியிருந்தனர். (த-101)

## யாழ்.

டங்களுக்கு ஒரு மில்லியன் ரூபாவும் நிவாரணத்துக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இதேவேளை, மேலதிக நிவர்ரண உதவிகள் தேவைப்பட்டால் வழங்கப்படும் என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (த)

# அவன்கார்ட் நிறுவனத்துடன் புதிய அரசும் உடன்படிக்கை

## ஆதாரம் உள்ளது என்கிறது ஆங்கில ஊடகம்

கொழும்பு, நவ.17
புதிய அரசும் சர்ச்சைக்குரிய அவன்கார்ட் நிறுவனத்துடன் கடந்த மாதம் 20ஆம் திகதி ஒப்பந்தமொன்றைச் செய்துகொண்டுள்ளதாக கொழும்பு ஆங்கில ஊடகமான 'சண்டே லீடர்' செய்தி வெளியிட்டுள்ளது.
இது தொடர்பில் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
ஒப்பந்த காலம் காலாவதியாக முன்னதாக ஒப்பந்தத்தை நீக்கம் செய்ய முடியாத வகையில் அரசு அவன்கார்ட் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளது.
இந்த ஒப்பந்தம் குறித்த ஆவணப் பிரதி சண்டே லீடரிடம் உள்ளது.
அரசுக்குச் செலுத்த வேண்டிய நிலுவைப் பணத்தைச் செலுத்துவதாக அளித்த வாக்குறுதியைத் தொடர்ந்து, இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.
அரச பாதுகாப்பு நிறுவனமான ரக்னா லங்கா நிறுவன அதிகாரிகளுடன் அவன்கார்ட் அதிகாரிகள் இந்த ஒப்பந்தத்தைச் செய்து கொண்டுள்ளனர்.
அவன்கார்ட் நிறுவனத்துடனான அனைத்து ஒப்பந்தங்களும் நீக்கப்பட்டுள்ளதாக அண்மையில் அமைச்சர் ராஜித சேனாரத்ன ஊடகங்களில் அறிவித்திருந்தார்.
எனினும் அவன்கார்ட் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டுள்ளது என அதில் கூறப்பட்டுள்ளது. (த-வ)

# இந்திய மீனவர் பிரச்சினை; பேச்சு நடத்த நிகழ்ச்சி நிரல்

## அவசியம் என்கிறார் அமைச்சர் அமரவீர

கொழும்பு, நவ.17
மீனவர் பிரச்சினைகள் குறித்து பேச்சு நடத்த தெளிவானதும் நிரந்தரமானதுமான நிகழ்ச்சி நிரல் ஒன்று அவசியம் என மீன் பிடித்துறை அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.
எனினும் இலங்கைக் கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபடுவதற்கு அனுமதிக்க முடியாது என அவர்திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.
இது தொடர்பில் கொழும்பு ஆங்கில ஊடகமொன்றுக்கு கருத்துத் தெரிவித்துள்ள மீன்பிடித்துறை அமைச்சர் மகிந்த அமரவீர-
இலங்கை அரசு, இந்திய மீனவர் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு காணும் நோக்கில் பேச்சு நடத்தப்படவேண்டும்.
மாறாக இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்பரப்பில் மீன் பிடிக்க அனுமதிக்கும் நோக்கிலான பேச்சுக்களில் பங்கேற்கத் தயாரில்லை. பேச்சில் என்ன விடயங்கள் பேசப்பட வேண்டுமென்பது குறித்த நிகழ்ச்சி நிரலொன்று அவசியமானது.
இதுவரையில் நடைபெற்ற அனேகமான பேச்சுக்களில் இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடிக்க அனுமதிக்குமாறு கோரும் நோக்கில் நடைபெற்றுள்ளன. கடந்த 30 ஆண்டுகளாக இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்டு



வருகின்றனர்.
எவ்வாறெனினும், இலங்கைக் கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபடுவதற்கு அனுமதிக்க முடியாது- என்றார். (த-வ)

# விஜயதாச, வஜிர குறித்து விசாரணை

## நடத்த பிரதமர், ஜனாதிபதி தீர்மானம்



கொழும்பு, நவ.17
அவன்காா்ட் நிறுவனத்துடன் தொடர்புள்ளதாகக் கூறப்படும் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச மற்றும் உள்விவகார அமைச்சர் வஜிர அபேவர்த்தன ஆகியோர் குறித்து விசாரணை நடத்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் தீர்மானித்துள்ளனர்.
இது தொடர்பில் கொழும்பு ஊடகமொன்று வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
அவன்கார்ட் நிறுவன விவகாரத்தில் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச மற்றும் உள்விவகார அமைச்சர் வஜிர அபேவர்த்தன ஆகிய இரு அமைச்சர்களுக்கும் தொடர்பு இருப்பதாகக் குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது.
இந்தக் குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணை நடத்த ஜனாதிபதியும் பிரதமரும் தீர்மானித்துள்ளனர்.
அவன்காா்ட் நிறுவனத்தைப் பாதுகாப்பதற்கு ஆளும் கட்சியின் மூன்று அமைச்சர்கள் முயற்சிப்பதாக ஜே.வி.பி. தலைவர் அனுர குமார திஸாநாயக்க நாடாளுமன்றில் குற்றஞ் சுமத்தியிருந்தார்.
திலக் மாரப்பன, வஜிர அபேவர்த்தன மற்றும் விஜயதாச ராஜபக்ச ஆகியோர் மீதே அவர் குற்றஞ் சுமத்தியிருந்தார்.
நீதி அமைச்சர் மற்றும் உள்விவகார அமைச்சர் ஆகியோருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணை நடத்தி அமைச்சரவைக்கு அறிக்கை சமர்ப்பிக்க, பிரதமரும் ஜனாதிபதியும் திட்டமிட்டுள்ளனர்.
இதன்படி குறித்த விசாரணைகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது என அதில் கூறப்பட்டுள்ளது. (த-வ)

# அரச நிறுவன அதிகாரிகள் 13 பேரைப் பதவி நீக்க பணிப்பு

## *வழங்கியது ஜனாதிபதி ஆணைக்குழு*

நிதி மோசடி தொடர்பாக ஆறு அரச நிறுவனங்களைச் சேர்ந்த 13 உயர் அதிகாரிகளை உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் பதவி நீக்கம் செய்யுமாறு பெரியளவிலான நிதி மோசடி மற்றும் ஊழல்கள் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழு, உரிய அமைச்சுக்களுக்கு உத்தரவிட்டுள்ளது.
இவ்வாறு ஆணைக்குழுவின் செயலாளர் லெஸில் டி சில்வா தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-
ஆணைக்குழுவின் விசாரணைகளுக்கு தேவையான தகவல்களை பெற்றுக் கொள்வதற்கு இடையூறாக இருந்தார்கள் என்ற காரணத்தினாலேயே குறித்த அதிகாரிகளை நீக்குமாறு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.
நீதி அமைச்சு, தெங்கு ஆராய்ச்சி நிறுவனம், இலங்கை மீன்பிடி மற்றும் துறைமுக அதிகாரசபை, பொது நிர்வாக அமைச்சு, கூட்டுறவு மொத்த விற்பனைக் கூட்டுத்தாபனம், சுயாதீன தொலைக்காட்சி போன்ற அரச நிறுவனங்களின் 13 உயர் அதிகாரிகளையே பதவி விலக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (வ)



*இந்தியாவுக்கான இலங்கையின் புதிய தூதுவர் எசல வீரக்கோன், இந்தியக் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜியிடம் தனது நியமனம் தொடர்பான ஆவணங்களை அதிகாரபூர்வமாக கையளித்துள்ளார். இந்தியாவுக்கான புதிய தூதுவராகப் பொறுப்பேற்றுள்ள எசல வீரக்கோன், இலங்கை வெளிவிவகார அமைச்சில் பணியாற்றிய துறைசார் சிரேஷ்ட இராஜதந்திரியாவார். (வ)*

# மதுபானம் அருந்திய பொலிஸார் இருவர் பணியிலிருந்து நீக்கம்

கொழும்பு, நவ.17
கேகாலை பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பிரிவில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவரை பணிநீக்கம் செய்ய கேகாலைப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.
இவர்கள் இருவரும் மாலை நேரத்தில் சீருடையுடன் விடுதியொன்றில் மதுபானம் அருந்தியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர்.
இவ்வாறு-இவர்கள் மதுபானம் அருந்தியதைப் பொதுமக்கள் பொலிஸ் விசேட பிரிவுக்கு தொடர்பு கொண்டு தெரிவித்துள்ளனர்.
இதன்பின்னர், குறித்த இருவரும் அழைத்து வரப்பட்டு கேகாலை பொலிஸ் நிலையத்தில் விசாரணை செய்யப்படும்போது தப்பிச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (வ)

# ரவி – கபீர் இடையே முறுகல்

நிதி அமைச்சர் ரவி கருணா நாயக்கவுக்கும், அரச முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் கபீர் ஹாசீமுக்கும் இடையில் முரண்பாட்டு நிலைமை ஏற்பட்டுள்ளதாக கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட் டுள்ளது.
இது தொடர்பில் அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-
வங்கி மற்றும் நிதி நிறுவனங்களுக்கான அதிகாரிகள் நியமனங்கள் தொடர்பாகவே இந்த முரண்பாட்டு நிலைமை உருவாகியுள்ளது.
நிதி அமைச்சின் கீழ் இயங்கி வந்த அரச வங்கிகள் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவை மாற்றத்தின்போதுஅரசமுயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டன.
இந்த நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர் நியமனங்களில் சர்ச்சை ஏற்பட்டுள்ளது. நிதி அமைச்சரினால் நியமிக்கப்பட்ட அதிகாரிகளை நீக்கிவிட்டு அமைச்சர் கபீர் ஹாசீம் புதிய அதிகாரிகளைநியமித்துள்ளார்.
இவ்வாறு-அதிகாரிகள் நியமனங்களில் இருவருக்கும் இடையில் கடுமையான கருத்து முரண்பாட்டு நிலைமை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை- அமைச்சர் கபீர் ஹாசீமின் உத்தரவுக்கமைய குறித்த நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் செயப்படுவதில்லை என அதில் கூறப்பட்டுள்ளது. (வ)

# மகாபொல நிதியத்தில் நிதிப் பற்றாக்குறை

## திறைசேரியிடம் கோரும் நிலை

கொழும்பு, நவ.17
பல்கலைக்கழக மாணவர்களுக்கு மகாபொல நிதி வழங்குவதற்கு தற்பொழுது மகாபொல புலமைப் பரிசில் நிதியத்திடம் உள்ள நிதி ஒதுக்கீட்டில் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.
இதனால் அந்த நிதியம் திறைசேரியிலிருந்து நிதி பெற்றுக்கொள்ளும் நிலைமை ஏற்பட்டுள்ளதாக அவை சுட்டிக்காட்டியுள்ளன.
இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:-
வங்கியிலிருந்து கிடைக்கும் வட்டி வீதம் குறைந்து, புலமைப் பரிசில் வழங்கும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்ததன் காரணமாக மகாபொல நிதியத்திடம் நிதிப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.
புலமைப் பரிசில் வழங்குவதற்கு வருடத்துக்கு 1.2 பில்லியன் ரூபா செலவிடப்படுகின்றது. இந்த நிதி மகாபொல நிதியத்திலுள்ள 9 பில்லியன் ரூபா நிதியின் மூலம் கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து வழங்கப்பட்டு வருகின்றது.
எனினும் வங்கி வட்டி வீதம் குறைவடைந்துள்ளதால் பல்கலைக்கழக மாணவர்களுக்கு மகாபொல புலமைப்பரிசில் வழங்குவதற்கு தேவையான ஒதுக்கீட்டில் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது எனக் கூறப்பட்டுள்ளது. (த-வ)

# வாகனங்களுக்கு வீதி வரி அறவீடு செய்யத் தீர்மானம்

கொழும்பு, நவ.17
வாகனங்களுக்கு வீதி வரி அறவீடு செய்ய அரசு புதிய திட்டம் ஒன்றை அறிமுகம் செய்யத் தீர்மானித்துள்ளது.
இந்தத் திட்டத்தில் மோட்டார் சைக்கிள்களும் உள்ளடக்கப்படவுள்ளதாக நிதி அமைச்சுத் தகவல்கள் தெரிவித்தன.
இந்த வரி ஒரு வருடத்துக்கு சேர்த்து அறவிடப்படவுள்ளது. இதனால் குறித்த வரியை வாகன வரி அனுமதிப்பத்திரத்தின் அறவீட்டுடன் சேர்த்து பெற்றுக்கொள்வதற்கு அரசு தீர்மானித்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-வ)

# டிசெம்பரில் தேசிய விளையாட்டு விழா

# கிராமப்புற வீரவீராங்கனைகள் சாதிப்பர்

## விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 17

41ஆவது தேசிய விளையாட்டு விழா எதிர்வரும் டிசெம்பர் மாதம் 18ஆம், 19ஆம், 20ஆம் திகதிகளில் தியகம மகிந்த ராஜபக்ச விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளதாக விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜெயசேகர தெரிவித்துள்ளார்.

விளையாட்டுத்துறை அமைச்சின் கட்டடத் தொகுதியில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்; 'இந்த மாதம் 20 ஆம் திகதி தொடக்கம் 22 ஆம் திகதி வரை கடற்கரை கரப்பந்தாட்டப் போட்டி திருகோணமலையிலும், கபடிப் போட்டி 27 ஆம் திகதி தொடக்கம் 30ஆம் திகதி வரை மன்னார் மாவட்ட விளையாட்டு மைதானத்திலும் இடம்பெறும். அத்துடன் கிரிக்கெட் போட்டி மாத்தறையிலும் யூடோ போட்டி 27ஆம் திகதி தொடக்கம் 29 ஆம் திகதி வரை தங்கல்ல ராகுல வித்தியாலயத்திலும் கரப்பந்தாட்டத் தொடர் 26ஆம் திகதி தொடக்கம் 29 திகதி வரை நாவலபிட்டியவிலும் உதைபந்தாட்டத் தொடர் பதுளையிலும். கராத்தே தொடர் அனுராதபுரத்திலும், எல்லே தொடர் குளியாப்பிட்டியிலும் இடம்பெறும். கிராமப்புற விளையாட்டு வீர வீராங்கனைகள் இம்முறை அதிக பிரதிநிதித்துவத்தைப் பெறுவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்' என்றார்.



டிசம்பர் மாதம் 18 ஆம் திகதி இடம்பெறும் ஆரம்ப நிகழ்வுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கலந்து கொள்வார். இறுதிநாள் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்து கொள்ளவுள்ளார். (ம-23-108)



கழகங்களுக்கு இடையிலான தேசியமட்ட சதுரங்கத் தொடரில் போல் மோபி கழகத்தின் சார்பாகப் பங்குபற்றிய ஆர்.கே.ஆதவன் தலைமையிலான அணி கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளது. (ம-422)

# முதலமைச்சர் கிண்ண சதுரங்கத் தொடரின் மாகாணமட்ட முடிவுகள்





மாங்குளம், நவ. 17

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான சதுரங்கத் தொடர் கடந்த சனி மற்றும் ஞாயிறு தினங்களில் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரியில் நடைபெற்றது. குறித்த தொடரில் முதல் 5 இடங்களைப் பெற்றவர்களின் விவரங்கள் வருமாறு:-

**ஆண்கள் பிரிவு**

6வயது ஆண்கள் பிரிவில் ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தைச் சேர்ந்த பி.சாரு முதலாம் இடத்தையும், கே.சஜீவ் இரண்டாம் இடத்தையும், நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலையைச் சேர்ந்த ரி.சாயிபிரியங்கன் மூன்றாம் இடத்தையும், கிளிநொச்சி மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த பி.பிரவீணன் நான்காம் இடத்தையும், யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையைச் சேர்ந்த ஆர்.யெயராம் ஐந்தாம் இடத்தையும் பெற்றனர்.

8வயது ஆண்கள் பிரிவில் ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தைச் சேர்ந்த ஏ.டறன் முதலாம் இடத்தையும், யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையைச் சேர்ந்த யே.பகவான் இரண்டாம் இடத்தையும், கொக்குவில் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த வி.டனுசிகன் மூன்றாம் இடத்தையும், மேலைப்புலோலி சைவ வித்தியாலயத்தைச் சேர்ந்த யு.கிருத்திகன் நான்காம் இடத்தையும், உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தைச் சேர்ந்த எஸ்.வேததர்சன் ஐந்தாம் இடத்தையும் பெற்றனர்.

10வயது ஆண்கள் பிரிவில் உடுப்பிட்டி அ.மி.கல்லூரியைச் சேர்ந்த எஸ்.அபிமன்யு முதலாம் இடத்தையும், யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையைச் சேர்ந்த ஏ.ஆருத்திரன் இரண்டாம் இடத்தையும், யே.ஆர்த்திகன் மூன்றாம் இடத்தையும், நெல்லியடி மத்திய கல்லூரியைச் சேர்ந்த எஸ்.அபிசேக் நான்காம் இடத்தையும், பொஸ்கோ வித்தியாலயத்தைச் சேர்ந்த எஸ்.அக்சயன் ஐந்தாம் இடத்தையும் பெற்றனர்.

12வயது ஆண்கள் பிரிவில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த யே.விஸ்ணுராஜ் முதலாம் இடத்தையும், யாழ். இந்துக் கல்லூரியைச் சேர்ந்த கே.அனிசங்கர் இரண்டாம் இடத்தையும், ஆர்.லுலீசன் மூன்றாம் இடத்தையும், ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த எஸ். மதுரங்கன் நான்காம் இடத்தையும், வி.சாகித்தியன் ஐந்தாம் இடத்தையும் பெற்றனர்.

14வயது ஆண்கள் பிரிவில் ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த ஆர்.தனுசன் முதலாம் இடத்தையும், யாழ். இந்துக் கல்லூரியைச் சேர்ந்த எஸ்.கபிசன் இரண்டாம் இடத்தையும், உடுப்பிட்டி அ.மி.கல்லூரியைச் சேர்ந்த பி.சிவபாலசிறி மூன்றாம் இடத்தையும், யாழ். இந்துக் கல்லூரியைச் சேர்ந்த ஆர்.நிவேதன் நான்காம் இடத்தையும், வி.மிசோதன் ஐந்தாம் இடத்தையும் பெற்றனர்.

16வயது ஆண்கள் பிரிவில் யாழ். இந்துக் கல்லூரியைச் சேர்ந்த ஆர்.விரோசன் முதலாம் இடத்தையும், ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த கே.கயானன் இரண்டாம் இடத்தையும், கொக்குவில் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த எஸ்.சிவதனுசன் மூன்றாம் இடத்தையும், ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த ரி.அபினாஸ் நான்காம் இடத்தையும், எஸ்.கோபிதன் ஐந்தாம் இடத்தையும் பெற்றனர்.

18வயது ஆண்கள் பிரிவில் கொக்குவில் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த வி.கயேந்திரன் முதலாம் இடத்தையும், ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த ஆர்.லோயிதன் இரண்டாம் இடத்தையும், கொக்குவில் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த என்.யூட்லொறின் மூன்றாம் இடத்தையும், மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த பி.பாசுபதன் நான்காம் இடத்தையும், சாவகச்சேரி இந்துக் கல்லூரியைச் சேர்ந்த ஏ.சுபராஜ் ஐந்தாம் இடத்தையும் பெற்றனர்.

18வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் பிரிவில் ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த ஆர்.மதுசன் முதலாம் இடத்தையும், எஸ்.நிர்மலராஜன் இரண்டாம் இடத்தையும், கே.மகிந்தன் மூன்றாம் இடத்தையும், அனந்தசயன் நான்காம் இடத்தையும், நெல்லியடி மத்திய கல்லூரியைச் சேர்ந்த எஸ்.சஞ்சயன் ஐந்தாம் இடத்தையும் பெற்றனர்.

**பெண்கள் பிரிவு**

6வயது பெண்கள் பிரிவில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த எஸ்.அனன்யா முதலாம் இடத்தையும், ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தைச் சேர்ந்த எஸ்.லக்சியா இரண்டாம் இடத்தையும், யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையைச் சேர்ந்த கே.அபிசாயி மூன்றாம் இடத்தையும், புதுக்குளம் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த எம்.வாசவி நான்காம் இடத்தையும், பொஸ்கோ வித்தியாலயத்தைச் சேர்ந்த கே.சாந்தவி ஐந்தாம் இடத்தையும் பெற்றனர்.

8வயது பெண்கள் பிரிவில் சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையைச் சேர்ந்த என்.நதி முதலாம் இடத்தையும், பொஸ்கோ வித்தியாலயத்தைச் ஏ.ஜரினி இரண்டாம் இடத்தையும், உடுப்பிட்டி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த பி.நதுசா மூன்றாம் இடத்தையும், ஆனைக்கோட்டை றோ.க.த.பாடசாலையைச் சேர்ந்த எல்.டொறின் நான்காம் இடத்தையும், சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையைச் சேர்ந்த எஸ்.அஸ்வினியா ஐந்தாம் இடத்தையும் பெற்றனர்.

10வயது பெண்கள் பிரிவில் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையைச் சேர்ந்த எஸ்.ஆரபி முதலாம் இடத்தையும், பொஸ்கோ வித்தியாலயத்தைச் சேர்ந்த ஐ.தயானி இரண்டாம் இடத்தையும், எஸ்.கிறிஸ்ரினா நதுஜா மூன்றாம் இடத்தையும், உடுப்பிட்டி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த ஏ.லபீனா நான்காம் இடத்தையும், தும்பளை சைவப்பிரகாச வித்தியாலயத்தைச் சேர்ந்த என்.நிவேதா ஐந்தாம் இடத்தையும் பெற்றனர்.

12வயது பெண்கள் பிரிவில் நெல்லியடி மத்திய கல்லூரியைச் சேர்ந்த பி.செம்பூவினி முதலாம் இடத்தையும், அருணோதய கல்லூரியைச் சேர்ந்த யு.கம்சாயினி இரண்டாம் இடத்தையும், வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியைச் சேர்ந்த யு.கம்சா மூன்றாம் இடத்தையும், கொக்குவில் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த கே.திலக்சனா நான்காம் இடத்தையும், மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையைச் சேர்ந்த எம்.வைஸ்ணவி ஐந்தாம் இடத்தையும் பெற்றனர்.

14வயது பெண்கள் பிரிவில் மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையைச் சேர்ந்த பி.யோதினி முதலாம் இடத்தையும், வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையைச் சேர்ந்த எஸ்.நிரூபி இரண்டாம் இடத்தையும், ஆர்.மாதங்கி மூன்றாம் இடத்தையும், மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையைச் சேர்ந்த ஏ.விஸ்ணுயி நான்காம் இடத்தையும், ஆர்.சாகித்தியா ஐந்தாம் இடத்தையும் பெற்றனர்.

16வயது பெண்கள் பிரிவில் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையைச் சேர்ந்த எல்.லாவண்யா முதலாம் இடத்தையும், யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையைச் கே.தேனுஜா இரண்டாம் இடத்தையும், உடுப்பிட்டி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த ஏ.லபீனா, எஸ்.சுமித்திரா மூன்றாம் இடத்தையும், மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையைச் சேர்ந்த ஏ.ஆதித்தியா நான்காம் இடத்தையும், உடுப்பிட்டி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த கே.யதுஜா ஐந்தாம் இடத்தையும் பெற்றனர்.

18வயது பெண்கள் பிரிவில் யாழ். இந்து மகளிர் கல்லூரியைச் சேர்ந்த யு.சுமித்திராதேவி முதலாம் இடத்தையும், மானிப்பாய் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த எஸ்.பிறேமினா இரண்டாம் இடத்தையும், யாழ் இந்து மகளிர் கல்லூரியைச் சேர்ந்த என்.தனுஸ்பிரியா மூன்றாம் இடத்தையும், வட இந்து மகளிர் கல்லூரியைச் சேர்ந்த ஆர்.பிரபாலினி நான்காம் இடத்தையும், சாவகச்சேரி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த ரி.யதுர்சா ஐந்தாம் இடத்தையும் பெற்றனர்.

18 வயதிற்கு மேற்பட்ட பெண்கள் பிரிவில் மகாஜனக் கல்லூரியைச் சேர்ந்த ரி.மிதுசா முதலாம் இடத்தையும், கே.சஞ்சிகா இரண்டாம் இடத்தையும், வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையைச் சேர்ந்த எஸ்.சிவநீபா மூன்றாம் இடத்தையும், மகாஜனக் கல்லூரியைச் சேர்ந்த எஸ்.சரண்யா நான்காம் இடத்தையும், யாழ். இந்து மகளிர் கல்லூரியைச் சேர்ந்த கே.சாரங்கி ஐந்தாம் இடத்தையும் பெற்றனர். (ம-422)

# ஆஸியின் கொட்டத்தை அடக்கியது நியூஸி.; ஆட்டம் சமநிலையில் முடிய வாய்ப்புள்ளது



ஆஸ்திரேலியா–நியூஸிலாந்து அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் நேற்றைய நான்காம் நாள் முடிவில் ஆஸ்திரேலியா தனது இரண்டாவது இன்னிங்ஸில் 258-2 என்ற நிலையில் உள்ளது.


முதலில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலியா முதலில் துடுப் பெடுத்தாடத் தீர்மானிக்க ஒருநாள் ஆட்டங்களின் பாணியில் அடுத் தடுத்து பவுண்டரிகள் எல்லைக்கு விரைந்து சென்றன. தொடர்ந்து மூன்றாவது முறையாக சதம் கடந்தார் வோர்ணர். கவாயாவும் தனது சதத்தைப் பதிவுசெய்தார். மக்கலம் உள்ளிட்ட எட்டு வீரர்கள் பந்துவீசிப் பார்த்து விட்டார்கள். 254 ஓட்டங் களுடன் வோர்ணரின் இன்னிங்ஸ் முடிவுக்கு வந்தது. வோர்ணர் ஆட்டமிழந்து சிறிது நேரத்திலேயே அணி 500 ஓட்டங்களை எட்டி விட்டது. இதனால் பின்வரிசை வீரர்கள் விரைவாக ஓட்டங்களைக் குவித்து ஆட்டத்தை இடைநிறுத்தவே முனைப்புக் காட்டினர். அதற் கேற்ப இலக்குகளும் சரிந்தன. 559–9 என்ற நிலையில் இருந்த பொழுது ஆட்டத்தை இடை நிறுத்தியது ஆஸி.

பந்துவீச்சில் நியூஸிலாந்து சார்பாக கிறைக் 3 இலக்குகளையும், கென்றி, பிரேஸ்வெல், போல்ட் மூவரும் தலா இரண்டு இலக்குகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து குப்திலின் ஆட்டமிழப்புடன் ஆரம்பத்தில் சிறிது தடுமாறவே செய்தது. 36 ஓட்டங்களுடன் லாதத்தின் இன்னிங்ஸை முடித்து வைத்தார் லையன். தொடர்ந்து களத்தில் நின்று அரைச்சதம் கடந்தார் வில்லியம்சன். நான்காம் நிலை வீரரான ரெய்லரும் நிதானிக்க, மூன்றாவது இலக்குக்காக இணைப்பாட்டம் பலம்பெற்றது. வேகப் பந்து வீச்சுக்கு சாதகமான ஆடுகளம் என்பதனால் ஸ்ராக், கசில்வூட், யோன்சன் மூவரும் பவுன் சர்களாக வீசிக்கொண் டிருந்தனர். எந்தவித பயனும் இல்லை. சதம் கடந்தார் வில்லியம்சன். சிறிது நேரத்தில் ரெய்லரும் சதம் கடக்க இணைப்பாட்டம் இருநூறை எட்டியது. அணியின் ஓட்டம் 352 ஆக இருந்த பொழுது, 166 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் வில்லியம்சன். வோர்ணரின் இரட்டைச் சதத்துக்கு பதிலடியாக நியூஸிலாந்து சார்பாக இரட்டைச் சதத்தை பதிவு செய்தார் ரெய்லர். வோர்ணரின் துள்ளல்களும் ஆஸியின் கொட்டமும் அப்படியே அடங்கின. நியூஸிலாந்தின் பின்வரிசைவீரர்களும் விடுவதாக இல்லை. ரெய்லருடன் சிறிது நேரம் தாக்குப் பிடிக்கவே செய்தனர். அணி 600 ஓட்டங்களை எட்டியது. முச்சதத்தை 10 ஓட்டங்களால் தவறவிட்டார் ரெய்லர். 624 ஓட்டங்களைக் குவித்தது நியூஸிலாந்து.

பந்துவீச்சில் ஆஸ்திரேலியா சார்பாக ஸ்ராக் 4 இலக்குகளையும், லையன் 3 இலக்குகளையும் கசில் வூட், யோன்சன், மார்ஸ் மூவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

65 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் தமது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த ஆஸிக்கு டக்கில் ஆட்டமிழந்து அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தார் போர்ண்ஸ். கடந்த இன்னிங்ஸில் இரட்டைச் சதம் விளாசிய வோர்ணர் 24 ஓட்டங் களுடன் பவிலியனுக்கு திரும்ப ஆஸியை சுருட்டிவிடும் முனைப்பில் நியூஸி. சிமித், வோக்ஸ் இணைப்பாட்டம் பலம் பெற ஆஸ்திரேலியா படிப் படியாக சரிவில் இருந்து மீண்டது. இருவரும் ஆளுக்கொரு சதத்தைப் பதிவு செய்தனர். நாள் முடிவு வரை இலக்குச் சரிக்கப்படாத நிலையில் ஆஸ்திரேலியா 258-2. சிமித் 131 ஓட்டங்களுடனும் வோக்ஸ் 101 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். (ம)



## சர்வதேச தடகளச் சம்மேளனத்தின் அங்கத்துவத்தை இழந்தது ரஷ்யா

அரசின் அனுமதியுடன் ஊக்கமருந்தைப் பயன்படுத்திய சர்ச்சையில் ரஷ்யா சர்வதேச தடகளச் சம்மேளனத்தில் இருந்து நீக்கப்பட்டுள்ளது.

2000ஆம் ஆண்டு தொடக்கம் 2014ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதிக்குள் ரஷ்யாவை பிரதிநிதித்துவம் செய்த வீரர்களில் 90 சதவீதமானவர்கள் அரசின் அனுமதியுடன் ஊக்கமருந்து பயன்படுத்தியமை இரத்த மாதிரிச் சோதனையில் அம்பலமானது.

இதனையடுத்து ரஷ்யாவை ஒலிம்பிக் உள்ளிட்ட எந்தவொரு சர்வதேச தடகளத் தொடரிலும் பங்கேற்க அனுமதிக்கக்கூடாது என்ற கோரிக்கைகள் வலுப்பெற்றன. இதனையடுத்து சர்வதேச தடகளச் சம்மேளனம் தனது உறுப்பு நாட்டு அந்தஸ்திலிருந்து ரஷ்யாவை நீக்கியுள்ளது. (ம)

## சொந்தமாக விமானத்தை வாங்கிய றொனால்டோ






போர்த்துக்கல் உதைபந்தாட்ட அணியின் தலைவரும் ரியல் மட்ரிட் கழகத்தின் நட்சத்திர வீரருமான கிறிஸ்டியானோ றொனால்டோ 19 மில்லியன் யூரோ விலையில் சிறிய விமானம் ஒன்றைச் சொந்தமாக வாங்கியுள்ளார்.

உலகின் பணக்கார உதைபந்து வீரராகக் கருதப்படும் கிறிஸ்டியானோ றொனால்டோ, ‘கல்ப்ஸ்ட்ரீம் ஜி-200’ ரக, 8 முதல் 10 பேர் செல்லக்கூடிய விமானத்தையே வாங்கியுள்ளார்.

உலகத்திலேயே உதைபந்தாட்ட விளையாட்டு மூலம் அதிகம் சம்பாதிக்கும் வீரர்கள் வரிசையில் றொனால்டோ முதலிடத்தில் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## பெடரர் நேர்செற் வெற்றி



சர்வதேச ரென்னிஸ் தரப்படுத்தலில் முதல் எட்டு இடங்களிலும் உள்ள வீரர்கள் பங்கேற்கும் ரென்னிஸ் தொடர் லண்டனில் நடைபெற்று வருகிறது. குறித்த தொடரின் முதல் சுற்றை வெற்றியுடன் முடித்தார் பெடரர்.

தரப்படுத்தலில் இரண்டாம் இடத்தில் உள்ள வீரரான ரோஜர் பெடரர் (சுவிற்ஸர்லாந்து) தனது முதல் சுற்றில் பெர்டிச்சை (செக் குடியரசு) எதிர்கொண்டார். இதில் பெடரர் 6:4, 6:2 என்ற நேர் செற் கணக்கில் வென்றார். இந்த வெற்றியைப் பெற அவருக்கு 65 நிமிடங்களே தேவைப்பட்டது. (ம)

## சாய்னா தோல்வி

**ஆட்டத்தில் சாய்னாவால் வெறும் 39 நிமிடங்கள் மட்டுமே தாக்குப்பிடிக்க முடிந்தது. 1 2:21, 15:21 என்ற நேர் செற் கணக்கில் சாய்னா தோல்வியடைந்தார்.**



சீனாவில் நடைபெற்று வந்த ரென்னிஸ் தொடரின் இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் சாய்னா நேவால் தோல்வியடைந்தார்.

சீனாவில் உள்ள புஸவ் நகரில் நேற்று நடைபெற்ற இந்த இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் சாய்னா நேவால், சீன வீராங்கனையான வீஜ்ரூயியை எதிர்த்து ஆடினார்.

இந்த ஆட்டத்தில் சாய்னாவால் வெறும் 39 நிமிடங்கள் மட்டுமே தாக்குப்பிடிக்க முடிந்தது. இறுதியில் 1 2:21, 15:21 என்ற நேர் செற் கணக்கில் சாய்னா தோல்வியடைந்தார். (ம)



இந்தியா – தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் மூன்றாம் நாளான நேற்றையதினம் கடும் மழை காரணமாக ஒரு பந்தேனும் வீசப்படாத நிலையில் ஆட்டம் கைவிடப்பட்டது. இதனால் 80-0 என்ற நிலையில் இருந்து இன்று இந்தியா துடுப்பெடுத்தாடவுள்ளது. தென்னாபிரிக்கா தனது முதலாவது இன்னிங்ஸுக்காக சகல இலக்குகளையும் இழந்து 214 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. (ம)

# சிறிய தொடர்களையும் விடுவதாக இல்லை
# விம்பிள்டனைக் கைப்பற்றுவதே முக்கிய இலக்கு

## தெரிவிக்கிறார் சரபோவா



சர்வதேச ரென்னிஸ் தொடரில் பெண்கள் பிரிவில் முன்னணி வீராங்கனைகளில் ஒருவராகத் திகழ்பவர் ரஷ்யாவின் மரிய சரபோவா. நடப்பு வருடத்தில் இவர் பெரிதாக கிண்ணங்களைக் கைப் பற்றவில்லை. இவரின் போட்டியாளராகக் கருதப்படும் செரீனாவே அதிக கிண்ணங்களைக் கைப்பற்றினார். இதற்கு அவ்வப் பொழுது சரபோவாவுக்கு ஏற்பட்ட காயங்களும் காரணமாகின. இந்த நிலையில் அடுத்த வருடத்தில் பெருமளவான கிண்ணங்களைக் குவிக்க விரும்புவதாகவும் குறிப்பாக பழைமை மிகுந்த தொடரான இங்கிலாந்தின் விம்பிள்டனைக் கைப்பற்ற தீவிரம் காட்டவுள்ளதாகவும் சரபோவா தெரிவித்துள்ளார்.

நடப்பு வருடத்தின் தொடர்கள் அனைத்தும்கிட்டத்தட்ட முடிவடைந்துள்ள நிலையில் அடுத்த வருடத் திட்டம் தொடர்பாக சரபோவா தெரிவித்ததாவது - 'நடப்பு வருடத்தில் ஒன்றும் சாதிக்கவில்லை என்று ஒருபோதும் சொல்லமாட்டேன். இந்த வருடம் எனக்கு ஓரிரு அற்புதமான கிண்ணங்களைத் தந்துள்ளது. ஆனால் எதிர்பார்த்த அளவுக்கு நான் சிறப்பாகச் செயற்படவில்லை. இதற்கு முக்கிய காரணம் எனக்கு அவ்வப்பொழுது ஏற்பட்ட காயம். முடிவடைந்துள்ள பத்து மாதங்களில் கிட்டத்தட்ட நான்கு மாதங்கள் ஓய்வில் இருந்துள்ளேன். இதுவே நான் அதிகப்படியான கிண்ணங்களைக் கைப்பற்றாமைக்கு காரணம். ஆனால் தற்பொழுது உடல்நிலை மிகவும் சிறப்பாக உள்ளது.

அடுத்த வருடத்தில் அதிகப்படியான கிண்ணங்களைக் கைப்பற்றி தரப்படுத்தலில் முதலாவது இடத்துக்கு வருவதே எனது பிரதான இலக்காகஉள்ளது. முதலிடத்தைக் கைப்பற்றுவதெல்லாம் அவ்வளவு கடினம் என்றல்ல. சர்வதேச அந்தஸ்து பெற்ற ரென்னிஸ் தொடர்களில் மூன்றைக் கைப்பற்றினால் போதும் செரினாவை வீழ்த்தி விடலாம். அதிலும் பழைமை வாய்ந்த தொடராகவும் ரென்னிஸின் கௌரவமாகவும் கருதப்படும் விம்பிள்டன் தொடரைக் கைப்பற்ற முனைப்புக் காட்டுவேன். தவிர இந்த வருடம் சிறிய தொடர்களில் இருந்து விலகியிருந்தேன். ஆனால் அடுத்த வருடம் சிறிய தொடர்களைத் தவிர்க்க மாட்டேன். ஏனெனில் அவையும் புள்ளிகளைத் தரக்கூடியவை.' என்றார். (ம)

## நிசிகோரியைப் பந்தாடிய ஜோகோவிக்



சர்வதேச ரென்னிஸ் தரப்படுத்தலில் முதல் எட்டு இடங்களிலும் உள்ள வீரர்களுக்கு மட்டுமாக ரென்னிஸ் தொடரொன்று நடத்தப்படுவதுண்டு. இந்த வருடத் துக்கான தொடர் இங்கிலாந்தில் நடைபெற்று வருகிறது. குறித்த தொடரின் முதல் சுற்றில் ஜோகோவிக் நேர்செற் கணக்கில் மிக இலகுவாக நிசிகோரியை வீழ்த்தினார்.

நடப்புச் சம்பியன் என்ற அந்தஸ்துடன் களமிறங்கிய ஜோகோவிக், சீன வீரரான நிசிகோரியை 6-1, 6-1 என்ற நேர் செற்களில் வீழ்த்தினார்.

இவர்கள் இருவரைத்தவிர பெடரர் (சுவிற்சர்லாந்து), பெர்டிச் (செக்குடியரசு), முர்ரே (இங்கிலாந்து), வாவ்ரிங்கா (சுவிற்சர்லாந்து), ரபேல் நடால் (ஸ்பெயின்), டேவிட் பெரர் (ஸ்பெயின்) ஆகியோர் இந்தத் தொடருக்காக தகுதி பெற்றுள்ளனர். (ம)

# பரிஸ் தாக்குதலுக்கு ரொனால்டோ கண்டனம்

பரிஸ் நகரில் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகளால் நடத்தப்பட்ட தாக்குதலுக்கு ரொனால்டோ தனது கண்டனத்தை தெரிவித்துள்ளார்.

'என்னால் நம்ப முடியவில்லை. ஏன் இவ்வாறு செய்கிறார்கள். பரிஸில் சாவடைந்தவர்களுக்கும் அவர்கள் குடும்பத்தவர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கல்கள். பரிஸிற்காக செபியுங்கள்.' ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளால் பரிஸ் நகரில் இடம்பெற்ற தாக்குதலைக் கண்டித்து ரொனால்டோ தனது முகப்புத்தகத்தில் பதிவு செய்துள்ளார். (ம)

## இங்கிலாந்து - பாகிஸ்தான் மூன்றாவது ஆட்டம் இன்று

இங்கிலாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான மூன்றாவது ஒருநாள் ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது.

ஏற்கனவே நடைபெற்று முடிந்த முதல் இரண்டு ஆட்டங்களில் முதலாவது ஆட்டத்தில் பாகிஸ்தானும் இரண்டாவது ஆட்டத்தில் இங்கிலாந்தும் வெற்றிபெற்றுள்ளன. இதனால் தொடர் 1-1 என்று சம நிலையில் உள்ளது. தொடரில் மொத்தமாக நான்கு ஆட்டங்கள் என்ற காரணத்தினால் ஓர் அணி இரண்டு ஆட்டத்தில் வெற்றிபெற்றால் தனது இருப்பை உறுதிப்படுத்த முடியும். இதனால் இன்றைய ஆட்டத்தில் வெற்றிபெறும் அணியிடம் இருந்து கிண்ணம் செல்ல வாய்ப்பில்லை. எனவே இந்த ஆட்டம் கிட்டத்தட்ட ஓர் வாழ்வா? சாவா? ஆட்டம் போன்று அமையவுள்ளது. இலங்கை நேரப்படி பிற்பகல் 4.30 மணிக்கு ஆட்டம் ஆரம்பமாகும். (ம)



# ஐரோப்பிய உதைபந்துத் தொடர் திட்டமிட்டபடி நடைபெறும்


பிரான்சில் ஐ.எஸ். தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதன் காரணத்தினால் அடுத்த ஆண்டு ஜுன் 10ஆம் திகதி முதல் ஜுலை 10ஆம் திகதி வரை பிரான்ஸில் நடத்தத் திட்டமிட்ட ஐரோப்பிய உதைபந்துத் தொடர் திட்டமிட்டபடி நடைபெறுமா? என்ற கேள்வி எழுந்தது. ஆனால் திட்டத்தில் எவ்வித மாற்றமும் இல்லையென்றும் நூறு சதவீத பாதுகாப்புடன் தொடர் நடைபெறும் என்றும் பிரான்ஸ் உதைபந்து சம்மேளனம் அறிவித்துள்ளது.

குறித்த. விடயம் தொடர்பாக பிரான்ஸ் உதைபந்து சம்மேளனம் விடுத்துள்ள அறிக்கையில் - 'பலத்த பாதுகாப்புடன் ஐரோப்பிய உதைபந்துத் தொடர் நடைபெறும். தொடரைக் கைவிட்டாலோ அல்லது இடம் மாற்றினாலோ அது தீவிரவாதிகளுக்குக் கிடைத்த வெற்றியாகிவிடும். எனவே இதற்கு பிரான்ஸ் ஒருபோதும் இடம்கொடுக்காது. பரிஸ் சென் பிரான்ஸ் (தாக்குதல் நடத்தப்பட்ட மைதானம்) மைதானத்திலும் ஆட்டங்கள் நடைபெறும்' என்றுள்ளது. (ம)

## 111 வருட சாதனையை முடியடித்தார் ரெய்லர்

ஆஸ்திரேலிய மண்ணில் அதிக ஓட்டங்களைக் குவித்தவர் என்ற சாதனையை நிலைநாட்டியுள்ளார் நியூசிலாந்தின் முன்னணி வீரரான ரெய்லர்.

நடைபெற்றுவரும் ஆஸ்திரேலியா - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் ரெய்லர் 290 ஓட்டங்களைக் குவித்தார். ரெய்லருக்கு முன்பாக 1903ஆம் ஆண்டு சிட்னியில் நடைபெற்ற டெஸ்ட் ஆட்டத்தில் இங்கிலாந்து வீரர் பாஸ்டர் எடுத்த 287 ஓட்டங்களே அந்நிய நாட்டு வீரர் ஒருவர் ஆஸ்திரேலிய மண்ணில் எடுத்த அதிகபட்ச தனிநபர் ஓட்டங்களாக இருந்தது. 111 வருடங்களின் பின்னர் தற்பொழுது ரெய்லர் அதை முறியடித்துள்ளார். மட்டுமல்லாது ஆஸ்திரேலியாவில் பதியப்பட்ட (ஆஸ்திரேலிய வீரர்களுடன் சேர்த்து) நான்காவது தனிநபர் உயர் ஓட்டங்களாவும் இது உள்ளது. (ம)



முகாமையாளர் தேவை
சாவகச்சேரியில் அமைந்துள்ள நிறுவனத்திற்கு தமிழ், ஆங்கிலம், சிங்களம் மும்மொழிகளும் தெரிந்த முகாமையாளர் உடனடியாகத் தேவை. அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
தொடர்பு:
076 877 4489,077 444 0349

விஷேட கருத்தரங்கு
22 ஆம் திகதி நடைபெறவுள்ள
கலாசார உத்தியோகத்தர் போட்டிப் பரீட்சை
காலம்
17/11/15 (செவ்வாய்) (9.00 -4.00)
21/11/15 (சனி) PM
விரிவுரைகள்
P. உமாசங்கர்
P. கமல்தாசன்
நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
T.P : 0774696695

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.11.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.